

'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

# தெய்வம் கொடுத்த வரம்

480 — A/242

★

தமிழில்

புதுமைப் பித்தன்

★

காமராசர் பல்கலைக்கழக ... அவ்வை ...

ஸ்டார் பிரசுரம்

திருவல்லிக்கேணி : : சென்னை—5

முதற் பதிப்பு—செப்டம்பர். 1951

அன்னை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 395
நன்கொடை எண்: 395

விலை ரூ. 1—8—0

அன்னை
தி.க. சண்முகம் நூலகம்.

STAR PUBLICATIONS
Triplicane : : Madras-5

அச்சிட்டது: நவபாரத் பிரஸ் சென்னை-3.

# பதிப்புரை

புதுமைப் பித்தன் சிறந்த சிறு கதை எழுத்தாளர். அவருக்கு ஈடு இணையாக உலகிலேயே மிகச் சிலரைத்தான் குறிப்பிட முடியும். மக்களின் வாழ்வை, உணர்வை, சுக துக்கங்களைப் பிரதிபலிக்கும் கதைகளை அவர் தமிழ் நாட்டுக்குத் தந்தார்.

அது போன்றே பிறநாட்டு இலக்கிய ஆசிரியர்களின் சிறு கதைகளையும் தமிழ் மக்கட்களிக்க முன் வந்தார். அதன் பயன்தான் இந்நூல்.

இந்நூலில் பெரும்பாலும் பேச்சு வழக்கையே கையாண்டு கதை சொல்லும் முயற்சியில் ஈடுபட்டு அதில் நல்ல வெற்றியும் கண்டிருக்கிறார் புதுமைப் பித்தன்.

உள்ளே:—

ஒருவனும் ஒருத்தியும்
அந்தப் பையன்
தாயில்லாக் குழந்தைகள்
தெய்வம் கொடுத்த வரம்
யுத்த தேவதையின் திருமுக மண்டலம்
கிழவி
ஆட்டுக்குட்டி தான்
சகோதரர்கள்
பலி
இந்தப் பல் விவகாரம்

★

அழகப்ப
தி.கர்சண முதல்வரை
தமிழியல்துறை.

பிரான்ஸ்

# ஒருவனும் ஒருத்தியும்

## (லூயி கய்ல்லூ)

மச்சுப் படிக்கட்டு முற்றத்தில் இறங்கியது; அங்கே, அதாவது கடைசிப்படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டு, அன்று காலே முழுவதும் அவள் அழுது கொண்டிருந் தாள். அவள் ரொம்பவும் நெட்டை, ஒற்றை நாடி; முப் பத்தி ஐந்து அல்லது நாற்பது வயது இருக்கும். நீண்டு தொங்கும் குதிரை மூஞ்சி; அவள் தேகமே கோளாறு பிடித்த உடம்பாகத் தென்பட்டது. அவள் வாய் விட்டுத்தேம்பித்தேம்பி அழுதாள்; மனத்துக்குள்ளாகவே முனகினள்; சுற்றிலுமுள்ளவர்களே வைகிற மாதிரி. அண்டை வீட்டுக்காரர்கள் பல தடவை அவள் பக்கம் போய் புத்தி சொல்லிப் பார்த்தார்கள். "வீட்டுக்குள்ளே போ; இப்படி அமக்களம் பண்ணுதே; இல்லாட்டா,-இப் படி அழுது கொண்டிருந்தால், உனக்குத் தலேவலி வரும்; அதனலே என்ன ஆகப் போகிறது?" இந்த வார்த்தை கள் எல்லாம் அவள் காதில் பட்டதாகத் தெரியவில்லே. 'இந்தக் கிழட்டுப் பிணங்களுக்கு வேறு வேலே இல்லே? என் இஷ்டப்படி செய்வேன்; இவர்களுக்கென்ன; எல்லாத் தையும் ஒரேயடியாகத் தொலேச்சு முழுகிருந் தேவலே' என்று நினேத்தாள்.

சில சமயங்களில் தலேயைக் கிராதியில் சாய்த்துக் கொண்டாள்; தூக்கம் பிடிக்காத பிரயாணி தூங்க முயலு வது மாதிரி. சில சமயம் முகத்தைக் கை வைத்து மூடிக் கொண்டு மனங்குமுறி அழுதாள்; ஓடைத் தண்ணீர்

மாதிரி விரல் வழியாகக் கண்ணீர் பீறிட்டுக் கொண்டு வந்தது. சில சமயம் வாய் விட்டு ஏங்கினாள். சமயா சமயங்களில் மௌனப் பேய் பிடித்த மாதிரி வெறிச்சோடிய கண்களுடன் உட்கார்ந்திருந்தாள். பிறகு கன்னத்தை உள்ளங்கையில் ஏந்தி முழங்கையை முழங்காலின் மேல் ஊன்றி பிடித்து வைத்த சிலை மாதிரி வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள். அவர் ஆபீசிலிருந்து வரும் போது அவரைத் திக்பிரமையடிக்க வைக்க இந்த மாதிரி உட்கார்ந்திருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அவள் தன் மனத்திற்குள் நினைத்து நினைத்துப்பார்த்துக் கொண்ட வஞ்சத்தின் ஒரு அம்சமே இது. சண்டை இந்த மாதிரி திரும்பிய நிமிஷத்திலேயே இந்த நினைப்பு அவளுக்கு உதித்தது. எப்படியானாலும், ஞாபக சக்தியைக் கொஞ்சம் அவள் உபயோகித்தால் போதும். மாடிப்படிக்கட்டில் வந்து உட்கார்ந்து கொள்வதும் இது தான் முதல் தடவை என்பதல்ல. இது அவனுக்கு வெறி யூட்டியது; அது தான் அவள் விரும்பியதும். எப்படி இருந்தாலும் வேறு மாதிரியாக நடந்து கொள்ள அவளுக்கு வழியில்லை. ஆமாம். விட்டு விட்டு ஓடிப் போய் விடுவதாகப் பயமுறுத்துவார்; நன்றாகப் பிய்த்து வாங்கி விடுவதாகப் பயமுறுத்தவும் கூடும். கோபாவேசத்தில் வெளி வரும் பயமுறுத்தல்களின்படி யெல்லாம் செய்ய மாட்டார் என்பது நிச்சயமாகத் தெரியும். அவர் என்ன செய்தாலும் விட்டு விட்டு ஓடிப் போகமாட்டார்; அடிக்கவே மாட்டார்; நித்தியம், நித்தியம் இவர்கள் இப்படித்தான்; இதே வழியில் தான் போய்க் கொண்டிருப்பார்கள். ஒரு வேளை அது தான் அவளை இப்படித் தறிகெட்டுக் கொதிக்கும்படி செய்திருக்கலாம்.

மாடிப்படி வழியாகப் போகிறவர்கள், வருகிறவர்கள் அவள் அருகாமையில் நெருங்குகிறபோது ஆச்சரியத்துடனே அனுதாபத்துடனே தோளை குலுக்கிக் கொண்டு சென்றார்கள். அவள் அவர்களைப் பார்த்ததாகக் கூடக்காட்டிக்கொள்ளவில்லை. வழி விட்டு விலகுவது போலப்பாவனை கூடச்செய்ய வில்லை. யாராவது அவள் பக்கம் விரைவாக மடமடவென்று சென்றால், போகும்போது கைகளைமிதித்து

விட்டால்,— அப்படியேதான், பிடித்து வைத்த சிலைமாதிரி தான் உட்கார்ந்திருப்பாள். ஒருவேளை, அவர்கள் அப்படி மிதிக்கக்கூடாதா என்று கூட அவள் விரும்பியிருக்கக் கூடும். மீண்டும் யாரோ ஒருவர் 'எத்தினி நேரமாச்சு, மத்தியானமாச்சே; உள்ளே போகப்படாதா?' என்றார். அவள் பதில் சொல்லவில்லை. ஏன் பதில் சொல்ல வேண்டும்? பதில் சொல்லிக் கொண்டிருக்கவா அவள் அங்கே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். தன் நிலை பற்றி வருத்தப்பட்டுக் கொண்டிருக்க அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறாளா? அப்படி அல்ல. அவர்களுடைய இரக்கத்தில் அவளுக்குப் பொருளே இல்லை. அவள் அங்கே உட்கார்ந்த காரணம் எல்லாரும் பார்க்கவேண்டும் என்பதுதான்; அவளை எந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டார் என்று அவர்கள் தெரிந்து கொள்ள; அவளை எவ்வளவு படுத்துகிறார் என்று எல்லோரும் பார்க்க; எல்லோரும் பார்த்து விட்டார்கள், அவர்களுக்கும் தெரியும் என்பதை அவர் தெரிந்து கொள்ள. அதுதான் அவள் விரும்பியதெல்லாம்; அதாவது அந்த நிமிஷத்தில் விரும்பியதெல்லாம். அதுதான் அவளுடைய யோசனையில் முதல் அம்சம். அவர்கள் என்ன வார்த்தை சொன்னாலும் அனுதாபப்பட்டோ இரக்கப்பட்டோ எந்த வார்த்தை சொன்னாலும் அவள் தேம்பித் தேம்பி அழுதாள்; அந்தத் தலையைச் சாய்க்க இன்னும் ஒரு நல்ல இடம் பார்த்தாள்; தலைக்கு என்ன சீவல் வேண்டிக்கிடக்கிறது?

சண்டை அதிகாலையில் ஆரம்பமாயிற்று. காலை எட்டு மணி முதலே அவள் அந்தப் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அந்த இடத்தை விட்டுப் போக வேண்டும் என்று தூண்ட அவளுக்கு வேறு நினைப்பே எழவில்லை. மணியும் பகல் பன்னிரண்டு அடித்தது. இன்னும் சில நிமிஷங்களில் அவர் வீட்டுக்குத் திரும்பலாச்சு. என்ன சொல்லுவார்; முந்தி மாதிரி, ஒரு வேளை ஏறெடுத்துக்கூடப் பார்க்காமலே மாடிக்குச் செல்வார். ஆனால் வீட்டுக்குள்ளே போய் தனியாக எவ்வளவு நேரந்தான் உட்கார்ந்து கொண்டிருப்பார். போன தடவை

பதினைந்து நிமிஷம் கூட அவருக்கு அங்கே இருப்புக் கொள்ள வில்லை. அவளைத் தேடிக் கொண்டு வந்தார். இன்றைக்கும் அதே மாதிரி தான் நடக்கப் போகிறது.

அவர் கொதித்துக் கொண்டு கதவைப் படால் என்று சாத்திக் கொண்டு, 'இந்த மாதிரிப் பைத்தியக் காரத்தனத்தை இனி மேல் சகிக்க முடியாது, இது தான் கடைசித் தடவை, கடோசித் தடவை' என்று கருவிக் கொண்டு போனார். ஆனால் ஆபீசில் கோபம் ஆறியிருக் கும்; நினைத்துப் பார்க்கப்புத்தி தெளிந்திருக்கும்.

முற்றத்துக் கதவு திறந்தது; அவருடைய காலடிச் சத்தம் அவளுக்குத் தெரிந்தது. சதை கொஞ்சங்கூட ஆடவில்லை. பிடித்து வைத்த சிலை மாதிரி. அவள் உணர்வு முழுவதும் எத்தனையோ முறை கேட்டுப் பழ கிய அந்தக் காலடிச் சத்தத்தில் கவிந்து நிலைபெற்றது; தோற்றத்தில் புற உலக விஷயங்களுக்குச் செவிடாகி, உணர்வற்றிருப்பது போலத்தென்பட்டாள். சத்தம் நெருங் கியது; சீக்கிரத்தில அவர் கண்ணில் படுவார். இருந்தா லும் சலனமற்று இருந்தாள்; தலை சிறிது கிராதிக் கம்பி யில் சாய்ந்தபடி, கண்களை அரை வாட்டத்திற்கு மூடிக் காத்திருந்தாள்.

ஏறக்குறைய அவள்மீது விழுந்து விட்டார்; திடுக் கிட்டு நடுங்கிப் பின் புறமாகப் பாய்ந்தார்; பார்வைக்கு அப்பால் மறைந்தார். எவ்வளவு தெளிவாகத்தான் அவ ருக்குத் தெரிந்திருந்தாலும், அவருக்கு எதிர் பார்க்கத் தெரியாது. இந்த முறையும் எதிர் பாராத சமயத்தில் அவரைச் சிக்க வைத்தாள்.

அதிர்ச்சியில் மேல் மூச்சு வாங்கியது சிறிது நிதா னப்பட்டது; க்ஷணம் சிறிது கண்களை மூடினார். அவர் கொஞ்சம் கனத்த சரீரி; நல்ல 'கருக்காக' மீசையும் உண்டு. வயது ஏறக்குறைய ஐம்பது. உடை ஏதோ ஒரு வற்றல் - குமாஸ்தா ரகத்தில். தலையில் பௌலர் தொப்பி அணிந்திருந்தார்.

'இங்கே என்னபண்றே!' என்று முணு முணுத்தார்; குரல் வரட்சிக் கோபத்தைக் காட்டவில்லை. அவள் பதில் சொல்லவில்லை.

அவருக்கு அச்சம் பிடித்தாட்டியது; இதயத்து ரத்தத்தை வரள வைத்தது. குடையைப் பிடித்திருந்த கை நடுங்கியது. எல்லை கடந்த தலை குனிவு, அவமானம், தன்மீது ஏற்பட்ட ஒரு துச்சமான நினைவு அவன்மீது படர்ந்துகவிந்தது. அவன் உணர்வில் தயை இடம்பெறவில்லை. அசையாமல் நடையருகில் நின்றுன். வெளிப்பக்கமிருந்து வெளிச்சம் விழுந்ததினுல், முகத்தின் பாவனை அவளுக்குத் தெரியவில்லை. குடை தூக்கிய கருத்த கனத்த உருவமாகவே அவளுக்குத் தென்பட்டது.

அவன் மறுபடியும் மெதுவாகக் கேட்டான்: 'என்ன அங்கே பண்றே?'

அவன் சொல்லுவது ஏதோ ஒரு குழந்தையிடம் பேசுவது போல இருந்தது.

அவள் ஏறெடுத்துப் பார்த்தாள்; பார்வை பதியவில்லை; பார்வை அவனையும் அவனைத் தாண்டியும் ஊடுருவிப் பாய்ந்தது. அந்த லயிக்காத கண்களின் ஈட்டிக்குத்து அவன் கண்களை மறுபடியும் திருப்பிக் கொண்டு கைகளை உதறிக்கொள்ளச் செய்தது.

அவனது கைக்குடை ஓட்டை உடசல் இரும்பு மாதிரி லொட பட சத்தத்துடன் கீழே விழுந்துருண்டது.

'இங்கே எத்தினி நேரமாத்தான் உட்கார்ந்திருக்கே? வெகு நேரமாகத்தான் உட்கார்ந்திருக்க வேண்டும். புழுக்கச்சி முண்டெ' என்று மனசில் எண்ணிக்கொண்டான், தோளைக் குலுக்கிக் கொண்டான்.

அப்படியா...ஓய்ச்சல் ஒழிவு கிடையாதா......காலம்பர பூராவும்......அவனும் அன்னிக்குக் காத்தாலே போட்டுண்ட சண்டெயப்பத்தி நெனச்சுத்தான் பார்த்தான்.... தன் மேலும் கொஞ்சம் பழிதான் என்று வருத்தப்பட்டுக் கொண்டான்......ஆனால் அது தீந்து போயிருக்கும்னு அவன்......

'நீ அங்கேயேதான் உக்காந்திருக்கப் போரியா?'

இதுக்கும் பதில் இல்லை.

குரல், கோபம் அவனை ஆட்படுத்துகிறது என்பதைக் காட்டியது; ஜாக்கிரதையாகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். ஏனென்றால் அந்த ஆவேசம் வந்து சென்று விட்டால் அப்புறப் அடித்துப் போட்ட மாதிரி அசதி.

'சரி வா......மேலே போவோம்......என்ன அசட்டுத் தனம்' என்று முணு முணுத்தான்.

'அசடு' என்ற அந்த வார்த்தை மறுபடியும் கண் ணீட்டி கொண்டு குத்துப்படும்படி செய்வித்தது. அவ ளிடமிருந்து நிசாரமான ஏக்கம் பிறந்தது. 'என்ன பிழைப்பு ?' 'என்னத்திற்கு இந்தப் பிழைப்பு ?' இந்தச் சிக்கலை அடியோடு தீர்த்துக்கட்டி விட உறுதி கொண் டவள்போல அவனை ஊடுருவிப் பார்த்தாள். 'இந்த அடம் ஆகாது' என்பது போலத் தலையை அசைத்தாள்.

'சரி சரி உனக்கென்னதான் வந்திருக்கு ?'

இப்படிப் பேசவேண்டும் என்று அவன் நினைக்க வில்லை; ஆனால் நடந்தது நடந்தாச்சு; இனிமேல் உள் ளது; இதுவோ எதுவோ.

அவன் மச்சுப்படி ஏற ஆரம்பித்தான்; உடனே சடக் கென்று திரும்பினான்.

அவள் திடுக்கிட்டாள்.

'குழந்தெ'

அவன் குனிந்து கொண்டு கேட்டான். அவன் சுவா சம் அவள் தலையில் அலையாடியது. குழந்தெ ?

அடெதப்பத்தி அவ கவலையே படலே. குழந்தையை மறந்து விட்டு இருப்பதும் அவள் போட்ட 'பிளானில்' ஒரு அம்சம். ஆனா அது மனசை இவ்வளவு படுத்தும் என்று அவள் நினைக்கவில்லை.

'அவளெ என்ன செஞ்சே ?'

அடிக்கப் போகிறார் என்று நினைத்தாள். ஆசைப் பட்டிருந்தாலும் அவளால் பதில் சொல்ல முடிந்திருக்

காது. அந்தக் குழந்தை......அது மனசை இவ்வளவு வேதனை பண்ணும்னு அவ நெனக்கலெ.

'வாயைத் திறந்து பதில் சொல்லப் போறியா இல்லியா?'

கோபம் கை மீறியது. உறுதியோடு மறுபடியும் இறங்கி வந்து அவள் முன் நின்று கொண்டான். அவள் தலையைக் கீழே போட்டுக்கொண்டாள்.

"நீயோ, ஓம் மூஞ்சியோ"

கையிலிருந்த குடையை சுவரில் சாத்தினன். தொங்கப் போட்டு மறைத்து வைத்துக் கொண்டிருந்த அவளுடைய முகத்தைத் தடவிக்கொடுக்கக் குருட்டுத்தனமாகக் கைகளை நீட்டினன்.

'ஏண்டி என்னை இப்படிச் சித்ரவதை செய்து கொல்லறே; இதெ எப்பத்தான் விட்டுத் தொலைக்கப் போறே...........அட கர்மமே' என்று மெதுவாக நயந்தான்.

அவனுக்கு மன உளைச்சல் சொல்ல முடியாதிருந்தது. அன்றொரு நாள் அவள் வீட்டை விட்டு ஓடிப்போன விவகாரம் அவன் ஞாபகத்துக்கு வந்தது. அவளைத் தேடாத இடம் எல்லாம் தேடி அலைந்த அலைச்சல்......... ஆற்றிலோ கிணற்றிலோ விழுந்துதொலைத்திருப்பாளோ என்று நினைத்துக்கொண்டு.........

'வாயைத் தொறந்து பேசேண்டியம்மா...........'

அவளுடைய நாடியைத் தாங்கினன். அவள் உதறித் தளளாமல் பேசாமலிருந்தாள். அவளுடைய முக வாய்க் கட்டையைத் தாங்கி முகத்தை நிமிர்த்தினன். அவனுக்கு மனசு இளகி வெள்ளப் பிரவாகமாக எடுத்தது.

'ஏன் இப்பிடி இருக்கே?' என்று கேட்டான். அவள் சற்று நிமிர்ந்தாள். உதடுகள் அழுகை முட்டப் பட பட வென்று துடித்தன. அவள் சற்றுக் குனிந்தாள்

'எனக்குத் தெரியாது' என்று அவள் சொன்னதாகவா அவன் காதுக்குக் கேட்டது ?

'என்ன சொன்னே ?'

'ஒண்ணுமில்லே'

திடீரென்று தன்மைகள் யாவும் மாறின.

'ஒன்றுமில்லையா.........? நிஜமா? பின்னையேன்? பின் ஏன் இப்படி அழும்பு பண்றே. இன்னிக்குக் காத்தாலே இருந்து என்ன செஞ்சுண்டிருக்கே தெரியுமா ? குழந்தையை என்ன பண்ணினே ?'

கோபாக்கிருந்தகை அவன் உறுமிக்கொண்டு அவளுடைய தோளைப் பிடித்துக் குலுக்கினான். எதிர் பாராத சமயத்தில் இந்தக் கோபப் பேய் அவனையே இப்படி ஒரு உலுப்பு உலுப்பி விடும்.

இந்த கர்ஜனைகள், வருத்தங்கள், இறக்கத்திலிருந்து நயத் தன்மை அதிலிருந்து மிருகத் தன்மை யாவும் அவர்களுடைய சண்டைகளின் பரிவாரங்கள்; அவை அடித்துப் போட்ட மாதிரி, சோர்ந்து கிடக்கப் பண்ணி விடும்.

அவளுக்கு வலிக்கப் பண்ணி விட்டான்; அவள் எழுந்து தூர விலகிப் போய் நின்று, 'அட மிருகமே' என்றாள்.

மாடியில் எங்கோ ஒரு தட்டிலிருந்து குழந்தை தங்களிடம் இருப்பதாக ஒரு குரல் கொடுத்தது.

'குழந்தை எங்களோடு இருக்கிறது. நீங்க கவலைப்பட வேண்டாம்: எங்களோடே சாப்பிடும்' என்றது அந்தக் குரல்.

மனநிம்மதி பிறந்தும் அவனுக்கு உடனே பதில் சொல்ல முடியவில்லை. அண்டை வீட்டுக்காரர்கள் எல்லாம் கூடி நின்று கேட்கிறார்கள், பார்க்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள..............

'கேட்டியா ?' என்று கத்தினான்.

'எனக்குச் செவியடைச்சுப் போகல்லே'

அவள் சாத்தியிருந்த குடையை சூத்திரப் பாவை இயங்குவது போல கையில் எடுத்துக்கொண்டாள்.

'சனியன்கள் எல்லாம் ஒரே முழுக்காத் தொலைஞ்சாத் தேவலை : சகிக்க முடியலே'

அவள் திரும்பினாள். முகத்தில் அழுகைக் குறி தெரிந்தது. ஆனால் இமையில் பொட்டு ஜலம் இல்லை.

'சகிக்கலே, என்ன சகிக்கலே?' என்றாள் அவள். அவனுடையமண்டைவெடித்து விடும்போலிருந்தது. அவனும் மௌன விரதம் பூண்டவன் போலப் பேசாதிருந்தான்.

'சொல்றதைச் சொல்லுங்களேன், அப்பறம்?'

'எனக்கு இந்தச் சண்டை போடரது சகிக்கலே'

'அவ்வளவுதானா?'

'ஆமாம்'

'அப்படியானா சண்டைக்கெல்லாம் நான்தான் காரணமாக்கும்?' என்றாள் அவள்.

'இல்லை : அந்தக் கறிக்கடைக்காரப் பயல்'

அவனுடைய பதில் அவனுக்கே கோமாளித்தனமாக இருந்தது. வாய் விட்டுச் சிரிக்க் வேண்டும் போலிருந்தது. ஆனால் அந்த விருப்பம் உடனே அகன்றது. ஏனென்றால் அவள், 'என்கஷ்டம் உங்களுக்கு எங்கே தெரியப் போறது?' என்றாள்.

அவள்தான் அப்படியே இல்லையே; அதுதானே அவளுக்குப் பிரமாதமாகத் தெரிந்தது. இருந்தாலும்.........

'அதற்குக் காரணமில்லியே?'

அவள் ஏங்கினாள், 'தெரியும் தெரியும்' என்று முணுமுணுத்தாள்.

அவர்களிடை மௌனம் திரையிட்டது. அமைதி நீடித்தது. நீடித்தது......அவர்கள் மேல் மாடியில் நின்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவள் மறந்துவிட்டாள் : தனக்கு ரொம்பப் பசிக்கிறது, அடுப்பில் பூனை,

படுத்துக் கிடக்கிறது என்பதையும் அவள் மறந்து விட்டாள். அப்படி இருந்தும் சண்டை என்ற மோஹலாகிரி அவளை மடியைப் பிடித்து இழுத்து விட்டது. அவளும் வலைக்குள் சிக்கினாள்: விழுகிறோம் என்று தெரிந்து கொண்டே சிக்கினாள். தன் கஷ்டத்தையும் தன் பாசத்தையும் எடுத்துப் பேச ஆரம்பித்தாள். அவன் மனத்தில் நிச்சயம் ஏற்படுத்த ஆசைப் பட்டாள்.

'இதெல்லாம் எவ்வளவு அசட்டுத்தனம்: இத்தினி நேரம் வீணாச்சுன்னு உனக்குத் தெரியலியா. இந்த வைபவம் இல்லாமலேயே வாழ்வு சிக்கிக் கிடக்கலையா ? ஏன் ஏன் ?கொஞ்சம் சொல்லேன் ?'

அவள் தோளில் கையைப் போட்டுத் தன் புறமாக இழுத்தான்.

'எல்லாம் ஓஞ்சுதா ?'

அவள் தன்னுடைய கன்னத்தை அவன் கன்னத்தின் மீது வைத்துக்கொண்டு கண்ணீர்விட்டாள்.

'இந்தா பாரு—பாரு அதெல்லாம் ஓஞ்சுதே'

அமைதியாக பாசங்கலந்து இருந்தது அவர்கள்நிலை. இந்த வார்த்தைகளை அவனிடமிருந்து வெல்லுவது தான் அவளது ஏக நோக்கம் போலிருந்தது. எல்லாம் அடியோடு மறந்தாச்சு.

'ஹென்றி.........'

அவன் அவளுடைய கன்னத்தைத் தடவிக் கொடுத்தான்.

'வா போவோம்: இங்கேயே குடியிருக்கிறதா ?'

அவள் அவனைப் பின் தொடர்ந்தாள்.

'கொழந்தையைக் கூட்டிண்டு வந்துட்டா'

'அவள் அங்கேயே இருக்கறதுதான் நல்லது' என்றாள் அவள்.

உள்ளே எல்லாம் ஒரே அலங்கோலமாகக் கிடந்தது. விரித்த படுக்கை சுருட்டாமல் கிடந்தது. ஜன்னல் கதவும் சாத்திக் கிடந்தது. கும்மிருட்டின் நாற்றம் குமைந்தது.

தொப்பியைக் கழற்றி எங்குவைப்பது என்று சிறிது தடுமாடி,நாற்காலிமீது குடைக்குப்பக்கத்தில் வைத்தான்.

அந்த அறையில் நடு மத்தியில் வந்து கைகளைப் புடலங்காய் மாதிரி தொங்கப் போட்டுக்கொண்டு நிற்பதைக் கண்டு, 'அப்புறம் ?' என்றான்.

அவள் அழப் போகும் குழந்தை மாதிரி உதட்டைப் பிதுக்கினாள். நெற்றிப் புருவத்தைத் தடவிக்கொண்டாள். இன்னும் ஒரு ஆவர்த்தமா......?

'உனக்குத் தலை வலிக்கிறதோ ?'

'உச்சி வெடிக்கிருப்பிலே'

கேட்டு அவன் அதிசயப்பட்டு விடவில்லை. இப்படி ஏன் இவள் அழும்பு பண்ணி இதையெல்லாம் இழுத்து விட்டுக் கொள்ளவேண்டும் ?

'சரி : அதெல்லாம் மறந்தாச்சா ?'

'மறந்தாச்சே' என்று மன நிறைவுடன் சொன்னாள்.

'ஏன் இப்படிப் பண்ணினே ? ஏன் ?' என்று பரிவோடு கேட்டான்.

'நீங்கள் ஏன் இப்படிப் பண்ணினியள் ?'

'நானா ?'

'நாம ரெண்டு பேரு இருக்கமே ? குத்தமெல்லாம் ஒரு பக்கமா.........' என்றாள் அவள்.

'இதுதான் ரெண்டு பேர் குத்தமுமில்லியே'

'அதனாலெதான் ?' என்றாள் அவள்

'என்ன ? — இப்படியிருக்கா ?'

'ஒரு வேளை அப்படித்தான் வச்சுக்கோங்களே ?'

'எப்படியானாலும் மனசிலே குரோதமில்லியே ?'

'ஆமாம் இல்லியே' என்று ஆவலுடன் பதிலளித்தாள் அவள்.

'காலம்பர எப்படி ஆரம்பிச்சுதுன்னு ஒனக்கு ஞாபக மிருக்கோ. எனக்கில்லே, என்னமோ வார்த்தை: அதுக் கென்ன இப்போ: எனக்கு இப்ப மறந்தே போச்சு: அது முக்கியமில்லே: இன்னும் நமக்கு எத்தினி கஷ்டம்........'

அவனுடைய தர்க்கத்-தூணியிலுள்ள அஸ்திரங் களில் அது ஒன்று.

'அதைத்தான் மறந்துடுங்களேன்' என்றாள் அவள்

அவர்கள் இருவரும் அணைத்திருந்த கைகளை விலக் கினர். நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். பதில் சொல்ல ஆரம்பித்தான். கோபம் உள்ளிருந்து குமுற ஆரம்பித்தது.

'நல்லாருக்கு நல்லாருக்கு: இண்ணக்கி காலம்பர பேப்பர்லே பாக்கலியோ ?'

'இந்தக் கூத்திலே பேப்பர்தான் மனசிலே இருக்கு மாக்கும்.'

என்ன கேள்வி !

'சரி என்ன ? அதுதான், அதைத்தான் சொன் னேன் ?'

'தெரியுமே......'

அவள் கர்ஜிக்க ஆரம்பித்தாள் :

'சரி சரி தெரிந்து கொண்டா: இதெல்லாம் தெரிஞ் சுண்டா ஏன் இப்படி மாடிப்படியிலே உட்கார்ந்துண்டு அழுது வழிஞ்சு இன்னும் என்ன அழும்பு பண்ணினியோ? எல்லாப் பயகளும் நம்ம மண்டையைப் போட்டுண்டு உருட்டரப்போ ?'

'சும்மா தான் இருங்களேன்'

அவனுக்கே வாயடைத்துப் போச்சு. அதையெல் லாம் பற்றி யோசித்து அவளை எறிட்டுப் பார்க்கும் பொ ழுது அவளை வெட்டிப் போடலாமா என்று வந்தது. பெண்டாட்டியா ? கொல்ல வந்த எமனாட்டமா ? அப்பா...

'இன்னிக்கி ஆகாரம் கிகாரம் ஏதுவும் உண்டா ?' என்று பையிலிருந்து கடிகாரத்தை உருவினான்.

தலையை அசைத்துக் கொண்டு 'மணி ஜாமத்துக்கு மேலாச்சு.'

'கொஞ்சம் முட்டையைப் பண்ணி வைக்கிறேன். அது போருமா ?'

'ஏதோ போடு'

அவள் சமையலறைக்குள் மறைந்தாள். அவன் படுக்கையில் உடம்பைக் கிடத்திக்கொண்டு காத்திருந்தான். இத்தினிக்கும்......இவளை இப்படிப் பண்ணி வைக்கக் காலையிலே என்னத்தெச் சொல்லி வைச்சோம்... ...... நினைத்து நினைத்துப் பார்த்தான்: பிடிபடவில்லை.

அவள் சமையலறையில் முட்டைகளை அடித்துக் கடையும் சப்தம் கேட்கிறது.

'மார்ஸெலா ?'

'என்ன ?' அவள் வேலையைச் சிறிது நிறுத்தினாள்.

'இன்னிக்கி காலம்பர நான் ஒங்கிட்ட என்ன வார்த்தையைச் சொன்னேன்......'

அவள் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டுப் பிறகு......

'ஒண்ணுமில்லெ'

'என்னமோ சொன்னனே........கொஞ்சம் சொல் லேண்டியம்மா ?'

'அதனாலெ என்ன ஆகப்போகிறது ?'

'தெரிஞ்சாத் தேவலே' என்றான் ஒருநிமிஷம் கழித்து.

'பிரமாதமாக ஒன்றுமில்லெ '

அவன் அப்புறமும் காத்திருந்தான். அவள் ஏன் சொல்ல விரும்பவில்லை?

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. தவிரவும் அவனுக்கும் ஞாபகத்துக்கு வரமாட்டேன் என்கிறது.

'மார்ஸெலா உனக்கும் ஞாபகமில்லியோடியம்மா ?'

'நன்னு ஞாபகமிருக்கு'

'அப்பொச் சொல்லேன்'

'ஏனோ: மறுபடியும் பழையபடி தொசம் கட்டவா: ரொம்ப அசட்டுத் தனமாப்போச்சு'

அவள் சொல்லவே மாட்டாள் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

'சரி உன் இஷ்டம்: இருந்தாலும்' என்று முணு முணுத்தான்.

'ஆமாம்.' இப்படி ஓய்வதுதான் சரி.

ருஷ்யா

# அந்தப் பையன்

## [மாக்ஸிம் கார்க்கி]

இந்தச் சின்னக் கதையை எப்படிச் சொல்லுவது என்று புரியவில்லை. அவ்வளவு எளிதானது.

நான் வாலிபப்பருவத்தில், ஞாயிற்றுக்கிழமைகளில் தெருக் குழந்தைகளை எல்லாம் கூட்டிக்கொண்டு ஊருக்கு வெளியே உள்ள வயல் வெளிகளுக்கும் காடுகளுக்கும் அழைத்துச் செல்வது வழக்கம். குருவிக்குஞ்சு மாதிரி சுற்றித்திரியும் இந்தச்சின்னவர்களோடே சிநேகமாகப் பழகுவதில் எனக்கு ஒரு அபாரப் பிரேமை.

புழுக்கமும் புழுதியும் குமையும் தெருக்களை விட்டு விட்டு வெளியே வந்து விடுவதில் குழந்தைகளுக்கும் ஆசை தான். தாய்மார் ரொட்டித் துண்டுகள் கட்டிக் கொடுத்தார்கள். நானும் கொஞ்சம் லாஸஞ்சர் வாங்கிக் கொண்டு, ஒரு பாட்டில் நிறைய க்வாஸ் (ஒரு வகைப் பானம்) நிறைத்துக் கொண்டு புறப்படுவேன். கவலை தெரியாத இந்தச்சித்தாட்டுக்குட்டிகளை நகர் வழியாக வயற்புறம் கூட்டிச்சென்று, பசிய நிறம் படர்ந்து கண்ணுக்கு ரம்மியமாக இருக்கும் வசந்தம் அணிந்த கானகத்துக்குக் கூட்டிக் கொண்டு போவேன்.

அதிகாலையிலேயே ஊரைவிட்டுப் புறப்பட்டு விடுவது வழக்கம். மாதாகோயில் மணி உதயகால ஜபத்துக்குக் கூப்பிடும் நேரத்திலேயே புறப்பட்டு விடுவோம். இளங் குதிகால்கள் புழுதியைக் கிளப்பிக் கொண்டு பரிவாரமாக

ஓடிவரும். மத்தியானத்தில் சூரிய வெப்பம் உச்சத்தில் இருக்கும் போது, விளையாடிக் களைத்த என் நேசர்கள் கானகத்தின் ஓரத்தில் வந்து கூடுவார்கள். சாப்பிட்ட பிறகு சிறுசுகள் மர நிழலில் படுத்துக் கிடந்து உறங்கும். சற்றுப்பெரிய குழந்தைகள் என்னைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு கதை சொல்லச் சொல்லி வற்புறுத்தும். இவர்களுடைய இடையறாத சளசளப்புடன் என் கதா காலட்சேபமும் நடைபெறும். வாலிபத்துடுக்கும் தலைக் கொழுப்பும் அனுபவமற்ற சிற்றறிவுக்கு நிலைத்திருக்கும் வேடிக்கையான நிச்சயத்தன்மையும் எனக்கு இருந்தாலும், சின்ன விவேகிகளிடையே சிக்கிக் கொண்ட இருபது வய துக் குழந்தையாக இருக்க வேண்டிய நிலைமை எனக்கு அடிக்கடி ஏற்பட்டதுண்டு.

தலைக்குமேல் என்றும் இருக்கும் வானம் எங்களைக் கவித்தது. கண்ணெதிரே கானகத்தின் வண்ணக்கலவை கள் வாரி எடுத்துக்காட்டி அரிதுயில் போல் ஆழ்ந்த மௌ னத்தில் கூடிக்கிடந்தது. ஊசல் காற்று காதில் குசுகுசுப் பேசியது. கானகத்தின் மகரந்த நிழல்கள் சற்றே நடுங்கி மற்றும் மௌனத்தில் ஆழ்ந்தன. இந்தப் புனிதகரமான மௌனம் ஜீவனிலும் துளும்பிப் பரிபூர்ணப்படுத்தியது.

கரைகாணு நீலவானத்தில் வெள்ளை மேகங்கள் மெது வாக நீந்தின. சூரிய வெது வெதுப்பில் ஒண்டி வளரும் மண்ணிலிருந்து பார்க்கும் நமக்கு வானம், உயிர் தரும் வெப்பம் அற்றதாகத் தெரிகிறது. அப்படி இருந்தும் அந்த மேகங்கள் அங்கு கிடந்து உருகுவதும் புதிர்போலத்தான் நமக்குத் தெரிகிறது.

என்னைச் சூழ இந்தக் குழந்தைகள் வாழ்வின் இன்ப துன்பங்களைக் கற்றுத் தெரிந்து கொள்வதற்காக இவ் வுலகிற்குத் தருவிக்கப்பட்டிருக்கின்றனர்.

அந்தக்காலத்தை என்னுடைய நல்ல தசை என்றே சொல்ல வேண்டும். அந்தச் சாப்பாடு எல்லாம் வாஸ் தவமான விருந்துகள். என் ஜீவன் அந்தக் காலத்திலேயே வாழ்வின் இருள் நதியிலே முழுகுண்டு மாசுபட்டிருந்தா

லும் குழந்தைகளின் சிந்தனைகள் உணர்ச்சிகள் என்ற தெளிவான விவேகம் என்னைத் தளிர்க்க வைத்தது.

ஒரு நாள், நான் என் குழந்தைப் பரிவாரத்துடன், ஊருக்கு அப்புற மிருந்த வயல் வெளியை மிதிக்கும் போது, நாங்கள் ஒரு அன்னியனைச் சந்தித்தோம். ஒரு சின்ன யூதப் பையன். காலில் ஜோடுகிடையாது. உடம் பில் கிழிசல் சட்டை, கருப்புப்புருவம். வெண்மையான சுருட்டடத் தலை, ஆட்டுக்குட்டிமாதிரி. அவனை ஏதோ தொந்திரவு படுத்தியிருக்க வேண்டும். அழுது கொண் டிருந்தான் போல் தெரிகிறது. ஒளியற்ற கருங் கண் களைப் பாதுகாத்த இமை வீங்கிச் சிவந்திருந்தது. முகத் தில் பசிகாட்டும் நீலப்பூப்பு படர்ந்தது. குழந்தைகள் மத் தியில் ஓடிவந்து தெருவின் மையத்தில் நின்று கொண் டான். குளிர்ந்த காலைப் புழுதியில் காலை ஊன்றி நின் ருன். அழகமைந்த அவன் உதடுகள் பயக்குறிகாட்டி மலர்ந்தன. அடுத்த விஞடி ஒரே குதியில் நடைபாதைக் குத் தாவி விட்டான்.

'அவனைப் பிடியுங்கள். சின்ன யூதப் பயல். அந்தச் சின்ன யூதப்பயலைப் பிடியுங்கோ' என்று குழந்தைகள் உற்சாகமாகக் கத்தின.

அவன் ஓடிவிடுவான் என நினைத்தேன். அகன்ற கண் ஏந்திய ஒல்லிய முகம் பயக்குறி காட்டியது. உதடு கள் நடுங்கிப்படபடத்தன. கேலி செய்யும் குழந்தைக் கும் பலின் நடுவே நின்ருன். உயரத்தைப் பெரிதுபடுத்திக் கொள்ள முயலுவது போல நிமிர்ந்து கொண்டான். தோள்களை வேலியோடு அமுக்கிக்கொண்டு கைகளைப் பின்னுக்கு இறுகக்கட்டிப் பிடித்துக்கொண்டு நின்ருன்.

அவன் திடீரென்று அமைதியாகத் தெளிவாக, 'ஒரு வித்தை காட்டுகிறேன் பார்க்கிறீர்களா?' என்று கேட்டான்.

தன்னைத் தற்காத்துக் கொள்ள அவன் செய்யும் சூழ்ச்சியை நான் முதலில் எண்ணினேன். குழந்தை களுக்கு அந்த வித்தையில் உடனே ஆசை தட்ட விலகி

நின்று வழி கொடுத்தார்கள். சற்று வயசும் முரட்டுத் தனம் வலுத்தவைகளே அவனைச் சந்தேகத்துடன் கவனித்து நின்றன. எங்கள் தெருக்குழந்தைகளுக்கும் மற்ற எல்லாத் தெருக்குழந்தைகளுக்கும் சண்டை. தாங்கள் தான் அந்தஸ்து மிகுந்தவர்கள் என்பதில் ஸ்திரமான நம்பிக்கை. இதரர்களின் உரிமைகளைப் பற்றி அவை சட்டை செய்வதில் சிரத்தை கொள்ளுவதில்லை. அவை சட்டை செய்யாதிருந்தன என்பதே உண்மை.

சிறுசுகள் அவனை நம்பின.

'உம் உன் வித்தையைக் காட்டு, பார்ப்போம்' என்றன.

அந்த அழகான, ஒல்லியான சிறுவன் வேலி ஓரத்திலிருந்து வந்தான். மலர்ந்த உடலை வளைத்துத் தரை மீது கை ஊன்றி வில்போல் வளைந்து நின்றான். காலை உதறி ஒரே துள்ளலில் கைகளைத் தட்டிக் கொண்டு எழுந்து நின்றான்.

'ஹப்'

பிறகு சகடக்கால் மாதிரிக் கைகளையும் கால்களையும் விரித்துப் பக்கவாட்டில் சரிந்து சுழன்று சக்கரடித்தான். அக்னி தீய்த்துக்கொண்டு போவது போலிருந்தது அவனுடைய கதி. சட்டை ஓட்டை வழியாகத் தோள்பட்டையும் சாம்பல் பூத்தசர்மமும் விலாவெலும்பும் தெரிந்தன. கழுத்து எலும்புகள் கண்டமாலை மாதிரி கிடந்தன. அதை அவன் வலுவாக அமுக்கினால் எங்கே ஒடிந்து விடுமோ என்றிருந்தன. முயற்சியால் வேர்வை கொட்டி முதுகுப்புறத்தை நனைத்தது. ஒவ்வொருதரம் விதவிதமான வித்தை காட்டும் போதும் ஜீவனற்ற ஒரு சிரிப்போடு குழந்தைகளை ஏறிட்டுப் பார்த்தான். ஒளி மங்கிய கண்கள் விரியத்திறந்திருப்பது பார்ப்பதற்கு அகோரமாக இருந்தது. பார்வையில் சிசுத்தன்மையற்ற ஒரு வெறி இருந்தது. குழந்தைகள் கூச்சல் போட்டு அவனை உத்சாகப்படுத்தின. அவனைப் பின்பற்றி அவைகளும் புழுதியில் குட்டிக்கரணமடிக்க ஆரம்பித்துவிட்டன. லாவகமற்ற முயற்சிகளால், சரிவதும் விழுவதும், சமயத்

தில் கரணம் போட்டு விழுவதும் பொறுமைப்பட்டுப் பார்த்துக்கொண்டிருப்பதுமாகக் குழந்தைகள் குமைந்தன.

இந்தக் கோலாகலம் திடீரென்று முடிவுற்றது. அவன் துள்ளி யெழுந்து நின்று அனுபவசாலியான வித்தைக்காரன் மாதிரி புன்சிரிப்போடு கைகளை நீட்டி 'ஏதாவது கொடுங்கள்' என்முன்.

குழந்தைகள் மௌனமாக நின்றன. ஒரு குழந்தை 'துட்டா' என்று கேட்டது.

'ஆமாம்' என்முன் பையன்.

'இது நல்ல வேடிக்கையா இருக்கே?'

'துட்டுன்னு நாங்களே நல்லா அது மாதிரி செஞ்சிருப்பமே...'

இந்த வேண்டுகோள் வித்தைக்காரனைத் துச்சமாக மதிக்கும் படி செய்வித்தது. குழந்தைகள் சிரித்துக் கொண்டு, கொஞ்சம் வைதுகொண்டு வயற்புறமாக ஓடின. அவர்களிடை பணம் கிடையாது தான். என் வசம் ஏழு கொபெக்குகள் தான் வைத்திருந்தேன். (ருஷ்யச் சில்லறை நாணயம்) அழுக்கேறிய அவனுடைய உள்ளங் கையில் இரண்டைக் கொடுத்தேன். அவன் அவற்றை விரலால் தொட்டுப் பார்த்துவிட்டு வந்தனம் கூறினுன்.

அவன் போகும் போது, முதுகை மூடியிருந்த சட்டையில் கறை படிந்திருப்பதைப் பார்த்தேன். அது தோள்பட்டையுடன் ஒட்டிக் கொண்டு விட்டது.

'நில்லுடா, அதென்ன?' என்றேன்.

அவன் நின்முன். திரும்பினுன். என்னை ஊன்றிக் கவனித்தான். பழைய 'நல்லதனச்' சிரிப்போடு சாந்தமாகப் பதில் சொன்னுன். 'முதுகில் இருப்பதா? ஈஸ்டர் பண்டிகையில் சர்க்கஸ் ஆடுகிற போது டிரிபீஸிருந்து நாங்கள் விழுந்து விட்டோம். அப்பா இன்னும் படுத்த படுக்கையாகத்தான் இருக்கிறுர். எனக்குக் குணமாகி விட்டது.

நான் சட்டையைத் தூக்கிப் பார்த்தேன். இடது தோள்பட்டையிலிருந்து துடை வரை முதுகுத்தோல் அப்படியே உறிந்து போய் ஒரே பெரிய வடுவாக மாறியிருந்தது. புண்வாய் ஆறி உலர்ந்து காய்ந்து பொறுக்கேறியிருந்தது. அவன் வித்தை காட்டிய போது பொறுக்கில் பல இடங்களில் கீரல் விழுந்து அதன் வழியாக ரத்தம் பீறிட்டுக்கொப்புளித்தது.

'இப்போது வலிக்கவேயில்லை...வலிக்கவேயில்லை அரிக்கத்தான் செயகிறது...'

வீரனுடைய நெஞ்சழுத்தப் பார்வையுடன் அவன் பெரிய மனுஷன் குரலோடு 'எனக்காக நான் இப்படி வேலை செய்தேன் என்று நினைக்கிறாய்? சத்தியமா அப்படியே இல்லை. எங்கப்பா--எங்கிட்டத் தம்பிடி கிடையாது. எங்கப்பாவுக்கு ரொம்பக் காயம். அதனாலே எப்படியும் வேலை செய்து தானே ஆகணும். மேலும் நாங்கள் யூதர்கள். எல்லோரும் எங்களைப் பார்த்தால் கேலி செய்கிறார்கள்....போயிட்டு வாரேன்.'

அவன் மலர்ந்த முகத்துடன் குதூகலத்துடனேயே பேசினான். பிறகு விசுக்கென்று வாய்திறந்த வீடுகளைத் தாண்டிச் சென்று மறைந்து விட்டான்.

இதெல்லாம் அற்ப விவகாரந்தானே. ஆனால் என் ஆயுளில் கஷ்டம் வந்த போது இந்தச் சின்னப் பையனுடைய தைரியத்தை அடிக்கடி நினைத்தேன். நன்றியுடன் நினைத்தேன்.

இங்கிலாந்து

# தாயில்லாக் குழந்தைகள்

## [பிரான்ஸிஸ் பெல்லர்பி]

வேர்த்து விருவிருக்க, கால்கள் தள்ளாட, இரண்டு குழந்தைகள் நடந்து சென்றன. பையன், பதினொரு வயசிருக்கும் முன்னால் நடந்தான். பெண் எட்டு வயசுபோல இருக்கும், பாதை முன் மறு ஓரத்தில் பின் தங்கித் தொடர்ந்து கொண்டிருந்தாள். 'ஏன் உலாத்தப் போயிருக்க வேணும்' என அவள் எண்ணினாள். 'யாராவது எப்பவாவது அண்ணன்கூட உலாத்தப் போவாளா?'... மனசில் வருத்தமும் வெறுப்பும் குமிழியிட்டது. பையன் வீட்டில் உட்கார்ந்து வழக்கம்போல காப்பியாவது எழுதிக் கொண்டிருந்தோமில்லியே என நினைத்தான்.

லிலாக் கொடி அவள் சென்ற பாதை ஓரத்துச் சுவர் மேல் கவிந்து தொங்கியது. சிறுமி கொஞ்சம் நின்றாள். பச்சைப் பசேல் என்று பட்டுப்போல இலை, கிண்ணம் மாதிரி பூ....மழையில் நன்றாக நனைந்து பிரகாசித்தால் நன்றாக இருக்காதா என்று நினைத்தாள்.

சுவர்மேல் உடைந்த கண்ணாடித் துண்டுகள் நெடுகக் குத்தி வைக்கப்பட்டிருந்தது. வெயில் வெளிச்சம் அதில் பட்டு வைர நகை மாதிரி பளிச்சிட்டது. அவர்களுடைய அப்பா ஒரு பாதிரியார். அவருடைய சர்ச்சுக்கு வார்டனை [டிரஸ்டிமாதிரி] ஸ்ரீ ஹார்ப்பர் அந்த ஊரிலேயே ரொம்பப் பெரிய பணக்காரர். நிஜமான நகை என்றால் அப்படி ஒரு நிமிஷத்திற்கு அதை விட்டு வைத்திருக்க

மாட்டாரே. வச்சிருந்தாலும் ஜனங்கள் உடைந்த கண்ணுடித் துண்டுன்னுதான் நெனேச்சிருப்பார்கள்.

'பிலுக்குக்காரி' என்ருன் பையன். 'என்ன ரொம்ப பிலுக்கிக்கிட்டு நடக்கிறியே. பையிலே கையை வச்சிக்கிட்டு நடந்தா ஆம்பிளே ஆயிருவியோ, ஒன்னேப் பாத்தா அசட்டுப் பொட்டச்சி மாதிரிதான் இருக்கு' என்று சொல்லிவிட்டுக் காலால் தரையில் உதைத்துப் புழுதியைக் கிளப்பிக்கொண்டு காலில் கிடந்த ஜோடுகளே நிசாரமாகப் பார்ப்பது போலப் பார்த்துப் பெருமை யடித்துக் கொண்டான் பையன்.

அவன் நிஜத்தைச் சொல்லல்லேன்னு அவளுக்குத் தெரியும். சட்டைப் பையிலே கையிருக்குதுன்னு அது அவளுக்கு வழக்கம். பிலுக்குகிறதுக்கே தைரியம் தனக்குக் கிடையாது என்பது அவளுக்குத் தெரியும். ஒரு தடவை அவன் அப்படிச் சொல்லி விட்டால், இயற்கையாக நடக்கவோ பேசவோ அவளுக்கு முடியாது. அழுகை அழுகையாக வந்தது. ஒன்னும் செய்ய முடியலெ. பைக்குள் கிடந்த வேர்த்துப் புழுங்கும் அழுக்கு விரல்களே இறுக்கி மடக்கி நெறித்துக் கொண்டாள்.

அப்பொழுதுதான் கிழவி கார்லண்ட் வீட்டுக் கிழட்டு நாயைப் பார்த்தான் அவன். 'அதோ கிடக்கே சோம்பேறி நாயி. அதெ எழுப்பி 'சூ' விடறேன் பாரு. 'ஏ, நாயி...' நிழலில் படுத்துக்கிடந்த சுகத்தில் அது திரும்பவில்லே. (அது கிழவிவைத்திருந்த கடையின் ஜன்னலுக்குக் கீழே படுததுககிடநதது) பையன் குனிநது ஒரு கல்லே எடுத்தான்.

'கொடுமெ பண்ணுதியேன், போடாதே — போடக்கூடாது...' பையன் கல்லே விட்டெறியும் சமயத்தில் அவள் அவனுடைய கையைத் தட்டிவிட்டாள். கல் நாயின் மேல் விழாமல் மேலிருந்த ஜன்னல் கண்ணுடியை உடைத்துக் கொண்டு உள்ளே பாய்ந்தது.

குழந்தைகள் இரண்டும் பயத்தில் விரைத்துப்போய், சில்லு சில்லாகச் சிதறிய கண்ணுடித் துண்டுகளேப் பார்த்

துக்கொண்டு நின்றன. அச்சமயம் ஒரு கிழவியின் கீச்சுக் குரல் பீதி கொப்புளித்துக் கொண்டு பிறப்பது கேட்டது. பையனுக்கும் பயம் சற்றுத் தெளிந்துவிட தப்புவதற் காகச்சிறுமியின் கையை எட்டிப்பிடித்துக்கொண்டு 'வாடீ ஓடிருவோம்' என்முன். அவர்கள் ஓடியே போயிருப்பார் கள். ஆனால் அந்த நிமிஷத்திலேயே கிழவி கதவைத் திறந்துகொண்டு லொங்கு லொங்கு என ஓடிவந்து குழந் தைகளைச் சுட்டிக் காண்பித்து, ஜன்னலையும் காட்டிக் கத்த ஆரம்பித்தாள். கிழட்டு நாயும் துணைக்கு நின்று குலைத்தது.

'மாஸ்டர் டிக், மிஸ் ஸாரி-என்னு பண்ணிப்புட்டிங்க பாத்தியா-அந்தப் பெரிய பாருங்கல்லே விட்டெறிஞ்சு என்னைக் கொண்ணே போட்டிருப்பிகளே. மயிரிழெல்லா தப்பிச்சேன். உங்கப்பா நல்ல பக்திமான். இப்படி இந்தத் தாயில்லாப் புள்ளைங்க கொலெகாரரா அலைஞ்சு திரியு துன்னு அவருக்குத தெரிஞ்சா எப்பிடி இருக்கும்? உங்கம்மா செத்துப்போயி ரெண்டு வாரங்கூட ஆவுலியே, கர்த்தர் கழிச்ச ஞாயிற்றுக்கிழமையிலியா நீங்க இப்படிச் செய்யணும்? நான் வெயிலா இருக்கேன்னு உள்ளே இருந்து கணக்குப் பார்த்துக்கிட்டிருந்தேன்...' என அடுக்கிக் கொண்டே போனாள். மடை உடைத்துக் கொண்டு பாய்ந்தமாதிரி வார்த்தை கங்கு கரையில்லாமல் புரண்டு பிரவகித்தது.

பெண்ணுக்குக் கோபம், பயம். இத்தனையும் சொல் லக்கிடக்கா. தடுக்க வேண்டாமா?...குழந்தை அவளையே பார்த்துக்கொண்டு இருந்தாள். ஏதாவதுநடந்து, பெரிசா நடந்து இந்த வார்த்தையை அணைக் கட்டவேண்டும், 'அம்மா...செத்து ரெண்டு வாரமாச்சு...' என்ற வார்த் தைகளே பிறவாதது மாதிரி துடைக்கப்பட வேண்டும்.

பெரிசா ஒன்று நடக்கத்தான் செய்தது.

பையன் முறுக்காக, 'அந்தக் கல்லைச் சன்னல் மேல் குறிபார்த்து எறியவில்லை-நாயின் மேல் போட்டேன்' என் ருன் உரத்த குரலில்.

'அப்படியா' என்று கிழவி கீச்சிட்டாள். அவளுடைய கைகள் பதறின. வானத்தையும் பூமியையும் மாறி மாறிப் பார்த்து அங்கலாய்த்து, 'வாயில்லாப் பிராணியாச்சே, பாவம் இப்பத் தானேடியம்மா ஒன்குழந்தையை மண்ணுக்குப் பறிகுடுத்தே' என நாயிடம் கதற ஆரம்பித்து விட்டாள்.

நாயின் குலேப்புகளுக்கு இடையே பையன் இடைமறித்துத் தன் பதிலேக் கோஷித்தான். 'நாயிமேலே போடரத்துக்கில்லே-ஒரு பெரிய வண்டு அதும் மூக்குக்கிட்டப் பறந்து வந்தது, கொட்டிப்புடுமேன்னு கல்லெப் போட்டேன். வண்டெ வெரட்டிப்புட்டுது. ஆனைக்கக் கல்லுதான் ஜன்னல் மேலே பட்டு ஒடச்சுப்புட்டுது. ரொம்ப வருத்தமாருக்கு, அப்பாகிட்டச் சொல்லிப் பணத்தெ அனுப்பச் சொல்லுறேன்'.

என்ன ஆச்சரியமான பொய். மகா பெரிய இதிகாச உதயத்துக்குகந்த பொய். குழந்தைகளின் பீதி தளர்ந்தது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளவில்லே. கிழவியின் முன், தொண்டை கம்மிய நாயின்முன் தளர்ந்து போய் நின்ருர்கள்.

குழந்தைகள் பொய்யே சொல்லாதவை, தாயாருக்கும் தெரியும. தகப்பனருக்குந் தெரியும். எல்லாருக்கும் தெரியும் பொய் சொல்லமாட்டார்கள் என்று.

அண்ணன்ஞ இப்படியல்லவா இருக்கணும். அண்ணன்ஞ இவன்தான் அண்ணன். நம்மை யார் இனி என்ன செய்ய முடியும்...சிறுமியின் மனத்தில் பெருமையும் பரிவும் குமிழிவிட்டது.

கிழவியின் தன்மை அடியோடு மாறியது. அப்படின்ஞ அது வேறேதான். வாயில்லாச் சீவனுக்கு உதவி பண்ணினிங்க. எப்படி இருந்தாலும் கல்லு கல்லுத்தான். மாஸ்டர் டிக் நீ இனிமேல்இப்பிடிக்கல்லெ விட்டெறியாதே. கல்லெடுத்தே போடப்படாது. அதுதான்சட்டம். அதெப் பத்தி இனிமே என்ன பேச்சு, உங்கப்பாதான் பணத்தை அனுப்பப் போருங்களே, அனுப்பி விடுவாங்கன்னு எனக்குத் தெரியுமே. எப்பிடி இருந்தாலும் அந்த அம்மாவுக்

குப் பொறந்த கொளந்தைங்கள் இல்லே. சூரியன் மாதிரி பொய்யே சொல்லாதே...' என அலப்பிக் கொண்டே...

கிழவி கொடுத்த பட்சணங்களைத் தின்று கொண்டு மேலே நடந்து சென்றன குழந்தைகள். பிளொ (கலப்பை) என்ற பெயர் உள்ள கள்ளுக்கடைக் கதவு சாத்தியிருந்தது. வாசலில் பூனைக்குட்டி படுத்துக்கிடந்தது. ஒருத்தருமில்லை. சத்தமே கேக்கலே. குதிரை மசாலி மரச்சோலைக் கப்புறம் பாதிரியார் வீடுதான். நாஸ்திகப் பண்ணையார் (சர்ச்சுக்கு வராததால்) தோட்டத்தில் குதிரைக்குட்டிகள் உண்டு. அவைகூட ஓடக்காணோம்.

வேலி ஓரத்தில் தலையைக்குனிந்து ஆட்டிக்கொண்டு நெருங்கி நின்றார்கள்.

'அப்பா கிட்டவும் அதேயேதான் சொல்லணும்' என்றான் பையன்.

'ஆகட்டும்'

'கிழட்டு முண்டை'

'ஆமாம்.'

'ஒன்னெ அவ்வளவு தூரம் நடத்தி இழுத்தடிச்சேனென்று இருக்கு'

'நடக்கரதுக்குக் கஷ்டமாவே இல்லியே-எனக்கும் நல்லாத்தானே இருந்தது.'

'கருப்பு வர்ண முட்டாயி ரெண்டுதான் மிச்சம், என் பங்கு.'

தோளோடு தோள் ஒட்டும்படியாக ஜோடியாகத் தலையைக்குனிந்து கொண்டு நெருங்கி நடந்து சென்றார்கள். கவனிப்பாரற்று வெறிச்சோடிக் கிடக்கும் புஷ்பப் பாத்திகளைத் தாண்டி நிசப்தம்கிடந்த பழைய வீட்டுக்குள் புகுந்தார்கள் அந்தக் குழந்தைகள்.

ஸ்வீடன்

# தெய்வம் கொடுத்த வரம்

## [பியோர்ண்ஸ்டர்ண் பியோர்ண்ஸன்]

இந்தக் கதையில் வருகிறவன்தான் அவனுடைய ஊரிலேயே ரொம்பவும் பெரிய பணக்காரன். தவிரவும் அந்த வட்டாரத்திலேயே அவனுக்குத்தான் ரொம்பவும் சொல் சக்தி உண்டு. அவன் பெயர் தார்ட் ஓவராஸ். ஒரு நாள் அவன் உபதேசியார் வீட்டுக்குள் நுழைந்தான். அவர் படித்துக்கொண்டிருக்கும் அறையில் போய் நின்ருன். அவன் முகம் வந்த ஜோலிக் கவலையைக் காட்டியது.

'எனக்குமகன் பிறந்திருக்கிருன், அவனுக்கு ஞான ஸ்நானம் கொடுக்க வேண்டும்' என்ருன்.

'என்ன பெயர் வைக்கப் போகிருய்?'

'பின் என்று - எங்கப்பா பெயர்.'

'ஒத்திக்கூட யார் வரப்போகிருர்கள்?'

பெயர்கள் அறிவிக்கப்பட்டன, தார்டின் உறவினரில் நல்ல பேர் எடுத்தவர்கள்.

'வேறு என்ன வேண்டும்?' என்ருர் உபதேசியார்.

அந்த மனிதன் கொஞ்சம் தயங்கினுன்.

'அவனுக்குமட்டும் தனியாக ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது' என்ருன்.

'அதாவது ஞாயிற்றுக்கிழமை தவிர வேறு ஏதாவது ஒரு நாளில் உனக்கு எப்பொ சவுகரியம் ?'

'வருகிற சனிக்கிழமை பகல் பனிரண்டு என்றால் தேவலே.'

'வேறு ஏதாவது உண்டா ?'

'வேறு ஒன்றுமில்லே, அவ்வளவுதான்' என்று தொப்பியை எடுத்துச்சுழற்றிக் கொண்டு புறப்பட யத்தனித்தான்.

உபதேசியார் எழுந்து நின்றார். 'இன்னும் வேறு ஒன்றும் இருக்கிறது' என்று கொண்டே அவனிடம் நெருங்கி வந்து அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு 'குழந்தை உனக்கு கடவுள் அளித்த நல் ஆசியாக அமைவானுக, அவன் அருள்' என்றார்.

பதிஞலு வருஷங்கள் கழிந்த பிறகு மறுபடியும் ஒரு நாள் உபதேசியார் முன்னிலேயில் நின்றார்.

'வயசுக்களே உடம்பிலெ கொஞ்சம்கூடத் தட்டலியே என்றார். அவனிடம் துளி மாறுதல்கூட உபதேசியாருக்குத் தெரியவில்லே.

'அதற்குக் காரணம் எனக்குத் தொல்லே எதுவும் இல்லே என்பதுதான்' என்றான் தார்ட்.

உபதேசியார் இதற்கு ஒரு பதிலும் அளிக்கவில்லே. சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டு 'இப்பொழுது வந்திருப்பதற்கு என்ன விசேஷமோ ?' என்று கேட்டார்.

'நம்ப புத்திர பாக்கியத்தைப் பற்றித்தான், மதப்பிரவேசச் சடங்குக்காகத்தான்.'

'அவன் ரொம்பக் கெட்டிக்காரப்பயல்.'

'சர்ச்சில் அவன் எங்கே உட்காருவான் என்பது தெரிந்து கொண்ட பிற்பாடுதான் உபதேசியாருக்குக் காணிக்கை வேண்டும் என்று ஆசை' என்றான்.

'அவன் ஒண்ணுவது இடத்தில் உட்காருவான்.'

'அப்படித்தான் சொல்லிக்கொண்டார்கள். இதோ காணிக்கை...வைத்திருக்கிறேன்.'

'என்றால் வேறு ஏதாவது தேவையா?'

'ஒண்ணுமில்லே'

தார்ட் வெளியேறினன்.

எட்டு வருஷங்கள் கழித்து ஒரு நாள், உபதேசியார் உட்கார்ந்து படிக்கும் அறைக்கு வெளியே சந்தடி கேட்டது. கும்பலாகப் பலர் வந்துகொண்டிருந்தார்கள்.

தார்ட் முதலாவதாக உள்ளே நுழைந்தான்.

பாதிரியார் ஏறிட்டுப் பார்த்தார். உடனே அவனை அடையாளம் கண்டு கொண்டார்.

'இன்னிக்குச் சாயங்காலம் ஏது பரிவாரத்தோட வந்திருக்கிருய்? என்ன விசேஷம்?' என்ருர்.

'என் மகனுக்குக் கலியாண கட்டியம் அறிவிக்கணும்னு உங்களிடம் தெரிவிச்சுக்கிட வந்திருக்கேன். இதோ என் பக்கத்தில் நிற்கிருரே குட்மன்ட். இவருடைய மகள் க்ரென் ஸ்டார்லிடனை...என் மகன் கலியாணம் செய்துகொள்ளப் போகிருன்' என்ருன்.

'ஊரிலேயே பணக்காரப் பெண் அல்லவா அவள்' என்ருர் உபதேசியார்.

அப்படித்தான் சொல்லிக்கொள்ளுகிருர்கள் என்று சொல்லிக்கொண்டு தலையைத் தடவிக்கொண்டான் குடியானவன்.

ரொம்பவும் ஆழ்ந்த யோசனையிலிருப்பவர்போல உபதேசியார் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு வாய் பேசாமல் சர்ச்சு ஜாபிதாவில் பெயர்களைப் பதிந்து கொண்டார். வந்தவர்கள் அதன் கீழ் கையெழுத்திட்டார்கள். தார்ட் மூன்று நோட்டுகளை எடுத்து வைத்தான்.

'இதில் ஒன்றுதான் பெற்றுக்கொள்ள எனக்கு அவகாசம் உண்டு' என்ருர்.

'அது எனக்குத் தெரியும். இவன் எனக்கு ஒத்தைக் கொரு மகன். கொஞ்சம் செழிப்பா நடத்தவேண்டும் என்று ஆசை'

உபதேசியார் பணத்தை எடுத்துக்கொண்டார்.

'தார்ட் உன் மகனுக்காக என்னிடம் இப்படி வந்தது இது மூணும் தடவை' என்ருர்.

'ஆமாம், இன்ேருடு பொறுப்பு விட்டது' என்று சொல்லிவிட்டுப் பையை மடித்துக் கட்டிக்கொண்டு தார்ட் வெளியேறினுன்.

கூட வந்தவர்களும் மெதுவாக வெளியேறினுர்கள்.

பதினைந்துநாள் கழித்துத் தகப்பனும்மகனும் ஏரிமார்க் கமாக ஸ்டார்லிடனுக்கு படகோட்டிச்சென்ருர்கள். ஏரியும் அமைதியாக சலனமற்று இருந்தது. காற்றும் துளிக்கூடக் கிடையாது. கலியாணத்துக்கு ஏற்பாடுகள் செய்வதற் காக இவர்களிருவரும் போய்க்கொண்டிருந்தார்கள்.

'இந்தக் குறுக்குப் பலகை உறமாக இல்லை' என்று கொண்டு மகன் தான் உட்கார்ந்திருந்த பலகையைச் சரிப் படுத்திச் சொருக, நேர்படுத்திச் சொருக எழுந்து நின்ருன்.

அதே நிமிஷத்தில் அவன் நின்றிருந்த பலகை கழன்று விழுந்தது. காற்றைப் பிடிப்பதுபோலக் கைகளை உதறி விரித்து ஒரே ஓலத்துடன் ஜலத்துக்குள் விழுந் தான்.

'இந்தத் துடுப்பை எட்டிப் பிடித்துககொள்' என்று கூச்சலிட்டபடி தகப்பன் துள்ளி எழுந்து துடுப்பை நீட்டி னுன்.

ஆனுல் இரண்டொரு முயற்சிக்குள் மகன் விரைத்து விட்டான். புரண்டு சரிந்து தண்ணீருக்குள் மூழ்கினுன். போகுமுன் தகப்பனைத் தைக்கும் பார்வை நெடிதாக ஏறிட்டுவிட்டு மறைந்தான்.

தார்ட் பிரமித்துவிட்டான். தனக்கே நம்ப முடியாத சம்பவமாக இருந்தது. படகை ஆடாமல் அசையாமல்

நிறுத்தி மகன் மூழ்கிய இடத்தில் ஆழத்தைத் துழாவு வதுபோல நோக்கினான். அவன் மறுபடியும் மேலே வராமலா போகப்போகிறான் என்ற நம்பிக்கை. அந்த இடத்தில் சில குமிழிகள் மேலே வந்தன. இன்னும் சில வந்தன. கடைசியில் பெரிதாக ஒன்று வெளிவந்து உடைந்தது. ஏரி மீண்டும் அமைதி பெற்று பளிங்குபோலாயிற்று.

மூன்று பகல், மூன்று இரவு தகப்பன் அன்ன ஆகாரமில்லாமல் அந்த இடத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுப் படகோட்டுவதை ஜனங்கள் பார்த்தார்கள். மகனுடைய உடலத்தைஎடுக்க ஏரியில்துழாவி அரித்துக்கொண்டிருந்தான். மூன்றாவது நாள் காலை அதைக் கண்டெடுத்துத் தன் கைகளில் ஏந்தி மலைவழியாகத் தன்னுடைய பண்ணைக்கு எடுத்துச் சென்றான்.

அந்த நாள் கழிந்து சுமார் ஒரு வருஷ காலம் ஆகிவிட்டிருக்கும். இலையுதிர் காலத்தில் பொழுது சாய்ந்து வெகுநேரமாகிய பின் யாரோ ஒருவன் உபதேசியார் அறையில் வெளி வாசலில் நின்று கதவைத் திறப்பதற்காகத் தாழ்ப்பாளைத் தடவுவது போலக் கேட்டது. அவர் எழுந்துபோய்க் கதவைத் திறந்துவிட்டார். அப்பொழுது மெலிந்துபோய் கூனும் நரையும் பட்ட ஒரு மனிதன் உள்ளே வந்தான். அடையாளம் கண்டுகொள்ளு முன் அவனை நெடிது நேரம் உற்று நோக்க வேண்டியிருந்தது உபதேசியாருக்கு.

வந்தவன் தார்ட்தான்.

'ஏன் இத்தினி நேரங்கழித்து இரவில் நடமாடுகிறாய் ?' என்று கேட்டார் உபதேசியார். அவர் அவன்முன்பு நின்று கொண்டிருந்தார்.

'ஆமாம் நேரமாயிட்டுதுதான்' என்று சொல்லிக் கொண்டே தார்ட் ஓரிடத்தில் அமர்ந்தான்.

உபதேசியாரும் உட்கார்ந்தார். எதற்காகவோ காத்திருப்பது போல உட்கார்ந்திருந்தார். நெடிய, நெடியதொரு மௌனம் இடை நின்றது. பிறகு தார்ட்பேசினான்.

'என்னிடம் இருப்பதை ஏழைகளுக்குக் கொடுக்க ஆசைப்படுகிறேன். என் மகன் பேரில் அந்தத் தருமம் தொலங்கும்படி போட்டு வைக்க வேணும்' என்ருன் தார்ட்.

அவன் எழுந்துபோய்ப் பணத்தை மேஜைமேல் வைத்துவிட்டுத் திரும்பி வந்து உட்கார்ந்தான். உபதேசியார் அதை எண்ணினர்.

'ரொம்பத் தொகையாச்சுதே' என்ருர்.

'இது என் பண்ணையின் பாதி விலை. அதை இன்று தான் விற்றேன்.'

உபதேசியார் வெகு நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தார். கடைசியாக ஆதரவோடு 'இனி என்ன செய்ய உத்தேசித்திருக்கிருய் தார்ட்?' என்ருர்.

'இதைவிட ஏதாவது நல்லதிருந்தால் செய்ய' என்ருன்.

அவர்களிருவரும் நெடுநேரம் அப்படியே உட்கார்ந்திருந்தார்கள். தார்ட் குனிந்த தலை நிமிராமல் இருந்தான். உபதேசியார் அவன் மீது வைத்த கண் மாருமல் அமர்ந்திருந்தார்.

பிறகு உபதேசியார் ஆதரவும் பரிவும் கலந்த குரலில் கனிவோடு, 'தார்ட், உம்முடைய மகன் கடைசியாக உமக்கு வாஸ்தவமான ஆசியைப் பெற்றுத் தந்திருக்கிருன் என்றுதான் நினைக்கிறேன்' என்ருர்.

'நானும் அப்படித்தான் நினைக்கிறேன்' என்ருன் தார்ட். இரண்டு பெரிய நீர்த்துளிகள் அவன் கண்களில் பிறந்து கன்னங்கள் வழியாக மெதுவாக உருண்டோடின.

அமெரிக்கா

# யுத்த தேவதையின் திருமுக மண்டலம்

## [தாமஸ் வுல்ப்]

ஈவிரக்கமற்றுக் கொதிக்கும் அந்த வருஷம் ஆகஸ்டில் யுத்தம் நின்றது. யுத்த தேவதையின் பவனியின் போது நான்கு கணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஒன்று லாங்லிவயல்: விமான மைதானத்தில் உள்ள குத்தகைக் கம்பெனியின் ஷெட்டுகளிலிருந்து ஒரு நீக்ரோ ஜாதியான் சர்வ ஜாக்கிரதையாக அடிமேல் அடியாகப் பின்புறம் கால் எட்டி வைத்துப் பின்வாங்குகிறான். பீதியும் வெறுப்பும் அவன் முகத்தில் பயங்கரமாக பல்லிளிக்கின்றன. வாட்டசாட்டமான உடல் ஆகிருதி: மனிதக்குரங்கு மாதிரி தாவவோ ஓடவோ லாவகம் படைத்த கட்டமைதி. கரத்தையும் கருப்புப்பாதங்களையும்-அவற்றை முஷ்டி என்று சொல்லுவதுபொருத்தமல்ல. அகன்றபடி விரித்து, ஆகஸ்ட் மாதச் சூரியன் கன்னக்கனிந்த கருப்பில் பளபளக்க சர்வ ஜாக்கிரதையாகப் பின்வாங்குகிறான். காய்ந்து கருங்கட்டையாகப் புல்லற்று மலடடித்துப்போன களிமண்கட்டாந்தரை மீது கால் ஊன்றிப் பின் வாங்குகிறான். வெள் விழிகள் ஆழங்காண முடியாத, மூங்கையான வெறுப்பும் பீதியும் கொப்புளிக்கிறது. அவனை விரட்டிக்கொண்டு தென்னாட்டு வெள்ளையன்-காங்கித் தலைவனோ ஓவர்ஸியரோ-கொழுப்பேறிய சதைப்பற்று மிகுந்த கைகளில் தடியேந்தி, சளக்கு பளக்கென்று அவனைத் தொடர்கிறான். அவனுடைய அடித் தொண்டை கொலையையும் ரத்த வெறியையும் குமுறிக் கனைக்கிறது. 'கருப்புக் கூத்தியாமவனே, ஒன்

கொடலைக் கொதறிப்புடறேன் பாரு; நாசமாப்போன மூளையைச் சிதற அடிக்கிறேன் பாரு.' தடி நீக்ரோவ் மண்டையில் பொட்டு பொட்டு என்று விழுந்து மைதானம் முழுவதிலும் கேட்டது. கட்டை உயிரடிக்கும் எலும்பில் அடித்துக்கொண்டிருந்தது. இந்தத் தொந்தி பருத்த வெள்ளையனுக்குப் பின்புறம் உலகத்தின் தலையாட்டிப் பிராணியான ஆபீஸ் குமாஸ்தா, ஷர்ட் போட்டு நடமாடும் எலிமாதிரி தொடர்ந்து கொண்டிருந்தது. ஆபத்து என்றால் எலி மாதிரி பொடுக்கென்று ஒளிந்து கொள்ளும் திறமையும், ஆபத்து அகன்றது என்றால் அசகாய சூரத்தனத்தோடு கொல்லவரும் தன்மையும் படைத்த ஜந்து இது. இது எலிப் பல்லை இளித்துக் கொண்டு, தன்னைப் பாது காப்பவன் நிழலில் தொடர்ந்து வந்தது. பயத்தின் தலையாட்டும் அடிமை, கொலையின் குனிந்து கொடுக்கும் மெய்க் காவல், இரக்கமோ தயவோ இல்லாமல் அடியோடு கொல்ல வேண்டும் என்ற கோழையின் ஆசையோடு கூடி எலிப்பல்லைக்காட்டிக் கொண்டு வந்தது. ஈவிரக்கமற்ற சூரியன் கைப்பட்டனிலும், கஞ்சியேறி மொட மொடக்கும் ஷர்ட் அணிந்த கையில்,அது ஏந்திய மங்கிய நீலக் கைத் துப்பாக்கிமீதும் பிரகாசித்தது. துப்பாக்கியை ஏந்திய அவன்கை நடுநடுங்கியது. ரத்த வெறி கொண்ட எஜமானுக்குத் துப்பாக்கியை நீட்டி 'இந்தாருங்க...இந்தாருங்க மிஸ்டர் பார்ட்லட், பய எதுத்தா தாட்சண்யமில்லாமல் சுட்டுத்தள்ளுங்க' என்று காதில் ஓதியது.

இந்த நிலையில் நீக்ரோ ஜாதியான் க்ஷணங்கூட நிற்காமல் பின்வாங்கி நடந்து கொண்டே இருக்கிறான். பயங்கரமான அவனுடைய வெள்ளை விழிப்பார்வை, பீதியும் வெறுப்பும் குடிகொண்ட பார்வை, எதிரியைப் பார்க்கவில்லை, அவனுக்கும் பின்னால் பளபளத்த மங்கிய நில உருக்குக் குழலை இடைவிடாமல் பார்த்தது. அவனுடைய கரங்கள் குருட்டுத்தனமாக, பயனற்ற ரீதியில் முன்னுக்கு நீண்டு மறித்தன. வெறும் காற்றைத்தான் மறித்தன. அவன் வெறுப்பைக் கொட்டிக் கொண்ட எதிரி, மேலுக்குமேல் அடித்துக்கொண்டே வந்தான். அவனுடைய கருப்பு முகத்தில் வாய்க்கால் வாய்க்காலாக சிகப்பு ரத்தம்

பிரவாகமெடுத்தது. மண்டையில் பொட்டுப் பொட்டென்று குறுந்தடி விழுந்து கொண்டிருந்தது.

'ஒங்க...நாசமாப் போன கருப்புக்களுக்கு...நாப்பய மவனே.' கொலை நிரைத்துக் குமுறியது அந்தக் குரல். எப்பிடி இருக்கணும்னு சொல்லிக் குடுக்கேன் பாரடா. படார். தடி மூக்கந் தண்டில் விழ சில எலும்பு சரசர வென்று நொறுங்கியது. நாசமாப்போன கருங்களுதே வெள்ளக்காரனை எதுத்துப் பேசரதா?—படார். பக்க வாட்டாக சரிந்து வாக்கற்று விழுந்த அடி வாயை ஒரே ரத்தக்குமையலாக்கி விடுகிறது. உருக்குக் குழலின் நீலப் பளபளப்பில் வைத்த கண் மாறாமல், அந்த நீக்ரோஜாதியான் நொறுங்கித் தூளாகி விட்ட பற்களைத் துப்புகிறான். அந்த நாசமாப் போனபய மண்டையை உடைத்துத் தருகிறேன்பாரு. கழுசடைக் கருப்புக் கூத்தியாமவனெ-என்ன மாச் சொல்லிக் கொடுக்கிறேன் பாரு. படார். சுருண்டு வளர்ந்த மயிர் நிறைந்த மண்டையோட்டின் மத்தியில் இப்பொழுது அடி விழுந்து குறுகிய நெற்றிக்குமேல் மாங்காய் மாதிரிபிளந்துவிட்டது.சக்தி துளும்பும் கருப்புருவம் 'கிறங்கித்' தள்ளாடிமுழங்கால் வளைய, தலை குனிய, கரங்கள் இன்னும் முன்போல் பரசலாக விரிந்தபடி, முதலில் ஒரு முழங்காலைவளைத்து, ஒரே ரத்த மயமான தலையை நெஞ்சில் மடியத்தொங்க விட்டபடி, கால் பூட்டுகள் குருட்டுத்தனமாகத் தள்ளாட, அடியற்றது போல் மண்ணில் குப்புறச் சரிந்து விழுந்தான். அடிக்குடலோடு குமட்டலெடுக்கும் இந்தக் கோரத்தனத்தின் சிகரமாக, பிரக்ஞை இழந்து ரத்தச் சகதியாக நைந்த முகத்தில், பூட்ஸ்காலின் கொலைகார உதைவிழுந்தது. அப்புறம யாவும் ஒடுங்கிய நிசப்தம். பார்க்கவோ கேட்கவோ ஒன்றுமில்லை. வெள்ளைத்தொந்தியில் முட்டிமுட்டித் திக்குமுக்காடி எழும் சுவாசமும் எலிப் பல்லைக் காட்டிய வெள்ளை எலி மூஞ்சியின் பீதி முடிந்த மூச்சும், மங்கி நிலம் இமைக்கும் விஷமுண்ட உருக்குந் தான் மிச்சம்.

அப்புறம்.

பீதியும் வெறுப்பும் குடி கொண்ட கோழையின் நெஞ்சு, தனக்கு ஆபத்து வராமல் கொல்ல விரும்பும் ஏக

வழியில் செல்லும் கோழையின் கொலைக்காமம், சுயமதிப்புக் கப்பல் உடைந்ததும் எலி சாயுஜ்யத்தைப் பெற, கையில் துப்பாக்கி ஏந்தி, காக்கியணிந்து, அதிகாரக் குதிரையில் ஆரோகணித்து இங்கு இப்போது கொலைத் தொழில் நடத்துகிறது. மூன்று பையன்கள்; எல்லோருக்கும் அந்தக் குத்தகைக் கம்பெனியில் தான் வேலை. இராத்திரிச் சாப்பாடு முடிந்த பின், கருக்கிருட்டில், இருளின் வருகையில் விமான மைதானத்தின் ஓரத்தின் பக்கமாக நடந்து செல்லுகிறார்கள். தண்ணீர்க் கரையோரமாக சமதளமான சதுப்பு மண்வழியாக, வீட்டைப் பற்றியும் ஊரைப்பற்றியும் படித்த படிப்பைப்பற்றியும், வாரக் கடைசியில் சம்பளம் வாங்கியதும் கடற்கரைக்கு உல்லாசப் பயணம் போவது பற்றியும் பேசிக்கொண்டு போகிறார்கள் : சர்க்கார் வெள்ளோட்டம் பார்த்து பரீட்சை செய்துகொண்டிருக்கும் போர் விமானம் நிறுத்தப்பட்டிருக்கும் கொட்டடியண்டையில் வந்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட இரகசிய இடம்என்பது அவர்களுக்குத் தெரியாது. திடீரென்று அந்த இடத்தைக் காவல் காத்து நிற்கும் சோல்ஜர் இடுப்புப் பெல்டில்தொங்கும் ரிவால்வரில் கை வைத்தபடி அவர்களை நெருங்குகிறான். திருட்டு விழிகள் இமைகளை 'இடுக்கிக்' கொண்டு பார்க்கின்றன. நகர எலிகள் மூஞ்சி, சாம்பல் பூத்து வரண்டு, திருட்டுப் பார்வை போட்டு, உதப்பும் உதடு சலசலத்து, மலடு தட்டி, ஜீவனற்ற சரசல் பேச்சை உதிர்க்கிறது.

'என்ன செய்யிரீங்க—தேவடியா மகனுகளா. இங்கே யாரு வரச்சொன்னு?—கொட்டடியைச் சுத்தி ஏன் வட்டம் போடுறே ?'

தெற்குக் கீழ் பிராந்தியங்களிலிருந்த சிறுவன் ஒருவன், செக்கச் சிவந்து அழகு குடிகொண்ட முகம், நேசமும் பரிவும் பேச்சில் குழைய, தயங்கித் தயங்கிப் பதில் சொல்ல முயன்றான்.

'ஏனையா, இப்படிப் போகலாம்.....'

மின்வெட்டுப் போல, அந்த எலி, பையனை வாயில் அறைந்தது. பையனுடைய செக்கச் சிவந்த கன்னத்தில்,

அழுக்குக் கரைபிடித்த விரல் நுனிகள் முத்திரையிட்டன. அவன் ஜீவனுடைய முக மண்டலத்தில் அழித்துத் துடைக்க முடியாத அசிங்க முத்திரையை வைத்தன.

'பதில் பேசாதேடா. நீ என்ன நெனேச்சா எனக்கென்னடா. மறு வார்த்தை பேசினு சுட்டுக் கொதிக்க வச்சுப்புடுவேன், ஹூம் யாருகிட்டே. அவன் இடுப்பிலிருந்த துப்பாக்கியை உருவித் தயாராகக் கையில் எடுத்துக் கொண்டான். மந்தித்த பீதி, மந்திரம் போல் கட்டுண்ட நம்பிக்கையின்மை கவிந்து ஒரே சொருகாக நீலக் குழலின் மங்கிய பளபளப்பின் மீது மூன்று சிறுவர்களின் பார்வையும் தைத்தது.

'சரிதாண்டா. போங்கடா' என்று பையனை அறைந்த வீரன் கதாவன மற்ற கையைவைத்து அவர்களை நெட்டித் தள்ளுகிருன். 'எல்லாரும் ஓடிப்போங்க இல்லாட்டாக்க—' அந்த மகா பெரியவர் உறுமுகிருர். கண்கள் பாம்பு மாதிரி பளபளக்கிறது. முகம் பயமுறுத்தி அவர்களை நெருங்குகிறது. 'இன்னும் பேசினு சுட்டுத் தள்ளுவேன். ஓடுங்கடா. சுட்டுதள்ரத்துக்கு முன்னலே ஓடிப்போங்க.'

மூன்று சிறுவர்களும் திக்பிரமையடித்து, மனங் குழம்பி வெட்கத்தால் குன்றிப்போய், ஒரு கணத்திற்கு முன் நெஞ்சில் சுனையூரிய சந்தோஷம், நம்பிக்கைகளும் அஸ்தமித்து விட, திரும்பி, மௌனமாக மரத்துப் போய் வெட்கச் சுமையால் முதுகு குனிய, யுத்தம் சாகுபடி செய்த மிருகத்தனமான, உள்ளத்தைக் கரும்பும் குரோதம் உள்ளத்தைச் செல்லரித்துத் துளைக்க நடந்தார்கள்.

இனியும்.....

மனிதனுடைய ஆசை நிர்வாணமாக, மிருகத்தனமாக, அதிகாரத்துடன் பற்றி யிழுத்து, கண்ட கண்ட உணவை எல்லாம், பசியின் அகோரத்தால் கிழித்துக் குதறி எதையும் சட்டை செய்யாது தன் வசமாக்கும் அடிமாண்டு போன நிலையில் இங்குபோல அங்கும் நிலவுகிறது.

பாலத்துக்கு அப்பால், ரயில் பாதையைத் தாண்டி, நியூபோர்ட் நியூஸ் நீக்ரோச் சேரியில் புடை நாற்ற

மெடுத்து வரண்டு புகையடித்து துரு ஏறிய குடியிருப்பு களிலும் குப்பங் குடிசைகளிலும் இது சஞ்சரிக்கிறது. வர்ணம் பூசாத மொட்டை மொழுக்கென்று பைன் மரப் பலகைகளை இணைத்துத் தைத்து யுத்தத்தின் அதிரடி வேகத்தில், எழுப்பப்பட்ட குரல்: பசியைப்போல் தெவிட்டுதல் காணுது வாழ்வைப்போல் வயசுற்ற மிருகத் தனமான குருட்டாசையைத் திருப்திப் படுத்த அதே அகோரரூபத்தில் அமைந்து நிற்கிறது. உலக மாத்யந்த மும் உலாவித் திரியும் நேசமற்ருேர் வீடற்ருேர் தேவையே இது.

கரடு முரடான, புதுத் தன்மை மங்காத அழுக்கு மண்டும் இந்த இடத்தின் முன் பகுதி சாப்பிடும் அறை, பானம் அருந்தும் முன் கூடம் என்று இரண்டாகப் பலகை அடைத்துப் பிரிக்கப்பட்டிருக்கிறது. உள்ளே நாலைந்து மேஜைகள். சாப்பாட்டு லிஸ்ட் காட்டி. ஈ மொய்த்திருக்கும் கார்ட்கள் அதன் மேல் குத்தி நிறுத்தப் பட்டிருக்கின் றன. வந்தாதரிப்போர் அதை ஏறெடுத்துப் பார்ப்ப தில்லை. மரப் பலகை கணக்கு மேஜை என்று ஒரு புறம் அத்துவான வனந்தரமாக, அதன் ஜோடனைகளுடன்— வெதுப்பு இறங்கும் சோடா ஸிரின்ஜ், நாலைந்து சிகரெட் பெட்டி, ஒரு சுருட்டுப் பெட்டி, முதலிய வகையராக்களைத் தன்னுள் அடக்கும் ஒரு கண்ணுடி கேஸ். நாற்றமெடுத்த பாலேடும் பன்றிக் கறியும் கொண்ட கண்ணுடிப் பெட்டி— முதலிய ஜோடனைகளுடன் அங்கே நிற்கிறது. பாலேடும் பன்றிக் கறியும் கடை வைத்த நாள் முதல் குடிபுகுந்து வாழுகின்றன. யுத்தம் முடியுமட்டும் அப்படியே அங் கேயே குடி வாழும்.

அறை முழுவதிலும் வேசிகள், மெல்லிய நீண்ட அங்கி போட்ட வேசிகள், பறிமாறுவோராக கூட்டத் திடை இடைவிடாது சஞ்சரித்துத் தம் தொழிலை நடத்து கின்றனர். அங்கு உட்கார்ந்திருந்த மனிதர்கள் யாவரும் வகுப்பு வள முறைக்குள் அடங்காதவர்க்கம். திசையற்று ஜீவநதியிலே மிதந்து செல்லுகிறவர்கள். இன்று உழைப்பு நாள், ஓய்ச்சல், மறுபடியும் திறையற்ற மிதப்பு, பட்டினி, சற்று சிறைவாசம், சற்று வெளிவாசம் அழுக்

கும் அடிமாண்ட வரட்சியும் பட்டினியும் பசியும் பிய்த்துத் தின்ன அதிர்ஷ்டமிழந்து, ரயில் வண்டிகளில் அடிக் கம்பிகளைத் தொத்திக்கொண்டோ, அல்லது மிருக ராசிகளுக்கான குட்ஸ் பெட்டிகளிலோ சவாரி செய்து, ஊர்ப்பயணம் செய்து கொந்தளித்து வெந்து காயும் நாடோடிக் கானகத்தில் உணவு பறித்து உயிரைப்பற்றி உலாவித்திரியும் உடலங்கம். திடீரென்று பணமும், அற்ப சுபிட்சமும் அவர்களைத் தலைதெறிக்க வைத்துவிடும். அர்த்தராத்திரியில் குடைபிடித்து விடுவார்கள். ஜீவநதியிலே மிதந்து செல்லும், பெயரற்ற, வீடு வாசலற்ற வேரூன்று வர்ஜா வர்ஜமற்ற வகுப்பு இந்த மனிதப் பிராணிகள். இவை தேசத்தை மொய்த்துச் சுற்றுபவை.

இவர்கள் இந்தபூவுலகத்திலே மனிதக் கரிப் பிண்டங்கள். எரிந்து கருகிப்போன கரிக்கட்டைகள். கருப்போல் வரண்டு, அழுக்கேறி, வருஷம் வரையும் கோடுகள் சுமந்த முகம் பெற்று, வேற்றுமை காட்டாது வறுமையின் ஏக ஜாடைபெற்று அலைபவர்கள் இவர்கள். அன்றுகாலை தான் வேறு நகரத்து ரயில்ஸ்டேஷனில் கூட்ஸ்வண்டியிலிருந்து ஊர்ந்து வெளியே வந்த ஜந்துக்கள் போலத் தோன்றும். சற்றும் கவலையற்றுப் பார்த்துக்கொண்டு கையில், அட்டைப் பெட்டி ஒன்று சுமந்து (ஒரு ஷர்ட், இரண்டு காலர் ஒரு கழுத்துப்பட்டி இவைதான் அதிலுள்ள ஆஸ்தி) நடமாடுவார்கள் இந்தப் பிராணிகள். எங்கிருந்தோ நெடுந்தூரம் கடந்துவந்தவர்கள் என முகத்தில் எழுதி ஒட்டியிருக்கும். அவர்கள் அறுதைப்பட்டது போன்ற ஒரு அவலம் அவர்கள் முகத்தில் தெறிக்கும். துரு ஏறி இயங்கும் ஒரு மனிதப் புள்ளி நிர்வாணமாக, அவனைக் கவித்து மூடும் வரட்சியுள்ள வானத்தின் கீழே அகோரமான மகா கானகம் என்ற பூலோகத்தில் எற்றுண்டு கூட்ஸ் வண்டியடிக் கம்பிகளில் ஓட்டித் தொங்கும் துருவாக இயங்குகிறது.

நிர்வாகனமாக, பெயரற்று வேரற்று, ஒரு ஜீவனுடன் பொருந்தியுள்ள தனித்தன்மையும் அந்தரங்கமும் வாய்ந்த விசேஷங்கள் யாவும் உறிஞ்சப்பட்டு, துரு இரும்பு—வியர்த்தம் என்ற வரம்பற்ற சூன்யத்திலே,

ஏகாங்கியாக தொடர்பற்ற தொலேவுகளிலே உந்தப்பட்டு இயங்கும் மனிதக் கரிக்கட்டைகள் இந்த ஜீவராசிகள்.

கடைசியாக இந்த மனித அணுக்கள் இந்தக் கண்டத்தின் கண்ணற்ற இடத்தில், கொல்லிப் பாவையின் கண்ணெதிரில் உயிரைக் கக்கி வெடித்து மடிகின்றனர். தடத்தில் தெரிந்த ரத்தமும் அலறிக் கழலும் சக்கரக் குமுரலில் இடுங்கி மடியும் மனிதக் கிரீச்சுக் குரலும் ரயில்வண்டியின் அடித்தண்டுகளில் சுற்றித் தொங்கும் குடலும் ரயில் பாதைக் கட்டையில் என்னவென்று அடையாளம் பிரிக்க முடியாதபடி மூளேயும் சதையும் எலும்பும் ரத்தமும் சொட்டுச் சொட்டாகத் தெரியும் தடங்களுமே அதன் சமாதி. அல்லது நகரத்துத் தலேவாசலிலோ பாலத்து அடியிலோ, சுருண்டுவடிவம் மாறி அழுக்குக் கந்தை சுற்றிய மனித மூட்டையாக விரைத்துப்போய் ஜீவனற்று, போலீஸார் வந்து வண்டியிலேற்றி அகற்ற, வாழ்விலே பெயரற்று மறக்கப்பட்டு அலேந்ததுபோல் சாவிலேயும் அந்தப்படியே அகற்றப்படும்படி காத்திருக்கும்.

இப்படிப்பட்டவர்களே இந்த மேஜைகளருகில் சூழ விருந்தனர். இந்த அவசர ஆசைக்கொட்டிலில் அமர்ந்து இருந்தார்கள். திருட்டு விழி போட்டு வலேபோட்டு அரிப்பதுபோல் கணக்கெடுக்கும் பாவனேயில் தயங்கி, கோணல் சிரிப்போடு ஆட்டு விழிவிழித்து அமர்ந்திருந்தார்கள்.

அவர்களுக்குப் பரிமாறியவர்களோ, வடக்கு, மத்ய கிழக்குமாகாணங்களிலிருந்து திரட்டிக்கொண்டுவரப்பட்ட வேசிகள். மிலேச்சப் பேராசையும், பேய்ப்பசியும், சோர்வுற்ற கண்ணும், வரண்ட முகமும், தம்முடைய ஜீவனோபாயமான தொழிலில் யந்திரம்போல் இயங்கி, இடம் கொடுத்து சொற்ப அவகாசத்திற்குள் கிடைத்ததைச் சுருட்டுவதையே ஏக நம்பிக்கையாகப்பற்றிப் பிடித்து உயிர் வாழும் ஜாதி அது. குரல் கரடுமுரடாகத் துருவேறிக்கிறீச்சிட்டது. வேண்டுமென்றே அசிங்க வார்த்தைப் பாராயணம் பண்ணித் தன்னே முரடியாய்க் காட்டிக் கொண்டு தன்னேப் பாதுகாத்துக்கொள்ள முயன்றது. பெரிய நகரத்துச் சேரிக் குடில்களில் வசிக்கும் ஜீவராசி

களின் குணம் அது. அங்கு தழைக்கும் குழந்தைகளிட மும் அதைக் காணலாம்.

ஓயாத ஆணை, ஓயாத வசவு, ஓயாத கேலி, நையாண்டி, நாக்கில் நரம்பற்றுப் பேசுவது, ஓயாத பீதி, ஓயாத கொடுமை—இவை யாவும் அவர்களைச் சூழ உலா வித்திரியும் பேய்ப் பசியின் பிடுங்கலின் விளைவாகப் பிறந்தவை. கைத்துப் போன வாழ்வில் கையில் பட்டதை 'கல்நார் உறிச்சு' எப்படியோ காலந்தள்ளும் ரீதியில் நடமாடித் திரிவதால் இவர்கள் தம்மிடம் நல்லதன்மை இருப்பதாக இளகிய மனசு குடி கொண்டிருப்பதாகக் காட்டிக் கொள்ளப் பயப்படுகின்றனர். இந்தக் குணங்கள் இவர்களை 'இவர்கள் போன்ற சகாக்களான ஆபத்துக்களில் சிக்க வைத்து அவர்களது தாக்குதல், கொடுமை, ஜபர்தஸ்து முதலியவற்றிற்குத் தம்மை ஆட்படுத்தி விடலாகாது' என்பதே இவர்களது ஓயாத கவலை.

இந்தப் பெண்டுகளும் அப்படித்தான். புகை மண்டும் அந்த அறையில் அவர்களது கமறல்குரல், கரகரத்துக் கேலி மண்டும் சிரிப்பு 'அட, சேங். அடகிருஸ்து' 'எனக்கென்ன ஆத்தரண்டா வாயேன். இப்பொ என்னடா பண்ணப் போறே, எனக்கு வேறே வேலையில்லே 'வேணும்'னு காசெக் களத்து இல்லாட்ட கம்பியை நீட்டு' என்று வாய்க்கு வந்தபடி யெல்லாம் வெடிபடும் பேச்சு இவை தான் இவர்கள் சரக்குகள்.

இப்படியிருந்தும், இந்த நைந்து போய் மிருகமாகி, பீதி உந்த நடமாடித்திரியும் ஸ்திரீ ஜாதியில், வாழ்விலிருந்து நசுக்கி தேய்த்து விட முடியாத தொன்று பரிதாபகரமாகக் கனிந்து கொண்டு இருக்கத்தான் செய்கிறது. உள்ளுக்குள்ளே புதைபட்டு சமாதியாகிக்கிடக்கும் பரிவு, பீதியோடு, நேசத்தை, உள்ளன்பைத் தேடித் துழாவும் மனசு, மென்மை, ஏன் அன்புகூட, இந்த நாசமாகி அஸ்தமித்துப் போன மனிதக் கரிக்கட்டைகளிடத்தே தேடித் திரிகிறது.

தயங்கித் தயங்கி மறியும் உடலொட்டிய இந்த வேட்கை, தங்கள் ஜோலியைச் செய்து இவர்கள் நடாத்தும்

வாழ்வினிடையிலும்,வெளிக்கு அகோர கேலிக்கூத்தாகத் தோன்றிலும், மேஜைக்கு மேஜை போஷகர் தேடி நடக்கும் போது சர்வ ஜாக்கிரதையோடு எட்டி எட்டிப் பார்க்கத்தான் செய்கிறது. இப்படியாக, இவர்களிடம் வைது முரட்டுத்தனமாகப் பேசுகிறவனிடத்தில்—அது தான் இங்கே சாதாரண வழக்கம். அதேரீதியில் அவனுக்குப் பதில் சொல்லுவார்கள். ஆனல் அதற்கு மாருக அமைதியாகப் பேச்சுக் கொடுத்தால், சற்றுப் பரிவோடு 'பார்வை விட்டால்' அவர்கள் தங்கள் கமரல் குரலை அடக்கி, மூச்சாக வெளிவரும் குசுகுசுப்புப் பேச்சோடு, அவனை இடித்துக்கொண்டு பயங்கரமான, பரிதாபகரமான குழைவு காட்டி, வர்ணமேற்றிய மூஞ்சிகளை அவனருகில் கொண்டு வந்து, கவர்ச்சிப்பாவனையைக் காட்டி நடப்பார்கள். இது மாதிரி.

'ஹெலோ, பெரிய தம்பி. ஏண்டா தனியா குந்திக்கினு நிக்றே, சும்மாஞச்சு உக்காந்து மடியிரே.'

'பேச்சுத் தொணேக்கி ஆளு வாணும். உம்.' வர்ண மேற்றிய உதட்டிடை பல்லிளித்துக் காட்டி அவன் மீது ஒண்டிச் சாய்ந்து கொண்டு 'வெள்ளாட வாரியா கண்ணுக் குட்டி. வாடா எங்தொற மவனே — வாயேன்'... என போஷகன் கை பிடித்திழுத்து, 'பொளுது களியுதே தெரியாது' என அழைப்பார்கள்.

இந்த மாதிரி ஒரு கூத்தில் சிக்கிய ஒரு பையன் மேஜையை விட்டு எழுந்து, ஒருத்தியுடன், புகைமண்டும் அறையைவிட்டு ஒரு பக்கத்தில் செல்லும் ஒடுங்கிய பாதைக்கப் புறமிருந்த கதவைத் திறந்து கொண்டு பின் புறமிருந்த விபசார விடுதியின்-தனிக்கொட்டிகளுக்குப் போனன்.

இங்கே, காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எதிரிலிருந்த தனி அறைகளில் ஆட்களிருப்பது சப்தம் கேட்டது. இந்த இட வசதி நோக்கி ஜோடி ஜோடியாக ஆடம்பர வெறி 'சக்தி—சிவங்கள்' காத்து நின்றன.

இந்த ஜோடி உள்ளே நுழைந்ததும் அங்கு நின்ற ஒருத்தியைப்பார்த்து. 'ஹலோமே. கிரேஸைப் பார்த்தியா?' என்றாள்.

வாயிலிருந்து புகைப்படலத்தை வெளிவிட்டுக்கொண்டு 'ஏழாம் நம்பரிலே பாரு. ஒரு வேளை அங்கே இருப்பா' என்றான்.

இப்படித் தனக்குத்தெரிந்த தகவலை 'மெட்டாக'வெளி விட்டு விட்டு தன் பக்கத்திலே நிற்கும் அமெரிக்கக் கடற் படையைச் சேர்ந்த முரட்டு மாலுமியைப் பார்த்து, 'ஏண்டா பையா காத்துக் காத்து கால்கடுத்துப்போச்சா?' என்று கேலி செய்தாள். இன்னம் நேரமாவாது. அடுத்த நிமிசம் நாம் போவோம்' என்றாள்.

இந்த ரீதியிலே பேச்சுப் பாவனையும், காமம் மண்டும் கேலியும், சிரிப்பும் அந்த வரிசையில் ஓயாது எழுந்தது. வேறு சிலர், உள்ளிருப்பவர்களைக் கதவைத்தட்டி முடுக்கிக் கொண்டிருந்தார்கள்.

அது வெந்து வழியும் ஆகஸ்ட் இரவு...என்பதில் துளிக்கூட ஐயமில்லை. ஹால் வெந்து ஒழுகியது. கும்மிப் போன முடை நாற்றம் எண்ணைக் கசடு பிசுபிசுத்துக் குமட்டலெடுக்க வைத்தது. அறை முழுவதும் நாற்றம் பிடித்த சிகரட் புகை வெளிச்செல்லாது மண்டிச்சுருண்டு, மனிதர்களுடைய உடலின் கற்றாழை, நாற்றம் பெண்டுகள் போட்டிருந்த மூக்கை அறுக்கும் வாசனை, கடைசியாக நிர்வாணமாக மிலேச்சத்தனமாக மனிதனுடைய காமக் கரும்பு மறக்க முடியாத நாற்றமாக உருவெடுத்து, தைத்துக் கோத்த பைன் பலகைச் சாவடியில் மரக்கந்தத்துடன் கலந்து மனதில் அதே அகோர ரூபத்தில் ஒட்டிக் கொண்டது.

கடைசியாக, இந்த மூச்சுத் திக்கு முக்காடும் ஹாலில் நெடுநேரம் காத்திருந்து அதனிடை எத்தனை ஜோடியோ வெளியே வந்தது. எத்தனை ஜோடியோ உள்ளே சென்றது—பையனும் பெண்ணும் வரிசையின் முதல் ஸ்தானத்தைப் பெற்றார்கள். பின்னால் ஓயாது அலப்பிக்கொண்டி

ருக்கும் ஜோடி வகைகள், முன்னால் குருட்டுக் காமக் குமுறல்.

கடைசியாக அவர்கள் காத்து நின்ற கதவு திறந்தது. ஒருவன் வெளியேறிப் பின்னால் கதவையடைத்துக் கொண்டு சென்றான். பிறகு ஒரு கணம் நிசப்தம். மறுபடியும் வாயசப்பல். 'இன்னும் என்ன செய்துகொண்டிருக்கிறாள்' என்ற ஜோடியின் முணமுணப்பு. கடைசியாக அந்தப் பெண் 'ஏண்டி. உள்ளே யாரு. வாயேண்டி வெளியே. வளியை மறிச்சுக்கிட்டு கிடக்காதே' என்று உறுமினாள்.

உள்ளிருந்து ஒரு ஸ்திரியின் சோர்வுக்குரல் கேட்டது.

'சரிதாண்டி. ஒரு நிமிசத்திலே வாரேன் சித்த பொறுத்துக்கோ' என்றது.

'ஓ' என்றாள் அந்தப் பையனுடன் நின்ற பெண்.

'அவள் மார்கெரட்டு. பாவம் சோந்து களைச்சுப்பூட்டிருக்கும்' என்று இளகிய குரலுடன் சொன்னாள்.

'குட்டியம்மா. என்னமா இருக்கு? ஒத்தாசைக்கு வரட்டுமா?' என்று பரிவுடன் குரல் கொடுத்தாள்.

'அதெல்லாம் வேண்டாம்' என்று சர்வ சோர்வுடன் தள்ளாடியது உள்ளிருந்த பெண்குரல். ஒரு நிமிசத்திலே வந்துடுறேன். ஏன் நீயுந்தான் வாயேன்' என்று குரல் கொடுத்தது.

அந்தப் பெண் மெதுவாக ஓசைப்படாமல் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள். கொதிப்பேறிப் பச்சைக்கழைபோல் சிர்குலைந்து பயங்கரமாகக் கிடக்கும் அந்த அறையின் சிர்வரிசைகளைச் சொல்லி முடியாது. ஒரு நாற்காலி. அதற்குப் பக்கத்திலே குலைந்துகிடக்கும் படுக்கை. பக்கத்திலே ஒரு குட்டி மேஜை. மேஜையின் பேரில் ஒரு பொம்மை. இடுப்பில் ஒரு ரிப்பன் கட்டியிருந்தது. பக்கத்தில் அதனுடன் சேர்த்துக்கட்டின ஒரு மாலுமித்தடியன் போட்டோ. 'எனக்கு நிசமாகக்கிடைத்த ஒரே சினேகிதி மார்கெரட்டு'—எட்டி நின்ற ஷரத்துகள் நின்றது. பக்கத்திலே ஒரு சிகரட் பெட்டி, மேலே ஒரு மின்சார

விசிறி ஆடியது. புழுங்கி வழியும் காற்றைச் சுருட்டிச் சுருட்டியடித்தது.

அடிக்கடி அந்த விசிறிகள் சுழற்சியில் ஒரு கோணத்தில் வரும்போது, கட்டிலிலே களைப்பே உருவாய் அல்லித் தண்டுபோலக் கிடந்த பெண்ணின் முகத்திலே வீசியது. அப்போது பட்டுப்போல் மென்மையான கபோல ரோம ராசி ஒன்றைத் தலைசுற்றி ஆட வைத்தது.

அந்தப் பெண் சற்று நெட்டையாக, ஒல்லியாக, கட்டிலிலே நீட்டிப் படுத்துக் கிடந்தாள். ஒருபுறம் மறிந்து கிடந்த கையில் சோர்வு கொழுத்தோடியது. மற்றொரு கையைமடக்கித தலைக்கடியில் வைத்துப் படுத்திருந்தாள். முகம் அழகு குடிகொண்டிருந்த இடமாற்றும் சோர்வும் பட்டினியும் வதங்க வைத்துவிட்டது. அவள் ஒருபுறமாகக் கண்களை மூடிக் கைகளை முட்டுக்கொடுத்துக் கிடந்தாள். கண் இமைகள் ரத்த ரேகையைக் காட்டின. சோர்வால் நொந்துகிடந்தன.

வந்தவள் மெதுவாகச்சென்று கட்டிலில் அவள் பக்கத்தில் உட்கார்ந்து, பரிவோடு பேச ஆரம்பித்தாள். படுத்துக் கிடந்தவள் கண்ணைத் திறந்தாள். சிரித்தாள். போதையில் தூரத்தில் அலைந்த புத்தி தயங்கித் தயங்கி குடிபுகுவது போல இருந்தது அந்தச் சிரிப்பு.

'என்னம்மா, என்ன கண்ணே சொன்னே. எனக்கு ஒன்றுமில்லே' என மெதுவாகச் சொன்னாள். உட்கார்ந்திருந்தவள் ஒத்தாசையுடன் எழுந்து உட்கார்ந்தாள். நாற்காலியில் கிடந்த உடையை இழுத்துப் போட்டுக் கொண்டாள். பிறகு புன்சிரிப்போடு எழுந்து நின்றாள். மேஜையிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டாள். வெளிவாசலண்டை காத்து நின்ற பையனைப் பார்த்துக் கிண்டலாக 'இப்ப உள்ளே வரலாண்டா' ஜார்ஜியா என்றாள். அவள் குரலில் கமரல் லேசாகத் தொனித்தது. இருந்தாலும் மகிழ்ச்சியோடு பேச்சு வெளிவந்தது என்பதை தொனிப்பு காட்டியது. போஷகர்களை எல்லாம் 'ஜார்ஜியா' என்று குத்துமதிப்பாக ஒரு பேர் வைத்துக் கூப்பிடுவது வழக்கம்.

அவன் தயங்கித் தயங்கி உள்ளே வந்தான். பார்வையில் திக்பிரமை வெறித்துக்கொண்டு தெறித்தது. அவனைப் பார்த்த நிமிஷத்திலேயே அவனை அடையாளம் கண்டு கொண்டுவிட்டாள். அந்தப் பையன் படித்த சர்வ கலாசாலை இருந்த ஊரிலே ஏழைகளானாலும் நாணயமாக ஜீவித்த குடும்பத்தில் பிறந்தவன்தான் அவன். நகரத்தில் எல்லோருக்கும் தெரிந்த குடும்பம் அது. இரண்டு வருஷங்களுக்கு முன்னால் அவன் திடீரென்று எங்கோ மறைந்து போனான். அங்கே படித்த மாணவனோடு 'தப்புத் தண்டாவில் சிக்கிக்கொண்டவன்' என்ற வதந்தி சற்று அடிபட்டது. அதற்கப்புரம் அவனைக் கண்டதோ கேட்டதோ கிடையாது.

'ஊரிலே எல்லாரும் எப்படி? சௌக்கியந்தானே' என்று கேட்டாள் அவள்.

சாம்பல் வர்ணத்தில் பள பளத்த அவன் கண்கள் கடினம் காட்டியது. மெலிந்து வாடிய சின்ன முகத்துச் சின்னவாய் கத்திபோல் கடினம் காட்டியது. குரல் கடினங் காட்டி ஈட்டிபோல் கிண்டி, கிண்டல் செய்தது. ஆனால் எதிர்த்து அடிக்கும் பாவனையிலும் ஒரு அபூர்வமான பரிவு ஒட்டி இயங்கியது. அவனுடைய தோளில் மெலிந்த கைகளைப் போட்டாள். அன்னியமான உலகத்திலே எதிர்பாராதபடி தெரிந்த முக தரிசனம் கிட்டியதால் ஏற்படும், ஞாபகத்துடன் இயங்காத, திடீர் பரிவு அச்செயல்.

'அவர்கள் சௌகரியமாகத்தான் இருக்கிறார்கள்' என்று குழறினான் அவன். தட்டுக்கெட்டு நிற்பதால் முகம் சிவக்க ஆரம்பித்தது.

'எனக்குத் தெரிஞ்சவர்களைப் பார்க்க நேர்ந்தால், எனக்காக அவர்களிடம் குரல் கொடுத்து நானும் நன்றாகத்தான் இருக்கிறேன்' என்று சொல்லு. என் அன்பைச் சொல்லி அனுப்பி வைத்ததாகச் சொல்லு' என்றாள்.

'சரி அப்படியே ஆகட்டும். நிச்சயமாகச் செய்கிறேன்' என்றான் அவன்.

'ஜார்ஜியா ஒம்மேலே கன கோவம் எனக்கு. வந்தவன் எனக்குச் சொல்லி அனுப்ப வாண்டாம்? அடுத்த தரம் வந்தா என்னைக் கூப்பிட்டுவிடு. இல்லாட்ட எனக்குப் பெரிய கோவம் வரும். ஒரு ஊருக்காரர் ஒண்ணு ஒட்டி வாழாமெ முடியுமா? மார்கரெட்னு கேளு. எங்கேயிருந்தாலும் ஓடியாந்துடறேன்—தெரிஞ்சுச்சா?' என்று மறுபடியும் உத்யோக—கொச்சையில் இறங்கினாள்.

'சரி ஆகட்டும். ஒன்னையே கூப்பிட்டு விடுகிறேன்' என்று குழறினான் அவன். அவள் அவனை ஒரு கணம் கடின பார்வையுடன் நோக்கினாள். கசந்த, அபூர்வங் கலந்த சிரிப்புக் குலையவில்லை. விரல்களை அவன் சிகைகளில் விட்டுக் கோதிக்கொடுத்தாள். மற்றவளைப்பார்த்து 'அவனைப் பரிவாப் பார்த்துக்கொள். எங்கூர்க்காரன். போய்ட்டு வாரேன் ஜார்ஜியா. அடுத்த தடவை வந்தா எம்பேரைச் சொல்லிக் கேக்கணும். போய்ட்டுவாரேன்' என்று விட்டு வெளியேறி, மூச்சுத்திணறி முடைநாற்றம் வீசி, குருட்டாசை கைகாட்டிஅழைத்துத் திரியும் குறுகிய உழலுக்குள் நைந்த மெல்லிய உடம்பை ஆயிரத்தோராந்தடவை விற்பனை செய்ய அங்காடிக் கடைக்குள் மறைந்துவிட்டாள். கூப்பிடவும் கைப்பற்றவும், வந்தவரை அங்கீகரிக்கவும் அந்த இருட்டென்ற நாழி குலுக்கிப் போடும் ஆயிரமாயிரம் பெயரற்ற பிராணிகளில் ஒன்றைப் பொறுக்கி எடுக்க மறைந்துவிட்டாள்.

அதன் பிறகு அவன் அவளைப் பார்க்கவே இல்லை. யுத்தம் என்ற சுழிப்பு அவனைத் தன்னுள் இழுத்துச் சொருகிவிட்டது. விஸ்தாரமான, குரூரமான மந்திரோச்சாடனம்போன்ற மகா அமெரிக்கா என்ற ஆழங்காண முடியாத பாதாளம், குருட்டாட்டமாடும் குழப்பத்தினுள் அவனை இழுத்துக்கொண்டுவிட்டது. அங்கேதான் நாமும் ஜீவிக்கிறோம். அன்னியராக நடமாடுகிறோம். அங்கேதான் நாமும் குள்ள மனிசர்களாக, தனிமைப்பட்டு, கைவிடப்பட்டு, கடைசியாக ஒரே கவளமாக உள்ளிழுக்கப்பட்டு, பெயரற்ற அனந்த கோடிகளின் சமாதியான இருளுக்குள் மறக்கப்பட்டு மறைகிறோம்.

இதுதான் யுத்ததேவதையின் பேரழிவு என்ற மூன்ருவது முகமண்டலம். ஆசையின் உருவச்சிலே. யுத்தத்தின் முகம்.

அப்புறம்...

யுத்தத்தின் திடீர் தீர்மானத்தின் வேகம், அவசரம், கொடுமை, மிருகத்தனமான ஹாஸ்யம்....

வேர்த்து வடியும் மத்யானம்.

நியூபோர்ட் நியூஸ் நகரத்தில் வெடிமருந்து ஏற்றுமதி செய்யும் துறைமுகம். அங்கே ஒருபையன் தணிக்கைக் கணக்களுக வேலே செய்கிருன். துறைமுகத்துக்குள் இருக்கும் பெரிய ஷெட்டில் உள்ள 110 டிகிரியில் மூச்சைத் திக்குமுக்காடவைக்கும் வெக்கை, மௌனமாடும் புழுக்கம். அழுக்கேறி காற்றில் தூசித்தூள் மிதக்கிறது. உயரமாக நிற்கும் சூட் யந்திரத்திலிருந்து தான்யவகை ஓயாத பிரவாகமாக கீழே விழவிழ சாக்குச் சாக்காகக் கட்டப்பட்டு அம்பாரம் அம்பாரமாக அடுக்கப்படுகிறது. இந்தத் தான்யத் தூசிதான் தகதகவென்ற தங்கத்தூள் மாதிரிக் காற்றைக் கொழுக்கவைக்கிறது.

துறையில் மற்ருெரு பக்கத்தில் யுத்தத்தின் கருவிகள் கோபுரமெடுக்கிறது. பெரிய பெரிய கிரேட்டுகள் (மரப்பெட்டிகள்) நிறைய சகலவிதமான உணவு வகைகளும் கறி, பழம், பயறு, வெடிமருந்து-வாழ்வையும் மரணத்தையும் போஷிக்கும் சகலவிதமான உணவு வகைகளும் அடுக்கடுக்காக வைக்கப்பட்டிருக்கிறது. தொலேயிலே தீராப் பசியோடு வாங்கி வாங்கி உண்ணுகிறது அரசு செலுத்தும் யுத்த தேவதை.

கொதித்துக் குமையும் வெப்பக் காற்றில் சகல விதமான மணங்கள் கமழ்கின்றன. தான்யக் கமறல். நைந்த சாக்குச் செடி, புதிதாக அறுத்துத் தைத்த கிரேட்டுப் பலகை வாசனே, போழை போல் கதம்பக் கமறலாக பல்லாயிரங் கோடி அடை படா அசுத்தங்கள். நாற்றங்கள் இறங்குதுறையில் முட்டித் ததும்பி மூளேத்தெழும் சோதியாய் சர்வ பரிபூரணமாய் நினேவில் குடியேறித் தனியரசு

செலுத்துகிறது. அதிலே தண்ணீரில் கிடந்து கிடந்து ஈரங்கசிய நாறும் மர உத்தர வீச்சம் வேறு.

இப்போது வேலை எல்லாம் ஓய்ந்து விட்டது. அதனுடன் அந்தத் துறைமுகத்தின் சந்தடியும் ஓய்ந்து விட்டது. டிரக்கு வண்டிகளின் கடமுடா, கப்பல் மேல்தட்டில் தறையிட்டு நிற்கும் சாமான் தூக்கும் யந்திரச் சங்கிலியின் சணசணப்பு, சாமான் ஏற்றுமதியில் காணப்படும் சகல சந்தடிகளும் ஒடுங்கி விட்டன. அதற்குப் பதிலாக அதி காலையிலிருந்து, துறைமுகத்துக்குள் காக்கியுடை அணிந்த தளவரிசைகள் சாரை சாரையாகக்கப்பலுக்குள் ஏறி அதன் வயிற்றுள் அஸ்தமனமாகி விடுகின்றனர். அந்தக் கப்பல் இன்னும் இன்னும் என்று காத்து நிற்கிறது.

நீக்ரோ மாட்டுக்காரர்கள் மூட்டைமேல் சரிந்து கண்ணயருகின்றனர். கணக்கர்கள் மூட்டைக் கிடுவலில் குமைந்து ஐன்னி வேகத்தில் சூதுருட்டுகிறார்கள்.

துருப்புகள் பட்டாளம் பட்டாளமாக வந்து குவிகின்றன. சாரை சாரையாகவரும் வரிசைகள் இடையில் சற்று நிற்கின்றன. முதுகுச் சுமைகளை நகர்த்திவிட்டு வலியை நகர்த்திக் கொள்ளுகின்றன. தொப்பியை அகற்றுகின்றன. நெற்றியில் வடியும் வேர்வையை புறங்கையால் துடைக்கின்றன. தனக்குள் வைது கொள்ளுகின்றன. மறுபடியும் சாரை ஊர்வதற்காகப் பொறுமையுடன் காத்து நிற்கின்றன.

கப்பலின் பக்கத்தில், ஏறுபாதை ஓரத்தில் சில ஆபீஸர்கள் மேஜையருகில் உட்கார்ந்து துருப்புகள் கப்பலுக்குள் ஏறும்போது ஒவ்வொருவருடைய தஸ்தாவேஜியையும் பரிசிலனை செய்துகொண்டு கையெழுத்தைக் கிறுக்கி, உடமஸ்தன் ஆசைப்பட்டுத் தவிக்கும் யாத்திரைக்கு, புதிய தேசத்துக்கு, அவன் வேட்கை கொண்ட புகழுக்கு, சண்டையின் கணக்கிட முடியாத அபாயங்களுக்கு, மரணத்திற்கு, வியாதிக்கு, விவரம் தெரியாத பீதிக்கு,குமட்டலுக்கு அவனை ஏற்றிச்செல்லக் காத்திருக்கும் கப்பல் என்ற சாயுஜ்ய பதவி கிட்டும்படி செய்விக்கிறார்கள்.

இப்போது கருப்பர்கள் பட்டாளம் (நீக்ரோக்கள்) ஒன்று வருகிறது. டெக்ஸாஸ் நீக்ரோ ரெஜிமெண்டின் ஒரு பகுதி. பலாட்டியர்களான மனிதர்கள்; ஆனால் எதைக்கண்டும் ஆச்சரியப்பட்டு நிற்கும் களங்கமற்ற குழந்தைகள்; ராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குச் சற்றும் ஒவ்வாதவர்கள். தளத்திலிருந்த ஒவ்வொருவனும் எதையோ மறந்தான், எதையோ இழந்தான், என்ற தொல்லைதான். ஒருவன் தலைக்குல்லாயை இழந்துவிட்டான். இன்னொருவனுக்கு இடுப்பு பெல்ட் போய்விட்டது. மற்றவன் சட்டையில் இரண்டு பொத்தான்கள் காணோம். இன்னொருவன் தன் மூட்டையிலிருந்த சாமான்களில் பெரும்பகுதியைத் தொலைத்துவிட்டான். எப்படிப் போச்சு என்பது அவனுக்குப் புரியவேயில்லை. தன்னிடம் இருந்த ஏதோ ஒன்று தொலைந்தது. ஏதோ தப்பிதம் செய்து விட்டோம் என்பது தவிர வேறு ஒரு பிரக்ஞையும் கிடையாது.

துறைமுகத்தில் காத்து நிற்கும்போது ஒவ்வொருவனும் தன்னுடைய கவலையைச் சொல்லி அழுகிறான். வெப்பப் புழுக்கத்தில் கருப்புக் குரல் சளசளப்பு அதிகரிக்கிறது. இவர்களது அங்கலாய்ப்புக்களும்; தொல்லைகளும் குவிக்கப்படுவதற்காகக் காலடியைக் காட்டி நிற்கும் வெள்ளைக்காரக் கமாண்டர், சீறிச் சீறி விழுகிறான். ஒவ்வொருவனும் தான் சிக்கிக் கொண்டிருக்கும் தப்பித வலையை வெட்டிவிட வேண்டும் என்று அவனைக் கெஞ்சிக் கூத்தாடிக் குழைகிறான். கமாண்டரோ வெறித்துக் கொண்ட காளைபோலத் துறை முகத்தில் உலாவுகிறான். அவனுடைய சர்வசக்தியில் பரிபூர்ணநம்பிக்கை கொண்டு பொறுமையுடன் காத்திருக்கிறது இந்த மனித சிசுக்கள்.

கமாண்டர் கழுத்துப் பட்டியைப் பிய்த்துக்கொள்ளுகிறான். அவர்களுடைய தொல்லைப் பரம்பரை அம்பாரம் அம்பாரமாகக் குவிந்து கோபுரமெடுக்க. கோபம் மீறிப் பேய்ச் சிரிப்புச் சிரிக்கிறான்.

அப்படியிருந்தும் அவனிடம் நம்பிக்கையிழக்காமல், குழந்தைகளின் நிச்சயத் தன்மையுடன் 'எஜமான் சொன்னால் எல்லாம் சரியாகிவிடும்' என்று தம் குறைபாட்டைப்

பிரலாபிக்கிறார்கள். ஒருவன் காணாமற்போன பெல்டைக் கதைக்கிறான்; இன்னொருவனுடைய தகரப்போணி—மற்றவனுடைய காலிப் பை, எல்லாரும் ஆசையோடும் பரிவோடும் 'எசமானே, எசமானே' என்று அழைக்கிறார்கள். இவர்களுடைய பேச்சுக்கள் அவனை வசவுக்குள் இறக்கிவிடுகிறது.

'அட வாலில்லாக் கொரங்குகளா. கட்டி மூளைக் களிமண்ணே. குருட்டுக் கழுதைக்கு அண்ணன்மார்களா. நாய்க்குப் பொறந்த கொரங்குமூஞ்சிகளா. குருவிமூளைக் கோட்டான்களா. மூளையிருக்கிற எடத்திலே வெடிமருந்து வச்சா, மூக்கைச் சிந்தினாக்கூட வெடிக்காதே. ஆந்தைக்கி அண்ணாத்தை மகனுகளா. பாருங்க ஒங்களே மொதல் லயன்லே நிறுத்தி அந்த ஜெர்மன் தேவடியா மகன்களை வைத்துச் சுட்டுத் தள்ள வைக்கிறேன்' என்று வைது கொழிகிறான்.

'எஜமானே' என்கிறது ஒரு குரல்.

'எத்தனை தரண்டா மாரடிக்கிறது. எஜமானே. எஜமானேன்னு சொல்லாதேடா சொல்லாதேன்னு எத்தனை தரம் சொல்லித் தொலைக்கிறது' என்று கதறுகிறான்.

'எனக்குத் தெரியும் எஜமான். ஆனாக்க என் பெல்டு அறுந்துபோச்சே. ஒங்ககிட்டே சின்னக் கயறு இருக்கா' என்று கெஞ்சுகிறது அந்தக்குரல்.

'கயறு இருக்கா.' கமாண்டர் தொண்டை கம்முகிறது. 'கயறு இருக்கா' என்று பினத்திக்கொண்டே சொல்லி முடியாத கோபத்தால் தன் தொப்பியைக் காலடியில் போட்டுத் துவைத்து மிதிக்கிறான்.

இதைவிட இன்னும் பெரிய பேரிழவு ஒன்று அவனுக்காகக்காத்திருக்கிறது. கப்பல்பக்கத்தில் பரிசோதனை நடத்தும் ஆபீசர்கள், வரிசையில் சென்ற ஆறுபேரை வெளியேற்றித் தடுத்து விடுகிறார்கள்.

அவன் தொப்பியைத் தூக்கிக்கொண்டு 'அட ஆண்டவனே, அங்கே யென்ன தொல்லை' என்று கோஷிக்கி

ருன். ஆறு பேரும் சோகமே உருவெடுத்ததுபோல கண்ணீர் மாலை மாலையாக வடித்துக்கொண்டு நிற்கிறார்கள். ஆபீசர்களை ஆத்திரத்தோடு கேட்க விஷயம் புலனாகிறது. இந்த ஆறுபேரும் சிற்றின்ப வியாதிக்காக முகாமில் சிகிச்சை பெற்று வந்தார்கள். உடம்பு குணமாகுமுன் எப்படியோ 'டபாய்'த்துக்கொண்டு உடம்புசரி என்ற அத்தாட்சியில்லாமல் இதுவரை வந்துவிட்டார்கள். இப்போது அவர்கள் திருட்டுத்தனம் வெளிப்பட்டது. போகப்படாது என்று தடுக்கப்பட்டு விட்டார்கள். கமாண்டர் சொன்னால் எல்லாம் சரியாகிவிடும் என்ற பரிதாபகரமான நம்பிக்கையுடன் குழைகிறார்கள். கூழைக் கும்பிடு போட்டுக் கெஞ்சிக் கூத்தாடுகிறார்கள்.

'எசமானே, எங்களுக்கு ஒண்ணுமே இல்லே. ஒண்ணுமே இல்லே. இந்த நாசமாப் போன ஊருலே இருக்கவே மாட்டோம். ஒங்ககூட பிரான்ஸுக்கு போகத்தான் ஆசை. ஒங்ககூடக் கூட்டிக்கொண்டு போய்ட்டா என்ன வேணும்னாலும் செய்ரோம்' என்று கருத்த பலாட்டியன் அழுதழுது கெஞ்சினான்.

'நீங்க எக்கேடும் கெட்டு நாசமாப் போங்கடா. இப்ப வந்து கடசி நிமிஷத்திலே சொல்லித் தொலைச்சா என்னடா பண்றது' என்று கொழிக்கிறான். அவர்களுக்கிடையில் பாய்ந்து வெறிகொண்ட காளை மாதிரி வைது ஒழிக்கிறான். அவர்கள் கெஞ்சலும் அழுகையும்தான் மிஞ்சிவிடுகிறது. காதைப் பொத்திக்கொண்டு 'நாய்ப் பயமகனுவ எல்லாரையும் அவன் கொன்று தொலைக்கணும்' என்று கத்திக்கொண்டு பரிசிலனை ஆபீசர்களிடம் வாதம் செய்து தன் கட்சிக்குத் திருப்புகிறான்.

பெத்லத்திலேயே பரிசோதித்துச் சரியாக இருந்தால் அனுமதிப்பது என்று தீர்மானமாகிறது. சிகப்பு மூஞ்சி ஆபீசர் ஒருவன் அவர்களை மறைவிடத்திற்கு அழைத்துச் செல்லுகிறான்.

சுமார் பத்து நிமிஷம் கழிகிறது.

நீக்ரோவர்கள் துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடி வருகிறார்கள். அவர்களது கருப்பு முகம் பெரும் களிப்புக்களை

கொப்புளிக்கிறது. குழந்தைகள் மாதிரி எஜமானைச் சுற்றி வட்டமிட்டுக் கொம்மாளமடிக்கிறார்கள்.

நெட்டை நெட்டென்று கறுத்து நின்ற ராணுவ வைத்ய பரிசோதகனும் இருக்கிச் சிரித்துக்கொண்டு நேர் பார்வை போட்டுத் திரும்புகிறான். அந்தச் சின்னக் கமாண்டர் இன்னும் வையத்தான் செய்கிறான். ஆனால் அவன் வசவில ஒரு பரிவும் பாசமும் கலந்திருக்கிறது.

கடைசியாக மனிதச் சாரையும் ஊர்ந்து ஊர்ந்து கப்பலுக்குள் குடிபுகுந்துவிட்டது. துறைமுகத்தில் அது இழந்த சப்தமும் மௌனமுந்தான் குடிகொண்டிருக்கின்றன. மெல்லிய, இதழ் பூத்த மாலை சகலரையும் தழுவித் தன்னுள் மறைக்கும் ஆழ்ந்த நெஞ்சுடைய இருளின் வரவைக் கட்டியங்கூறிக் குளிர்வித்தது.

ஸ்வீடன்

# கிழவி

## [ஸெல்மா லேகர்லாப்]

மலைப் பாதை வழியாக ஒரு கிழவி நடந்து கொண்டிருந்தாள். மெலிந்து குறுகியவள்தான், எனினும் முகத்தின் வண்ணம் வாடவில்லை, சதைக் கோளங்கள் மரத்துத் தொய்ந்து திரித் திரியாகத் தொங்கவில்லை. அவளுடைய நடையிலும் கிழடு தட்டவில்லை. நீண்ட சட்டையும் லேஸ் வைத்துத் தைத்த குல்லாயும் போட்டுக் கொண்டிருந்தாள். கையில் ஜெப புஸ்தகமிருந்தது. கழுத்துத் துணியில் லவண்டர் பூக்கொத்து ஒன்றைச் சொருகி இருந்தாள்.

மலைச்சரிவிலே மரங்கள் வளரக்கூடிய வளத்தைக் குளிரினால் இழந்துவிட்ட பிராந்தியத்திலே அவள் ஒரு குடிசையில் வசித்து வந்தாள். விசாலமான பனிக்கட்டி ஆறு ஓரத்தில் அந்தக் குடிசை இருந்தது. மலையுச்சிக்கு மூடியிட்ட பனிக்கட்டிகள் திரண்டு இந்த ஆற்றுக்கு ஜீவனைத் தந்து பள்ளத்தாக்குவரை உந்தித் தள்ளி ஓட்டியது. அங்கே அந்தக் கிழவி தன்னந் தனியாய் வசித்து வந்தாள். அவளது உற்றார் உறவினர் யாவருமே செத்து மடிந்துவிட்டார்கள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. கர்த்தருடைய ஓய்வு நாள். அவள் சர்ச்சுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தாள். புனித யாத்திரையால், அவளது மனம் ஏனோ மகிழ்ச்சியால் தழைக்காமல் சோர்வாய்த் தள்ளாடியது, உபதேசியார் சாவைப்பற்றியும் செத்து மடிந்த பாவி

களின் ஆத்மாக்களைப் பற்றியும் அன்று செய்த உபதே சம் அவள் மனத்தில் வெகுவாய்ப் பதிந்திருந்தது. தான் இப்போது வசிக்கும் குடிசைக்கும் மேலே மலையுச்சியிலே பாவிகளின் ஆத்மாக்கள் கணக்கிலடங்காமல் திசைகெட் டுத் தடுமாறித் திரிகின்றன என்று சிறு பிள்ளைப் பிரா யத்தில் யாரிடமோ கேட்டிருந்தது அவளுக்கு ஞாபகத் துக்கு வந்தது. பனிப்பாறைகள் மீது உலாவித் திரியும் இந்தக் களைப்பறியாச் சாயைகளை ஊசிக் குளிர்காற்று விரட்டி விரட்டி வேட்டையாடுகிறது என்று கதைகதை யாகக் கேட்டதெல்லாம் நினைவுக்கு வந்தது. மலைப்பயம், மகா பயப்பிராந்தி அவளைப்பற்றிக்கொண்டது. அவளது குடிசை பயங்கரத்தைத் தரும் எட்டாத்தொலைவில், உச் சாணிச் சரிவில் இருப்பதாக அவளுக்குப்பட்டது. அந்த மலையுச்சியில் திரியும் மாயாவிச் சமுதாயம் கீழே இறங்கி விட்டாலோ. என்ன நினைப்பு. தன்னந்தனியாக அந்தக் குடிசையில் அவள் வசிக்கிறாள். தனிமைப்பாடு என்ற அந்த நினைப்பு எப்பொழுதுமே அவள் மனதைத் தின்று கொண்டிருந்தது. சோகப்படுதாவைப் போட்டு மூடியது. அதை நினைக்க அக்னேட்டாவுக்கு மனம் இன்னும் கொஞ் சம் சோகத்தில் அழுந்தியது. மனிதப் பூண்டற்ற இடத் தில் அவ்வளவு தொலைவில் வசிப்பதென்றால் கஷ்டந் தான்.

அவள் தனக்குள்ளாகவே பேசிக் கொள்ள ஆரம்பித் தாள். அந்தமலைத்தனிமையிலே இருந்திருந்து அவளுக்கு அந்தப் பழக்கம் வந்து விட்டது. 'அடியே நீ அங்கே அந் தக் குடிசையிலே உட்கார்ந்து நூற்றுத் தள்ளுகிறாய். பட் டினி கிடந்து மடியாமலிருக்க ஓயாமல் ஒழியாமல் நூற்று நூற்றுச்சாகிறாய். நீ உசிரோடே இருப்பதால் யாருக்குச் சந்தோஷம்? ஏண்டி யாராவது இருக்காளா? உன்னுடைய வர்கள் யாராவது உசிரோடே இருந்தால் ஒருவேளை அப் படி இருக்கலாம். இன்னும் கொஞ்சம் தள்ளி ஊருக்குப் பக் கத்திலே நீ குடியிருந்தா யாருக்காவது உபயோகமா இருக் காதா? நாயும் பூனையும்கூட உன்னுடன் வளரவொட்டா மல் உன் வறுமை தடுக்கிறது வாஸ்தவந்தான். இருந் தாலும் அகதி என்று வருகிறவன் முடக்க இராத்திரி

உன்னால் இடம் கொடுக்க முடியுமே. வழியைவிட்டு அவ்வளவு தள்ளி இருப்பார்களா ? 'அம்மா நாக்கு வரளுது' என்று வருகிற நாடோடிக்கு ஒரு சிரங்கைத் தண்ணீராவது கொடுக்கலாமே. அப்படி இருந்தாலும் நாலு பேருக்கு உபகாரமாப் பொழுதைக் கழிப்பதாக நீ திருப்திப்படலாமே.'

அவள் பெருமூச்சு விட்டாள். நூற்பதற்குச் சணல் நார்கொடுக்கும் குடியானப்பெண்கள்கூடத்தான் செத்துப் போனதாகக் கேள்விப்பட்டால் ஒரு பொட்டுக் கண்ணீர் விடுவார்கள் என்று நினைத்தாள். மனதிலே குறை வைக்காமே கடவுளுக்குப் பொதுவா உழைக்க அவள் முயன்றதில் சந்தேகமில்லை. அவளைவிடத் தொறனையா வேலையைச் செய்யக் கோடான கோடி இருக்கவும் கூடும்.

சர்ச்சில் இத்தனை வருஷங்களாக அந்த மூலையில் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பாரத்துப் பார்த்துக் கண் பூத்துப்போன உபதேசியாருக்கு அவள் அங்கே உட்கார்ந்திருக்கிறாளா இல்லையா என்பதில் அக்கரை கூட இருக்காது என்று அவள் மனதில் ஒரு நினைப்புத் தோன்ற அவளுக்கு அழுகை வந்தது.

'நான் செத்து மடிந்தவள்தான். நான் இருந்தால் என்ன ? செத்தால் என்ன ? அதில் யாருக்கு அக்கரை? குளிரும் துன்பமும் என்னைப் பனிக்கட்டியோடு பனிக்கட்டியாக உறைய வைத்து விட்டது. நானில்லாவிட்டாலும் என் நெஞ்சுஅப்படிப் போச்சு. என்னைத் தேடுகிறவர்கள் என்று யாராவது ஒருத்தர் இருந்தால், நான் உபகாரமாக இருக்கக்கூடிய ஒருவரை நீ எனக்குக் காண்பித்துக் கொடுத்தால் நான் இப்படியே உடம்பைக் கீழே போட்டு விட்டுச் செத்துப் போவேன்' என்று வானத்தை நோக்கி விரலை ஆட்டி 'பத்திரம் காட்டினாள்.'

அந்தச் சமயத்தில் நெட்ட நெட்டென்று வளர்ந்து முகத்தில் சந்தோஷக்களை அற்ற ஞானம் ததும்பும் முக தேஜஸ் கொண்ட சாமியார் அந்த வழியாக அவளை நோக்கி வந்தார். அவள் மனம் சங்கடப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டு கொண்டு போகும் திசையை விட்டுத்

திரும்பி அவளுடன் நடக்கலானார். தான் உபகாரமாக இருக்கக்கூடிய ஒருவரைக் கடவுள் தன்னிடம் அனுப்பா விட்டால், பனிப்பாறையில் சஞ்சரித்துத் திரியும் அந்த சஞ்சல ஜீவன்கள் போல ஆகிவிடப் போவதாக அவள் கூறினாள்.

'கடவுளால் அப்படிச் செய்ய முடியுமே' என்றார் சாமியார்.

'இந்த உசரத்தில் கடவுளுக்குச் சக்தி கிடையாது என்பது உங்களுக்குத் தெரியவில்லையா' என்றாள அக்னேட்டா. 'இங்கே குளிரைத் தவிர, தனிமையைத் தவிர வேறு ஒன்றுமில்லே' என்றாள்.

இவர்கள் மலைச்சரிவில் நெடிய தூரம் உயர ஏறிச் சென்றார்கள். பாசியும் ஊசிக் கதிர்போன்று இலைவிடும் குத்துச் செடிகளும் இருந்த பாதை வழியாக நடந்தார்கள். ஒருபுறம் பாறைச்சரிவு, பனிப்பாறையின் அடியிலே காணப்பட்ட குடிசையைக் கண்டார் சாமியார்.

'ஓகோ! அங்கேயா நீ குடியிருக்கிறாய்? அங்கே நீ தனியாக இல்லியோ, போதுமான ஆட் கூட்டம் இருக்குமே. அங்கே பாரு.'

இப்படிச் சொல்லிக் கொண்டே சாமியார் விரல்களை வளையம் போல் சுருள வளைத்துக் கொண்டு அதனாடே அவள் பார்ப்பதற்கு இசைவாக இடது கண் அருகில் காட்டினார். அக்னேட்டா பயந்து போய்க் கண்களை மூடிக் கொண்டாள். அங்கே எதுவாவது பார்க்கக் கூடியது இருந்தாலும் எனக்குப் பார்க்கப் பிரியமில்லே. இங்கே இருந்து தொலையறதே போதும் என்றாள்.

'சரி போய் விட்டு வா. இன்னொரு தடவை பார்க்கலாம்னு முடியாது' என்றார் சாமியார்.

வார்த்தை, ஆசையைத் தட்டித் தூண்ட, வட்ட வளையத்தின் ஊடே பனி மூடிய மலையைப் பார்த்தாள். முதலில் ஒன்றும் தெரியவில்லே, அதிகமாக ஒன்றும் தெரியவில்லே. பிறகு கொஞ்சங்கொஞ்சமாக வெள்ளையாக ஏதோ பனிக்கட்டி மேலே நடமாடுவது மாதிரி தெரிந்தது.

முதலில் பஞ்சு என்று அவள் நினைத்தாள். லேசாநீல ஓட்டத்துடன் கூடிய சாயைகள் எல்லாம் பாவியான ஆத் மாக்கள். கோடானு கோடி.

குறிக்கிக்கிடந்த கிழ அக்னேட்டா காற்றடிபட்ட இலை போலவெடவெடவென்று நடுங்கினாள். குழந்தைப் பிராயத் தில் அவள் கேட்டிருந்ததெல்லாம் அங்கே தெரிந்தது. செத்து மடிந்தவர்கள், துர்மரணப் பட்டவர்கள், அங்கே, நித்தியமான குளிரிலே சொல்ல வொண்ணாத உளைச்சல் களை அனுபவித்துக் கொண்டு திரிந்தார்கள். மீண்டும் பார்த்தாள். அந்தக்கூட்டத்தில் ஏறக்குறைய எல்லோரும் ஏதோ நீண்டு வெளுத்த ஒன்றைப் போர்த்தியிருந்தனர். ஆனால் தலைக்கும் காலுக்கும் மட்டிலும் ஒன்றுமில்லை. அங்கே கணக்கிலடங்காதோர் சஞ்சரித்துத் திரிந்தார்கள். அவள் பார்க்கப் பார்க்க மேலும் மேலும் கூட்டம் ஓய் வில்லாமல் வந்து கொண்டே இருந்தது. சிலர் நிமிர்ந்து நடைபோட்டுத் தலைவணங்காமல் நடந்தார்கள். மற்றவர் கள் நடந்து செல்லுவதே குதித்துக் குதித்துப் போவது போல இருந்தது. அவர்கள் ஒவ்வொருத்தர் காலும் பனிக் கட்டி குத்தி இரத்தப்பிரவாகம் வழிந்தபடி இருந்தது.

கொஞ்சம் சூடு ஏறுதா என்று உடம்போடு உடம்பு ஒட்டி நெருங்க அவர்களில் பலர் முயன்றனர். ஆனால் சாவின் விரைத்துப் போன குளிர்ச்சிதான் அவர் களுடைய உடலை விட்டுப் படர்ந்தது. அதனால் அவர்கள் நெருங்கவும் பயந்து விலகிச் சென்றார்கள். மலைஉச்சியிலே விளைந்த குளிர்ச்சி அவர்கள் உடலிலிருந்து பிறந்தது, அவர்கள்தான் பனிக்கட்டியை உருக விடாதபடி செய் கிறார்கள். மூடு பனிக்கு இவ்வளவு ஊசிக் குளிர்ச்சி கொடுத்தார்கள் என்று நினைக்கும் படியாயிருந்தது.

சிலர் நடமாடாமல் பனியில் விறைத்துப் போய் வருஷக்கணக்காய் நிற்பது போலும் தென்பட்டது. அவர்களுடைய உடம்பின் மேல் பகுதிதான் தெரிந்தது. மற்றதெல்லாம் பனிக்கட்டியுள் மறைந்து மூழ்கிக் கண் ணுக்குத் தெரியாமல் கிடந்தன.

பார்க்கப் பார்க்க கிழவிக்கு மனத்தில் பதட்டம் நின்றது. பயம் நீங்கியது. முன்போல் பயப்படாமல் துன்பப்படும் அந்த ஆத்மாக்களுக்காக அவள் பரிவு கொண்டாள். அவர்களுக்குத் தங்க இடமில்லை. வெட்டுண்டு சிதைந்த காலைத் தரிக்க இடமில்லை. அவர்களும் அந்தக் கொடும் குளிரில் ஈட்டிக் குத்துபோல் உடம்பைத் துளைக்கும் குளிரில் எப்படி நடுங்குகிறார்கள்!

அந்தக் கூட்டத்தில் சிசுக்களும் உண்டு. அவர்கள் முகத்தில் இளங்களை மாறிவிட்டது, முகம் குளிரால் நீலம் பாரித்துப் போயிருந்தது. அவர்கள் விளையாடுவது போலத் தெரிந்தது. ஆனால் அவர்கள் மகிழ்ச்சி யெல்லாம் செத்து மடிந்து கிடந்தது. அவர்கள் வெடவெட வென்று நடுங்கிக்கொண்டு தொண்டு கிழங்களைப்போல நடந்தார்கள். பையன்களும் பெண்களும் மாதிரியாகவா தெரிந்தது? அவர்களுடைய கால்களெல்லாம் பனிக் கட்டிகளையே நாடி அதன் மேல் ஊன்றுவதுபோலத் தெரிந்தது.

சாமியார் கையை எடுத்துவிட்டார். கிழவி கண்களுக்கு வெற்றுப் பனி வனாந்தரம் தவிர வேறு ஒன்றும் புலப்படவில்லை. அங்கும் இங்குமாகப் பனிக்கட்டி சில திக்காலுக்கு ஒன்றாகக் கிடப்பதுபோலத் தென்பட்டது. ஆனால் அவை மடிந்து மறைந்தவர்களின் உயிரையே அடக்கி வைத்திருந்தது. பனிப்பாறையில் நீலச்சாயம் பனிக்கட்டியில் சிக்கிக்கிடந்த உடம்பிலிருந்து வரவில்லை. பனிச் சிதள்களைக் காற்று எற்றி விரட்டியது. இருந்தாலும் வளையத்துக்குள் பார்த்ததெல்லாம் வாஸ்தவம் என்று நிச்சயித்துக்கொண்டு, 'இவர்களுக்கு ஏதாவது உபகாரம் செய்வதற்கேதும் வழி உண்டா?' என்று கேட்டாள்.

நன்மை செய்வதற்கு அன்புக்கு உரிமை கிடையாது என்றோ அல்லது பரிவுகொண்ட மனம் ஆறுதல் சொல்லக்கூடாது என்றோ கடவுள் எப்போதாவது தடை செய்திருக்கிறாரா! என்று, பதில் கேள்வி போட்டுப் பதில் அளித்தார் சாமியார்.

இப்படிச் சொல்லி விட்டுச் சாமியார் தன்வழியே சென்ருர். அக்னேட்டா வேகமாகத் தன் குடிசைக்கு நடந்தாள். உள்ளே போய் உட்கார்ந்து சிந்திக்க ஆரம்பித்தாள்.

பனிப்பாறையில் திசை கெட்டுத் திரியும் அந்தப் பாவிகளுக்கு என்னவிதமாக உதவி செய்ய முடியும் என்பதை அவள் சாயங்காலம் முழுவதும் உட்கார்ந்து யோசித்தாள்.

தான் ஏகாந்தியாக இருப்பதை நினைக்க அவளுக்குப் போதில்லே.

மறுநாள் காலே அவள் கிராமத்துக்குச் சென்ருள். அவளுக்கு மனம் உள்ளுக்குள்ளாகவே பூரித்தது. வயசின் சுமை கழன்றுவிட்டது. போகும்போது தனக்குத் தானே பேசிக்கொண்டு நடந்தாள்.

'செத்துப் போனவர்களுக்கு சிகப்புக் கன்னமும் சிலுக்கு உடையும் வேண்டாம். உடம்பிலே கொஞ்சம்வெதுவெதுப்பு இருந்தால்போதும் என்று அல்லாடுகிருர்கள். சிறுசுகளுக்கு அந்நினைப்பேது? உலகத்தில் மீந்து நிற்கும் கிழடுகெட்டைகள் நெஞ்சைத் திறந்துகாட்டி அழைக்காது போனல் மரணத்தின் எல்லேயற்ற குளிர்க்கொடுமையிலே அவர்களுக்குத் தாரகம் ஏது?'

அவள் பலசரக்குக் கடையில் ஒரு பெரிய கட்டு மெழுகு திரி வாங்கினுள். குடியானத்தி ஒருத்தியிடம் ஒரு வண்டி விறகு கொண்டுவர உத்தரவு போட்டாள். என்றும் கொண்டு போவதைவிட இரட்டிப்புச் சுமை சணல் நூற்பதற்காக எடுத்துச் சென்ருள்.

சாயங்காலமாச்சு. வீட்டுக்குத் திரும்பினுள். வந்துவிட்ட பிறபாடு ஜெபம் செய்தாள். தைரியமூட்டிக் கொள்ள தெய்வ கீதங்களேத் திரும்பத் திரும்பப் பாடினுள். இருந்தும் அது கீழ் நோக்கியே சாய்ந்தது. மனதில் நினேத்ததைச் செய்ய இந்தக் கோழைத்தனம் தடை செய்யவில்லே. தன்னுடைய படுக்கையைக் குடிசையின் உட்கூடத்தில் விரித்துப் போட்டாள். வெளிக்கூடத்திலிருந்த கணப்பு அடுப்பில் கைநிறைய விறகெடுத்துப் போட்டுப்

பற்றவைத்தாள். இரண்டு மெழுகு திரிகளை ஏற்றி ஜன்னலில் வைத்தாள். வீட்டு வாசல் கதவை மூடிந்தமட்டிலும் விரியத் திறந்துவைத்தாள். அப்புறம் அக்னேட்டாக் கிழவி போய்ப் படுத்துக்கொண்டாள்.

இருட்டில் கிடந்து சப்தம் கேட்கிறதா என்று காதைக் கூர்மையாக வைத்திருந்தாள்.

ஆமாம்; அதுகள் காலடிச் சத்தமாகத்தான் இருக்க வேண்டும்.

சில பனிப்பாறைகளில் வழுக்கி வருவதுபோலக் கேட்டது. வேறு யாரோ ஒருவர் முனங்கிக்கொண்டே உள்ளே நுழைவதற்குப் பயந்துபோய் குடிசையைச் சுற்றித் தயங்கித் தயங்கி நடப்பதுபோல் கேட்டது.

அக்னேட்டாவுக்கு இதற்குமேல் தாங்க முடியவில்லை. படுக்கையைவிட்டுத் துள்ளி எழுந்தாள். ஒரே ஓட்டமாக ஓடி வெளிக்கதவைப் படார் என்று இழுத்து மூடித் தாளிட்டாள். இதை யார் தாங்க முடியும்? ரத்தமும் சதையும் பயந்து துடிக்காமல் எப்படிச் சகித்துக்கொண்டு இருக்கும்?

குடிசைக்கு வெளியே ஒரு நெடிய பெருமூச்சுக் கேட்டது. கால் வலி தாங்க மாட்டாமல் தள்ளாடித் தள்ளாடி நடந்து செல்லும் காலடிச் சத்தம் தூரத்தில் பனிப்பாறை நோக்கி மங்கி மறைவது கேட்டது. தேம்பித் தேம்பியழும் சப்தமும் அவள் காதில் விழுந்தது. அப்புறம் ஒன்றுமே கேட்கவில்லை. அதற்கு அப்புறம் கிழவி அக்னேட்டாவுக்கு மனம் இருப்புக்கொள்ளாமல் தவித்தது.

வழக்கம் போல் தனக்குத் தானே பேசிக் கொண்டாள்.

'அடி முட்டாளே. மெழுகு திரிகள் அணைந்து போகுமே, அனலும் அணைந்து போகுமே. அவை என்ன காசா, லேசா. நீ வடிகட்டின கோழை என்பதற்காக இத்தனையும் வீணுகி நாசமாகிறதா?'

அவள் மறுபடியும் படுக்கையை விட்டு எழுந்திருந்தாள். உடம்பு நடுங்கியது. பல் கிட்டியடித்தது. வெளிக்

கூடத்திற்கு வந்து வாசற்கதவை விரியத் திறந்தாள். மறுபடியும் போய்ப் படுத்துக்கொண்டு அவள் காத்திருந்தாள்.

இப்போது பயம் அகன்றுவிட்டது. அகதிகளை விரட்டிவிட்டோமே, இனிமேல் தைரியமாகத் திரும்பி வருவார்களோ என்ற பயந் தவிர அவளுக்கு வேறு ஒரு கவலையுமில்லை.

பிறகு இருட்டில் கூப்பிட ஆரம்பித்தாள். சிறு பிராயத்தில் அவள் ஆடுமேய்த்துத் திரிந்தபொழுது மந்தைகளை அப்படித்தான் அழைப்பது வழக்கம்.

'என் குட்டிகளா, அருமைக் குட்டிகளா வாருங்கள், வாருங்கள்' என்றழைத்தாள். மலைச் சிகரத்திலிருந்து குடிசைக்குள் நேராகப் பெருங்காற்று பாய்ந்தடித்தது போலிருந்தது.

கிழவியின் காதுக்குக் காலடிச் சத்தமோ அழுகைக் குரலோ கேட்கவில்லை. வீட்டுக்குள் நுழைந்த காற்றின் ஓலந்தான் கேட்டது.

'அவர்களைப் பயப்பட வைத்துவிடாதே' என்று யாரோ சொல்லுவது போலக் கேட்டது.

கண்ணுக்குத் தெரியவில்லை. ஆனாலும் வெளியறையில் அது கொள்ளுமட்டும் கூட்டம் வந்திருப்பதாக அவள் உணர்ந்தாள். சுவர்கள் இற்று விழுந்துவிடுமோ என்று நினைக்கும்படி அவ்வளவு நெருக்கம். அப்போது கிழ அக்னேட்டா மனதில் மகிழ்ச்சியும் திருப்தியும் நிறைந்தது. கைகளை நெஞ்சில் மடக்கி வைத்துக்கொண்டு கண்ணுரங்கலானாள்.

விடிந்தபோது நடந்ததெல்லாம் சொப்பனம் என்று நினைத்தாள்., ஏனென்றால் வெளி அறை பழைய படியேதான் இருந்தது. நெருப்பு எரிந்து எரிந்து அவிந்துவிட்டது. மெழுகு திரிகளும் அப்படியே. திரிகளில் சொட்டு மெழுகுகூட மிஞ்சவில்லை.

உயிரோடு இருக்கும்வரை அக்னேட்டா இந்தப்படியாகச் செத்தவர்களுக்காகப் பாடுபட்டாள். அவள் கஷ்டப்பட்டுப் பகல் முழுவதும் நூற்ருள். ஒவ்வொரு ராத்திரியும் வெளியறையில் நெருப்பேற்றி வைக்க இப்படி உழைத்தாள்.

அவள் சந்தோஷமாக வாழ்ந்தாள். ஏனென்ருல் யாராவது ஒருவருக்கு உபகாரமாக வாழ முடிகிறது என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது.

பிறகு ஒரு ஞாயிற்றுக்கிழமை அவள் சர்ச்சில் வழக்கம்போல் உட்காருமிடத்தில் இருக்கவில்லை. கிராமத்துக்காரர்கள் என்னமோ ஏதோ என்று பார்த்து வர அவளுடைய குடிசைக்குப் போனார்கள். அவள் செத்துப் பிரேதமாகக் கிடப்பதைக் கண்டு அடக்கம் செய்வதற்காகச் சவத்தைக் கிராமத்துக்கு எடுத்துவந்தார்கள்.

அக்னேட்டாவின் சவத்துக்குப் பின்னுல் கல்லறைத் தோட்டத்திற்கு வெகுபேர் போகவில்லை. கூடப்போனவர்கள் முகத்திலும் வருத்தமிருப்பதாகத் தெரியவில்லை. ஆனல் பெட்டியைக் குழிக்குள் இறக்கப்போகும்போது திடீரென்று கல்லரைத் தோட்டத்துக்குள் நெட்ட நெடிய, மகிழ்ச்சிக்களையற்ற,ஞானத்தேஜசுடையசாமியார் நின்ருர். பனிமூடிய மலையுச்சியைக் காட்டினர். கல்லறைக் குழியருகில் நின்றவர்கள் மலைச்சிகரம் முழுவதும் இளஞ்சிவப்புப் பூத்துச் சிகரம் முழுவதையும் பிரகாசமாக முழுக்காட்டியதைக்கண்டார்கள். சிகரத்தின் குறுக்கே சிறுசிறு ஒளித்திரள் வரிசை வரிசையாகச் செல்வதைக் கண்டார்கள். மெழுகு திரி ஊர்வலமாக நடந்து செல்வதுபோலிருந்தது. பனிப்பாறையில் அகதிகளாகத் திரியும் பாவிகளுக்கு செத்துப்போன கிழவி வாங்கிய மெழுகு திரிகளின் தொகைக்கு அன்று வெளிச்சம் தெரிந்தது.

'கடவுளைத் துதிப்போமாக. தனக்காக வருந்த ஒருவரும் அற்ற அவள் மலைகளின் மகா தனிமையிலே நேசர்களைப் பெற்றுவிட்டாள்' என்ருர்கள் ஜனங்கள்.

இங்கிலாந்து

# ஆட்டுக் குட்டிதான்

## [ஜேம்ஸ் ஹானலி]

செக்கச் செவேலென்றிருக்கும் அந்த பஸ், ஏக இரைச்சலுடன் அந்த வளைவைத் திரும்பியது. சூழ்நிலை தாங்கிய அமைதியான வண்ணக் கலவைகளுக்குச் சவால் கொடுப்பதுமாதிரி அந்தச் சிகப்பு கண்களை உறுத்தியது. வண்டியில் இருந்தவர்களுடைய குஷிக்குக் குறைவில்லை. சென்ற இரண்டு மணி நேரமாகத் தொண்டை கம்மும்படி வழி நெடுகத் தங்களது இசைத் திறமையைப் 'பரத்திக்' கொண்டு வந்தார்கள். வண்டியில் உள்ளவர்கள் எல்லாம் அதை 'ஏகமேனியாக' வாடகைக்கு அமர்த்தி இன்று முழுவதும் 'ஊர்சுற்றிப் பார்த்து' வருகின்றனர்.

திடீரென்று வண்டி கிரீச்சிட்டுக்கொண்டு நின்றது. பாட்டு 'கப்' என்று ஓய்ந்தது. ஒரே பீதி, குழப்பம், என்ன நடந்தது? பின்பக்கத்துக் கடைசி ஸீட்டில் இரண்டு சுரங்கத் தொழிலாளிகளுக்கு இடையில், இப்படியும் அப்படியும் திரும்ப முடியாமல் உட்கார்ந்திருந்த பூதாகரமான ஸ்திரி கிரீச்சிட்டுக் கத்தினாள். டிரைவர் பின்புறமாகத் திரும்பி 'அது ஒரு ஆட்டுக்குட்டிதான்' என்று அறிவிக்க எல்லோரும் ஏகோபித்துச் சிரித்தார்கள்.

''ஐயோ, ஆஹா'' என்ற குரல்கள் கிளம்பின. முகம் சிவந்துபோன டிரைவர் ஸீட்டைவிட்டு இறங்கித் தரையில் குதித்தான். அந்தச் சிகப்புக் கோரத்தில் உட்கார்ந்திருந் தவர்கள், ஆட்டு மந்தைகள் மாதிரி அவனைத் தொடர்ந்து

கீழே இறங்கினார்கள். ரோடில் அங்கும் இங்குமாக நடமாடி என்ன செய்வது என்று புரியாமல் வழியை அடைத்தார்கள். எல்லோரும் பேசினார்கள். அவர்களுடைய கூச்சல் ஆட்டுக்குட்டியின் ஹீனமான கதறலை அமுக்கிவிட்டது. அதனுடைய பின்னங்கால் வண்டியின் பின் சக்கரத்தில் அகப்பட்டு அரைந்து நொறுங்கிவிட்டது. வண்டியின்கீழ் சிறைப்பட்டு நிராதரவாகப் பரிதாபகரமாகக் கிடந்தது. அந்த ஆட்டுக்குட்டியின் கண்கள், அகன்று விரியத் திறந்தபடி, மரணம் சற்றும் இளகாமல் அர்த்தம் புரிந்துகொள்ளாமல் குனிந்து மாடுமாதிரி விழிக்கும் டிரைவரின் கண்களைக் கவர்ந்தது. இது இப்படியிருக்க அங்கு கூடிய மனிதர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். சூரியவொளி மனிதர்களின் வெர்ஜுன் ஸூட்கள் மேலும், பெண்களின் ட்வீட்,சீட்டி உடைகள் மேலும் பளபளத்தது. அதில் இரண்டு பெண்டுகள் மட்டும் எல்லோரையும் கடித்துத் தின்றுவிடுவது போன்ற பார்வை கொண்ட முரட்டாத்மாக்களாக இருந்தார்கள். ஏதோ தப்பு நடந்துவிட்டது என்பது அவர்கள் மூளையில் உதயமாக ஆரம்பித்தது. எல்லோரும் ஒரே கும்பலாக வண்டியின் பின்புறம் திரண்டு நின்றார்கள். எல்லோரும் அந்த ஆட்டுக்குட்டியைப் பார்த்தார்கள். கால் நொறுங்கிக் கிடக்கும் மிருகமாக அதை அவர்கள் பாவிக்கவில்லை. எங்கிருந்தோ திடீரென்று தங்கள் பாட்டுக்குக் குந்தகமாக குறுக்கே வந்து விழுந்த விவகாரமாகக் கருதினார்கள், அவர்கள். டிரைவர் அங்கிருக்கும் மனிதர்கள் யாவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

'11-10. ஏ. எம். எல்லாம் நான் கான்வேக்கு வண்டியைக் கொண்டு போயிருக்கவேண்டும்' என்றான். பிறகு சிரித்தான். வேறு என்ன செய்ய, சிரித்துத்தான் தொலைக்கவேண்டும். 'உம். ஏதாவது செய்துதானே ஆகணும்' என்று சொல்லிக் கொண்டே வண்டியில் ஏறினான். 'விலகிக் கொள்ளுங்கள், ரிவர்ஸ் எடுக்கப் போகிறேன்' என எச்சரித்தான்.

கூட்டம் விலகி, புல் முளைத்த ஓரத்திற்கு ஓடிச் சென்று நின்றது. வண்டி 'ஓட' ஆரம்பித்து, பின் பக்க

மாக நகர்ந்தது. இதைக்கண்ட ஒரு ஸ்திரி 'ஐயோ பாவம்' என்றாள். ஜனக்கூட்டம் 'ஹா, ஹோ' என இரைந்தது. வண்டி மெதுவாக விலகியது. ஆட்டுக்குட்டி உடனே மறுபக்கமாகப் பொத்தென்று விழுந்தது. அது கதறியது. ஜனக்கும்பலைப் பார்த்தது. 'ஐயோடியம்மா பாக்கப் பய மாஇருக்கே' என்றாள் ஒரு பெண். ரத்தம் புழுதியை நனைப்பதைப் பார்த்து விட்டாள் அவள். 'சனியன், ஒரே ரத்தக் களறி, ஏதாவது செய்யணும்' என்றான் டிரைவர்.

மோட்டார் சுரங்கத் தொழிலாளிகள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். 'ஏதாவது செய்துதான் ஆகணும். ஆமாம், அதுதானே சனியன்' என்கிற மாதிரி இருந்தது அவர்கள் முகம். ஐந்து நிமிஷத்திற்கு முன்வரை எல்லோரும்-குடிக்கக்கூடக் கற்றுக கொள்ளாமல் கூடவரும் அந்த சாக்குருவி தவிர மற்றெல்லோரும் - குஷியாகப் பாடிக்கொண்டு 11-10. ஏ. எம். ரெட் லயன் மது ஹோட்டலுக்குப் போய் விடலாம் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோருடைய மன நிலையும் ஒரே ஸ்தாயியில் நின்றது. 'இது என்னடா தொந்திரவாக இருக்கிறது' என்று நினைத்தார்கள். எல்லோரும் ஆட்டுக்குட்டியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று யாவருக்கும் ஒரு எண்ணம் தோன்றியது.

'வயலில்மெதுவாகஅதைத் தூக்கிக்கிடத்தி வைத்து விட்டு, நாம் போவோம்.'

'ஆமாம், வயலில் அதை எடுத்து வைத்து விட்டு வாருங்கள், போவோம்' என்றன பல குரல்கள்.

'அதைக் கொன்று விட்டால் நல்லதல்லவா?' என்றான் டிரைவர்.

'அப்போ நீயே கொல்லு, நீதானே டிரைவர்' என்றாள் தடித்த ஸ்திரீ.

டிரைவர் பின் வாங்கினான்.

'இங்கே நான் ஒருவன்மட்டுமா ஆண்பிள்ளை, மேலும் ஆட்டுக்குட்டியைக் கொல்லுவது எனக்குப் பிடிக்க

வில்லை, இருந்தாலும் சித்தாட்டுக் கறிக் குழம்பு பிடிக்காது என்று சொல்லலே' என்றான் டிரைவர். எல்லோரும் இந்த 'ஆசியத்தை' கேட்டுச் சிரித்தார்கள். 'நீங்க யாராவது ஒருவர் கொல்லப்படாதா?' என்று மற்ற ஆண்களைப் பார்த்துக் கேட்டான் அந்த டிரைவர். ஒருவரும் அசையவில்லை.

'நாம்தான் போவோமே, அதுதான் எப்படியும் செத்துப் போகுமே' என்றான் ஒருவன்.

இப்படிச் சொல்லியும் ஒருவர்கூட நகரவில்லை. பலத்தை இழந்த அந்த மிருகம் அவர்களையும் தன்னைப் போலப் பலமிழக்கச் செய்து விட்டது போலத் தோன்றியது. அகன்று திறந்து பார்ப்பதற்குப் பரிதாபகரமாக இருந்த அந்தக் கண்கள், தன்னைச் சூழ வட்டமாக நிற்கும் சிவந்த முகங்களை நோக்கி, கும்பலைப் பார்த்து மௌனமாகக் கெஞ்சியது. அவர்களது 'வெர்ஜ' 'ட்வீட்' உடைகளில் நகரத்தின் முடை நாற்றம் வீசியது போலும். அது மெதுவாகக் கண்களை மூடிக்கொண்டது.

'செத்துப் போச்சு, வாருங்க போவோம்' என்றான் ஒருவன்.

மனப்பாரம் இறங்கியதுபோல கும்பல் பஸ் கதவை நோக்கிச் சென்றது. ஆனால் மறுபடியும் எல்லோரும் கலக்கமுறும் வண்ணம் ஆட்டுக்குட்டி கண்களைத் திறந்து கொண்டது. 'சீ, என்னடா சனியன். இங்கே ஏதும் கல்லு கிடக்கிறதா பாருங்கள்' என்று சீறினான் டிரைவர்.

'வழிய விடுங்கோ—அங்கே' எனக் கத்தினாள் ஒரு ஸ்திரீ. கும்பல் வேகமாக ஓடி புல்வரம்பு அருகில் நின்றது. ஒரு சின்ன 'ஸ்போர்ட்ஸ்' கார் அங்கே வந்தது. அதிலிருந்து ஒரு பெண் இறங்கினாள். ஆட்டுக்குட்டியை ஒரு கணம் பார்த்தாள். பிறகு ஆண்களைப் பார்த்தாள். 'மோட்டார் ஏறிவிட்டதோ?' என்று கேட்டாள்.

'கண்ணும் தெரியலியா?'

'அப்படித்தான்,'

'பின்னையேன் அதைத் துடிக்க வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? நிராதரவாகக் கிடக்கும் அந்தச் சின்னக்குட்டியைச் சுற்றி ஆண்களைப்போல் ஏன் நிற்கிறீர்கள்? '

அவள் பஸ்ஸின் பின்புறம் சென்ருள். சில பெண்கள் அவளைத் தொடர்ந்தார்கள். புதிதாக வந்தவளை ஆண்கள் 'உர்' என்று பார்த்தார்கள். 'இந்தக்காலத்து நாஸூக்கான, முண்டைகளில் ஒருத்தி' என்ருன் ஒருவன்.

'ரொம்ப அனியாயமாக இருக்கே, ஐயோ பாவம்' என்று ஒரு ஸ்திரி தன் அருகில் நின்ற ஒரு பெண்ணைப் பார்த்துச் சொன்னுள். அந்தப் பெண் திடீரென்று காட்டப்பட்ட அந்த அனுதாபத்தைக் கண்டு மலைத்துவிட்டாள். அவள் ரஸ்தாவைக் கடந்து ஓரத்திலிருந்த வேலியில் ஏறினுள். இந்தச் செயல் ஆண்களின் கவனத்தை மட்டும் வெகுவாகக் கவர்ந்தது. வயலுக்குள் சென்று ஒரு கல்லைப் பெயர்த்தாள். பிரகாசமான மண்வர்ண உடையணிந்த 'குருகா' ஒருவன் 'என்னடா செய்யப் போருு?' என்ருன்.

'என்னையேன் கேட்கிருய், அதான் கல்லை எடுத்தாள், அதை வைத்துக் குட்டியைக் கொல்லப் போருள், சீ' என்ருன் வேருெருவன்.

அந்தப் பெண் அந்தப் பெரிய கல்லைத் தூக்கிக் கொண்டு திரும்பி வந்தாள். ஆண்களிடம் வந்து, "இந்தக் குட்டியின் கஷ்டத்தைப் போக்க ஒரு கல்லைப் பார்த்து எடுத்துக் கொண்டுவர இத்தனை ஆண்பிள்ளைகளிலும் ஒருத்தருக்காவது முடியலியே என்பதுதான் ஆச்சரியமாக இருக்கு" என்ருள். பிறகு ஆட்டுக்குட்டியிடம் சென்ருள். அந்தப் பெரிய கல்லை உயரத் தூக்கிப் பொத்தென்று குட்டியின் தலையில் போட்டாள். அதை இரண்டொரு நிமிஷம் பார்த்துக்கொண்டு நின்ருள். பிறகு வேலியருகில் கொண்டு சென்ருள். வேலியின் இடைவழியாக அந்த மிருகத்தை மெதுவாகப் புல்லின் மேல் கிடத்தினுள். பெண்கள் முகத்தை மூடிக்கொண்டார்கள். கிரியை முடிந்துவிட்டதால் பஸ்ஸில் ஏற ஆரம்

பித்தார்கள். ஆண்களும் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள். எல்லோரும் குசுகுசுவென்று பேசினார்கள். ஒவ்வொருவனும் படியில் கால் வைத்து பஸ்ஸில் ஏறும் பொழுது திரும்பித் தன்னுடைய காரில் சென்று உட்கார்ந்து கொண்ட பெண்ணைப் பார்த்தான். "நெஞ்சிரக்கமற்ற பொட்டைக் கழுதை" என்றான் ஒருவன். எல்லோரும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்துகொண்ட பிற்பாடு, ஆண்கள் எல்லோரும் ஏகோபித்து "ஆமாம் நெஞ்சிரக்கமற்ற பொட்டைக் கழுதை" என்றார்கள்.

# சகோதரர்கள்

## [யூஜோ யாமா மோட்டோ]

'அண்ணா, இது நல்லதுதானே?'

'எங்கே, இப்படிக் கொண்டா பார்ப்போம்' என்று மூத்தவன், தன்னிடம் காட்டப்பட்ட காளானைப் பார்ப்பதற்காகத் திரும்பினான். 'ஊஹூம். நல்லதில்லே: நான் பிடுங்குவதுபோல இருக்கவேண்டும்.'

தான் பிடுங்கிய காளானைச் சின்னவனிடம் காட்டினான்.

'இல்லியா?' என்றான் சின்னவன். அவன் குரலில் ஏமாற்றம் தொனித்தது. கையிலிருந்த நாய்க் குடையை பார்த்தபடியே நின்றான்.

'அதில்லே' என்றான் மூத்தவன். 'குடைக்குக் கீழே துணி கொசுவி வைத்தமாதிரி இருக்கணும், நீ பிடுங்கியது வெறும் நாய்க் குடை.'

இவனுக்கு வயசு பதினொன்றுதான், என்றாலும் தம்பியுடைய அறியாமையைச் சகித்துக்கொள்ளக்கூடிய பொறுமை இருந்தது. அவனுக்காக இவன் மனசும் கஷ்டப்பட்டது. இவர்கள் இருவரும் நடந்து வந்ததும் வெகு தொலைவு. சின்னவனுக்குக் கால் கடுத்துவிட்ட மாதிரி தெரிந்தது. அதனால் மஞ்சள் நிறத்தில் தரையில் படர்ந்த செடிகளினூடே எதுவும் இருப்பது தெரிந்தால், '**ஷின்—சான்**' இங்கே பாரு, ஒனக்கு இதோ ஒண்ணு இருக்கு' என்று குரல் கொடுத்தான்.

குழந்தையும் தன்னால் முடிந்தவரை தேடியது. அதன் கண்களுக்கு வாடி மஞ்சளேறிப்போன இலைகள் தான் பட்டது.

'அதோ உன் காலடியில் இருக்கு பாரு. உனக்குத் தெரியலே' என்ருன் அண்ணன்.

'எங்கே?'

'அங்கேதான்.'

கடைசியில் அவன்தான் தொட்டுக் காண்பிக்க வேண்டும்.

'எலே நெரையா இருக்கு பாரு, அதான் எனக்குத் தெரியலே, இதுதானே' என்றது குழந்தை.

அண்ணன் 'ஆமாம்' என்ற பிற்பாடே குழந்தை செத்தை குப்பைகளைத் தள்ள ஆரம்பித்தது.

'இது நாய்க்கொடெ இல்லியே?'

'நெசமா அதுதான் காளான்'

'அதெப் பிடுங்கட்டா'

'ஊம்'

சிறுவன் அதைப் பிடுங்கிஞன். ஆனுல் அதை உடனே கீழே எறிந்துவிட்டான், அசிங்கத்தைத் தொட்ட மாதிரி.

'ஏண்டா? ஏன் எறிஞ்சுட்டே?'

'அசிங்கமா இருக்கு'

'ஏன்'

குழந்தை பதில் ஒன்றும் சொல்லவில்லை. தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்தது. அண்ணனுக்குப் புரிந்ததிஞல் புன்சிரிப்பு வந்தது.

'அது அப்படித்தான். நீ தொட்டதும் அதன் வர்ணம் மாறினதைப் பார்த்துத்தானே ஆச்சரியப்பட்டே? காளானைத் தொட்டா அப்படித்தான் வர்ணம் மாறும்' என்ருன் அண்ணன்.

'அப்பிடின்ஞ ஒண்ணுஞ் செய்யாதே?'

'ஒன்றும் பண்ணுது'

சிறுவன் பயம் தெளிந்து சிரித்தான்.

'எல்லாத்தோடையும் அதைப் போட்டு வச்சுக்கோ' என்று தரையில் வைத்திருந்த தொப்பியைக் காட்டினன் அண்ணன். அது நிறைய அவன் சேகரித்த காளான்கள் நிறைந்திருந்தன.

குழந்தை அந்தக் காளானை எடுத்து அந்தத் தொப்பியில் போட்டு வைத்தது. அண்ணன் கண்டுபிடித்த காளான்கள் எத்தனை என்று அவன் எண்ண ஆரம்பித்தான். மூத்தவன் செத்தை குப்பைகளை எல்லாம் தள்ளித் தள்ளிக் காளான் முளைத்திருக்கிறதா என்று தேடிப் பார்த்துக்கொண்டிருந்தான். கழுத்தை நீட்டிக்கொண்டு அவன் நிற்பதைப் பார்த்தால், அவனுடைய பாட்டியார் மாதிரி இருந்தது. அதுவும் அவள் விடியற் காலையில் எழுந்து நின்றுகொண்டு தன் படுக்கையில் மொய்க்கும் ஈக்களை விரட்டுவது போல இருந்தது. அவன் அப்படித் தலையை நீட்டிக்கொண்டு தேடுவதைப் பார்க்கத் தம்பிக்கு வேடிக்கையாக இருந்தது. தனக்கும் அப்படித் தேட முடியும் என்று அவன் நினைத்தான். அவனும் குனிந்த படி கண்ணைச் சாயவைத்துக்கொண்டு பைன் மரத்தினடியில்(குளிர்ப்பிரதேசங்களில் வளரும் ஒருவிதமான சவுக்கு மரம்)தேட ஆரம்பித்தான். அவன் கண்ணுக்குக் காளான் எதுவும் தென்படவில்லை என்றாலும் மனசில் மட்டும் குதூகலம் குதிபோட்டுக்கொண்டிருந்தது.

திடீரென்று தொப்பெனக் காதில் விழுந்த சத்தம் மூத்தவனைத் திடுக்கிடவைத்தது. அவன் நிமிர்ந்து பார்க்கும்போது சின்னவன் லேசான சரிவில் சற்று தூரத்தில் விழுந்து உருண்டுருண்டு செல்வதைப் பார்த்தான். ஒருவேளை காலில் வேர் எதுவும் தடுக்கியிருக்கும். அதைப் பார்க்க அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. அவனுடைய உதவிக்குப் போகாமல் குழந்தையைக் கேலி பண்ண விரும்பினன். இருந்தாலும் மறு நிமிஷம் அவன் சின்னவனருகில் சென்றுவிட்டான். அதற்குள் மற்றொருவேர் உருண்டு சென்ற குழந்தையைத் தடுத்துவிட எழுந்திருந்து நிற்க அதற்கு ஒத்தாசை செய்தான்.

அவன் கண்களில் தேங்கிய கவலை அவனுடைய உள்ளப் பரிவைக் காட்டியது. அவனைக் கண்டவுடன் சின்னவன் சிரிக்க ஆரம்பித்தான். பெரியவனும் சிரித்தான். கண்ணீருக்கு அவசியமில்லை எனவே மனச்சுமை அகன்றது.

சிரிக்க முடிந்தால் அவனுக்கு அடிபடவில்லை என்று தான் அர்த்தம். ஆனால் அந்தச் சிரிப்புச் சற்றுக் கோணியிருந்தது. அது என்னமோ விபரீதமாக இருந்தது. இளையவன் கன்னத்தில் மண் ஒட்டியிருப்பது மூத்தவன் கண்ணில் விழுந்தது. கீழே விழுந்தபோது ஒருவேளை ஒட்டிக்கொண்டிருக்கக்கூடும். கையால் தேய்த்து துடைத்துவிட முயன்றான். அது போகவில்லை. பிறகு சட்டைக் கைக்குள் கையை இழுத்துக்கொண்டு, அந்தத் துணியை பிடித்துக் கன்னத்தில் வைத்துத் துடைத்தான். அப்படியும் போகவில்லை. கடைசியாகச் சட்டைத் துணியில் எச்சிலை உமிழ்ந்து அந்த ஈரத்தைக் கொண்டு சின்னவன் கன்னத்தைச் சுத்தமாகத் துடைத்துவிட்டான். இத்தனைக்கும் சின்னவன், கொஞ்சங்கூட புகார் பண்ணாமல் பேசாமல் நின்று கொடுத்தான்.

பிறகு இருவரும் மறுபடியும் காளான்கள் சேகரிக்க ஆரம்பித்தார்கள். சிறிது நேரம் கழித்துப் பெரியவன் தன்னுடைய தொப்பியை நிறைத்து அம்பாரமாகக் காளான்களை ஏற்றிக்கொண்டிருந்தான்.

'**ஷின்—சான்** போதும் போதும் நெறையப் பறிச்சாச்சு' என்றான் மூத்தவன்.

'டேய், பசங்களா, அந்தக் காளான்களை அப்படியே கீழே வச்சுடுங்க' என்று ஒரு இடிக்குரல் கேட்டது.

பையன்கள் பயந்தே போனார்கள். அவர்கள் திரும்பிப் பார்க்க பின்புறம் காவல்காரன் நிற்பதைக் கண்டார்கள். கண்ணி வைத்துப் பிடித்தவனுடைய நிச்சயம் அந்தக் கிழவனுடைய கண்களில் ஜொலித்தது. தொப்பியைப் பிடுங்கிக்கொண்டு பெரியவன் கன்னத்தில் ஒரு அறை கொடுத்தான்.

'திருட்டுக் கழுதைங்களா.'

மூத்தவன் அழவில்லை, வெட்கத்தால் தலைகுனிந்தான், மேலே விரல் படாதுபோனாலும் வீச்சென்று

குரலெடுத்தான் சின்னவன். தோட்டத்திற்குள் புகுந்து கொள்ளையடிக்க முயன்றதாக அவர்களிருவரையும் மூச்சு விடாமல் வைதுகொண்டிருந்தான் தோட்டக்காரன்.

'இந்தப் பக்கத்திலே காலெட்டி வச்சிங்களா முறிச்சு தொங்கவிட்டுடுவேன்' என்று கூவிக்கொண்டே கிழவன் அவர்களை விரட்டிக்கொண்டு சென்றான். தோட்டத்தின் எல்லையை அடைந்ததும், தொப்பியிலிருந்த காளான் களைத் தன் கூடையில் போட்டுக்கொண்டு குல்லாவை அவர்கள் பக்கமாக விட்டெறிந்தபின் 'லொங்கு லொங்' கென்று வேறு திசை சென்றுவிட்டான்.

சின்னவன் தேம்பித் தேம்பி அழுதுகொண்டே விழுந்த குல்லாயை தரையிலிருந்து எடுத்து அண்ண னிடம் நீட்டினான். அண்ணன் அதை வாங்கிக்கொள்ளா மல் அவனுடைய கன்னத்தில் பளீரென்று அறைந்தான். கிழவன் மேலிருந்த ஆத்திரத்தைக் காட்ட வேறு ஒரு ஆள் கிடைத்தது என்ற நினைப்பில் அவன் அடிக்க வில்லை. தனக்கும் சின்னவன் வந்து தன்னைப் பார்த்துக் கொள்ளுவதா என்ற கோபந்தான். வலியாலும் திக் பிரமையாலும் சின்னவன் இன்னும் உரக்க வீரிட்டழ ஆரம்பித்தான்.

பிறகு மூத்தவன் கண்களும் கலங்கின. அவனும் அழ ஆரம்பித்தான். இருவரும் வாய்விட்டு உரக்க அழுதுகொண்டு நின்றார்கள். சிறிது நேரம் கழித்துக் கண்ணீர்ப் பிரவாக வேகம் குறைந்து நின்றது.

அண்ணே 'தெரியாமச் செஞ்சிட்டேன்' என்றது குழந்தை.

'உம்' என்று ஒப்புக்கொண்டான் மூத்தவன், தன் னுடைய விம்மல்களுக்கிடையில்.

கீழே விழுந்த மண் படிந்த குல்லாயை யெடுத்துத் தன் முழங்காலில் நாலைந்து தடவை தூசி தட்டினான். அதையொரு கையிலும் சின்னவனையொரு கையிலும் பிடித்துக்கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டான்.

வழியெல்லாம் விம்மி விம்மிக் குமுறிக்கொண்டு நடந் தார்கள்.

ஹங்கேரி

# பலி

## [ஜோஸப் நையரு]

மோல்டேவியா நோக்கி நிற்கும் மலைச் சிகரங்களிலே அந்த வருஷத்தில் மந்தைகளுக்குக் கரடிகளால் வெகு தொல்லை ஏற்பட்டு வந்தது. வில்—பொறி வைத்து எல்லாம் முயன்று பார்த்தும் ஒன்றும் பயன்படவில்லை. மேய்ப்பர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. தீப்பந்தம் வைத்துக் கரடிகளின் பேரில் விட்டெறிந்து பார்த்தார்கள்; குண்டு போட்டுக்கூடச் சுட்டுப் பார்த்துவிட்டார்கள். ஜெண்ட்யூர்கி என்ற இடத்தைச் சேர்ந்த டோனிடீர்ஸ் என்பவனுடைய முதுகைக் கரடிகள் பிருண்டிக் கிழித்தது தான் மிச்சம். தன்னுடைய மந்தையில் உள்ள எருது ஒன்றின் மேல் கரடி தாவிப் பாய்ந்தபொழுது கையிலிருந்த கோடறியை டீர்ஸ் விட்டெறிந்தான். அந்த மிருகம் எருதை விட்டு விட்டு டீர்ஸ் மேல் பாய்ந்தது. இனிமேல் காயம் ஆறினாலும் அவனுக்குப் பழைய தெம்பு எங்கிருக்கப் போகிறது?

இது நடந்த பிற்பாடுதான் மேய்ச்சல்காரர்கள் எல்லோரும் இனிமேல் என்ன செய்வது என்பதை ஆலோசிக்க மார்ட்டின் உடுவின் குடிசையில் கூடினார்கள். வருகிற ஞாயிற்றுக்கிழமை, சர்ப்ப விழாக் கொண்டாடிக் கரடிகளுக்குப் பூசை போடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. கிருஸ்துவ சமயம் இங்கெல்லாம் பரவுவதற்கு முன்னர் மிலேச்ச காலத்திலிருந்தே இருந்து வரும் ஒரு விதமான ரத்த பலி, அந்த கிரியைகளும் மந்திரங்களும் உடுவுக்குத் தான் தெரியும். அந்தக் காலத்தில் இருந்த டால்டாஸ் என்ற மிலேச்ச மந்திரவாதிகள் போல, அவனுக்கு மந்திர

வாதம் தெரியும். தீயும் தண்ணீரும் அவன் சொற்படி கேட்கும். அவனுடைய குடிசைக்கு அருகாமையில் வந்து விட்டால், ஓநாய்கள் கூட வாலைக் காலிடை சொருகிக் கொண்டு 'பவ்வியமாக்' நடந்து செல்லும். அவன் ஆயுசு முழுதுமே காடுகளில் கழிந்தது. அந்த மலைச்சாரல் களுக்கு வந்த பொழுது இப்போது பிரம்மாண்டமாக ஓங்கி வளர்ந்து கிளையும் கொப்புமாகப் படர்ந்திருக்கும் மரங்கள் எல்லாம் சிறு சிறு குத்துச் செடிகளாக நின்றன என அவன் சொல்லுவான். அந்தச் சுற்று வட்டாரத்திலே யே அவனை இந்தக் கிழக் கோலத்தில் தவிர வேறு நிலை யில் பார்த்தோர் எவருமே கிடையாது. அன்றிருந்தது போலவே மெலிந்து வரண்டு இருந்து வருகிறுன். அவ னுடைய மனைவி இறந்து போய் எத்தனையோ வருஷங்க ளாயின. அவளும் அவளுக்குப் பிறந்த குழந்தைகளும் அவன் நினைவை விட்டுக் குடியோடி எத்தனையோ நாட்க ளாயின. அவள் செத்ததும் அவன் கையால்தான் என் றும் ஒரு காலத்தில் பேச்சடி பட்டு அதுவும் செத்து மடிந் தது. அந்தக் காரணத்தால்தான் காடேறிப் போனுன் என்றும் அப்போது சொல்லிக் கொண்டார்கள். ஆனல் மந்தைகளை மேய்த்துக்கட்டி வருவதில் எந்த வட்டாரத்தி லுமே அவனுக்கு ஈடு இனிமேல்தான் பிறக்க வேண்டும். சென்ற ஐம்பது வருஷங்களாக, அவனுடைய கவனக் குறைவால் மந்தைக்குச் சேதம் வந்தது என்ற வார்த்தை பிறந்தது கிடையாது.

ஆனல் இந்த வருஷம் அவனையும் ஒரு கரடி ஆட்டம் காட்டியது. ஒற்றை ஒரு நாள் இராத்திரியில் அவன் மந்தையிலே தள தள வென்றிருந்த நான்கு எருதுகளின் கழுத்தைக் கடித்துத் துண்டாக்கி விட்டது அந்த மிரு கம். இந்த 'அநியாயத்தை'க் கண்டதும் கோபாவேசத் தால் அவன் முகத்தில் இரத்தம் பரவி நின்றது. 'உன் ஆட்டமெல்லாம் அந்த மட்டுக்குந்தான்' என்று சபதம் செய்தான்.

இது வெள்ளிக்கிழமை நடந்தது. ஆனல் சனிக்கிழ மைக்குள் மந்தை அவன் கை விட்டு வேறு கை மாறியது. குடிசையிலிருந்த அவனுடைய தட்டு முட்டுகள் வெளியே

எடுத்து எறியப்பட்டு அவன் ஸ்தானத்திற்கு கருந்தடிய ளுக ஒருவனை நியமித்து விட்டார்கள்.

'நீ யாரடா?' என வந்தவனைத் தலை முதல் கால் வரை ஏற இறங்கப் பார்த்து விட்டுக் கேட்டான் கிழவன்.

அந்த மனிதன் வாய்விட்டு உரக்கச் சிரித்துவிட்டு 'என்னை மார்ட்டின் உடுவின் மகன் என்பார்கள்; என் பேர் ஆண்டி' என்ருன்.

கிழவன் திகைப்பூண்டு மிதித்தவனைப் போல நின் ருன்.

'என் மகனு?'

'ஆமாம்'

'என் வயிற்றுக்கு வைரியாக வந்து விட்டாய் என்று மேய்ச்சல் காரர்கள் சொல்லுகிருர்களே, அது நிசமா?'

'இந்த ஐம்பது வருஷமாகத்தான் தின்னுயே அது போதாதா? எங்களைப்பத்தி ஒரு தடவை நினைச்சுப் பார்த் திருப்பியா? எனக்கு மூணு பிள்ளைகள் இருக்குது. அது கள் பட்டினி கிடந்து வாடுவதைப் பார்த்துக் கண்கள் பூத் துப்போச்சு. இப்போ நீதான் கொஞ்சம் பட்டினி கிடந்து அது எப்படியிருக்குது என்று பாரேன்: இல்லாவிட்டா நாசமாப் போயேன். செத்தொழியத்தான் காலம் ஆச்சே.'

மார்ட்டின் உடு பதில் சொல்லவில்லை. அமைதியாக வெளியே சிதறிக் கிடந்த சாமான்களைச் சேகரித்து அரு கில் உள்ள பள்ளத்தாக்கு ஒன்றுக்கு எடுத்துச் சென்று நெட்ட நெடுகலாக வளர்ந்து நின்ற பைன் மரத்தடியில் அவைகளை அடுக்கினுன். பொழுது சாய்கிற நேரமாய் விட்ட படியால் சுள்ளி பொறுக்கி அடுக்கி நெருப்பு மூட்டி ஞன். எல்லாம் முடிந்ததும் தரையில் சாவதானமாக உட்கார்ந்து கொண்டு யோசிக்க ஆரம்பித்தான்.

மற்ற மேய்ச்சல்காரர்கள் மந்தையைக் கொண்டு அடைத்து விட்டுப் பசியைத் தீர்த்துக் கொண்டபின்

நாளைக்கு நடக்க வேண்டிய பலியைப் பற்றி அவனிடம் பேசித் தீர்த்துவிட அங்கு வந்தார்கள். நெருப்பருகே, அசையாது சிலை போல உட்கார்ந்து அனல் விட்டு நிமிரும் தீக் கொழுந்துகளுக்குள் கண்ணைச் சொருகியவன் போல பார்த்து யோசனையிலாழ்ந்திருப்பதைக் கண்டார்கள்; அசைந்தாடும் அனல் ஒளி மயிர் செறிந்தடர்ந்த நெஞ்சில் செக்கச் செவேலென்று கூத்தாடின.

'மாமா உங்களுக்கு இந்த மாதிரி துன்பம் வந்திருப்பதாக கேள்விப்பட்டோம்' என்றார்கள்.

கிழவன் தலையசைத்தான்.

'துன்பந்தான் : அது வரும்என்றுஎனக்கு முன்னமே தெரியும்.'

சுற்றிலும் உட்கார்ந்திருந்தவர்கள் மனசு படக்கு படக்கென்று பறையடித்தது. மந்திர சக்தி அவர்களை அவ்வளவு பயத்துள் ஆழ்த்தியது.

'அவர் சொல்லுவது சரிதான்' என்றான் ஆட்டு மந்தை மேய்க்கும் டேவிட் ரூக். 'ஒரு நாள் நான் வீட்டுக்கு திரும்பரச்சே என்னுடைய நாய்-நான் வளர்த்த நாய்-மனிசன் குரலெடுத்து என்னிடம் பேசிச்சு 'டேவிட் ரூ நீ வீட்டுக்குப் போடா, உன் பெண்டாட்டி செத்து போனா' என்று சொல்லிச்சு ; நான் ஓட்டம் ஓட்டமென்று வீட்டுக்கு ஓடியாந்து பார்த்தான், அது சொன்னப்பிலே, அவ செத்து மடிஞ்சு கெடந்தா' என்றான்.

நெருப்பு மங்க ஆரம்பித்தது. சாயைப் படலம் இருளேற ஆரம்பித்தது. தணலைச் சூழ உட்கார்ந்திருந்தவர்கள் மௌனமாக இருந்தார்கள், கீழே சரிந்து விழுந்த கங்கை எடுத்துப் போடக் கை நீட்டியவன், தன்னருகில் உஸ் என்ற சத்தம் கேட்கத் திடுக்கிட்டுக் கையை இழுத்துக் கொண்டான்.

'பாம்பு' என்று மெதுவாகச் சொன்னான். சூழ அமர்ந்திருந்தவர்கள் நடு நடுங்கினார்கள்.

ஆமாம். அவர்களுக்கு எதிரிலே கல்லெறி தூரத்தில், தன்னுடைய மொண்ணைத் தலையைத் தூக்கிக் கொண்டு

வழ வழவென்று நிலா வெளிச்சத்தில் நெளிந்தது அந்தப் பாம்பு. கிழட்டு மார்ட்டின் அதன் திசையில் திரும்பினுன். ஒரு கணம் மனிதனும் பாம்பும் வைத்த கண் மாற்ருமல் ஒருவரை யொருவர் பார்த்திருந்தனர். பிறகு அந்தப் பாம்பு 'உஸ்' என்ற சப்தத்துடன் தலையை இழுத்துக் கொண்டு மறைந்தது.

கிழவனுடைய தலை நெஞ்சில் படிந்து தொங்கியது. நாள் முழுவதும் இம்மாதிரி பல உற்பாதங்கள் தோற்றிக் கொண்டிருந்தன. மந்தை வெறித்துக் கொண்டு நாலா திசைகளிலும் கலைந்து ஓடியது. ஸ்வாலோக் குருவிகள் வானத்து உச்சியிலே கிறீச்சிட்டுக் கொண்டு காற்ருேடு மல்லாடிப் பறந்தன. அதிசயமான மிருகங்கள் தம் குகைகளை விட்டு வெளியேறிச் சஞ்சரித்தன. மரங்கள் காற்றில் அழுதன: உயர் சிகரக் கோடுகள் தம்முள் மறைந்து கிடக்கும் அபாயங்கள் எல்லாவற்றையும் வெளிக் காட்டிப் பய முறுத்தின.

'அதற்கு அர்த்தம் மரணம்' என்ருன் கிழவன் நெருப்புக்குள் பார்த்துக் கொண்டே,

'ஆமாம் ஆமாம்' என்ருர்கள் மற்ற மேய்ச்சல்காரர்கள். தலையைத் தூக்கி ஏறெடுத்துப் பார்க்க ஒருவருக்காவது தைரியமில்லை. யாருடைய பார்வை கிழவன் கண்ணில் விழுகிறதோ அவனுக்குத்தான் கெடுவு என்பது அவர்களுக்குத் தெரியும்.

சாவு.................

அந்தச் சமயத்திலே மந்தைக்குக் காவல் நின்ற நாய் ஓலமிட்டு அழுதது.

'அது பேய்க் கனவு காணுகிறது' என்ருன் ஒரு வாலிபன் அறியாமையால்.

'பேய்க் கனவா? ஒனக்கு ரொம்பத் தெரியுண்டா என்ருர்கள் மற்றவர்கள்.

'ஒரு வேளை டோனி டீர்ஸ் தான் செத்துப் போனுளோ என்னமோ? நாய் தெரிந்து கொண்டு ஓலமிடுகிறது' என்ருன் வேருெருவன்.

'அப்படி யிருந்தால் தான் தேவலியே' என்றான் மற்றொருவன்.

அது அப்படியானால் மரணத்தின் கண்ணி அவர்கள் மீது விழுந்து விடாது.

கிழவன் இல்லை என்பது போலத் தலையசைத்து விட்டு, 'எனக்காகத்தான் அந்த நாய் அழுகிறது' என்றான்.

மனதில் ஏற்பட்ட ஆறுதலை வெளிக் காட்டிக் கொள்ளாமலிருக்க அவர்கள் ரொம்பவும் சிரமப்பட்டார்கள். அவனுடைய வார்த்தையைச் சந்தேகிப்பது போல பாசாங்கு செய்தார்கள். 'யாரிடம் இந்த வார்த்தை. மார்ட்டின் உடுவைச் சாவு வந்து இழுத்துக்கொண்டு போவதா? அதற்கு அந்த சக்தி ஏது?' அது நிச்சயந்தானா என்பதைத் தெரிந்து கொள்ள டேவிட் சாலக்காக வலை வீசினான்.

'மாமா உங்களைப் போல ஆயுசோட இருப்பேன் என்று எனக்கு நிச்சயமாகத் தெரிந்தால்' என்றான்.

'அத்தனை காலம் உன்னால் வாழ முடியாது போனால் நீ நாளைக்கு காலம்பர ஆட்டுக்கிடாவுலே பால் கறப்பே' என்றான். ஆட்டுக்கிடா நரக லோகாதிபதியான சாத்தானுக்கு உருவகம்.

'நீ செத்துப் போவே என்பது எப்படி நிச்சயம்?' என்று கேட்க ஆட்டிடையன் துணிவு கொண்டான்.

'எனக்குத் தெரியும்' என்று உறுமினான் கிழவன்.

இந்த வார்த்தைகள் அவர்களுடைய உள்ளத்தைக் கிளறி பயமூட்டியது, ஆனால் இனிமேலும்சந்தேகப்பட்டுக் கொண்டிருக்க அவர்கள துணிவு கொள்ள வில்லை.

'என்ன கஷ்டம், என்ன கஷ்டம்' என்று சொல்லிக் கொண்டு தலையைச் சொறிந்தான் ஆட்டிடையன். நீ இல்லாமல் நாங்கள் எப்படிப் பலி கொடுப்போம்?'

'ஆமாம் பலி பூஜை?' என்று அலறினார்கள் இதரர்கள். பயம் அவர்களுடைய குரல் வளையில் தாண்டவம் நடத்தியது. அதைச் செய்யாமலிருப்பது எப்படி?

'நீங்கள் இல்லாவிட்டா மாமா எங்களுக்கு என்ன செய்யத் தெரியும். கழுத்தில் கயிற்றைக் கட்டிக்கொண்டு தொங்க வேண்டியதுதான்.'

கிழவன் கைப்புடன் சிரித்தான்: யாருக்கு எது செய்ய முடியும் என்பது அங்கீகரிக்கப்படுவதே இனிப்பாகத் தான் இருக்கும்.

'நீங்கள் பயப்பட வேண்டாம்: பலி நடந்தே தீரும்'

அவன் சொன்ன மாதிரி அவ்வளவு அபூர்வமாக இருந்ததினால் அவன் வார்த்தையை மதிக்க அவர்கள் விரும்பவில்லை. உள்ளத்தில் கோபம் கொதித்தது. சாகப் போகிறேன் என்று சம்பிரதாயமாகப் பேசுவதெல் லாம் நடுவாந்தரத்தில் விட்டு விட்டா போய் விடுவது?

'ஞானம் படைத்தவர்கள் தங்களுக்குத் தெரிந்ததை தங்களுடன் கல்லறைக்குழிக்குள் புதைத்துக் கொள்ளக் கூடாது' என்றான் ஆட்டிடையன் அர்த்த புஷ்டியுடன்.

கிழவனிடமிருந்து இரகசியத்தை பகிர்ந்து கொள்ள முடியுமா என பெருவேட்கையுடன் பார்வை தாவின.

'நாளை காத்தாலைக்கு உங்கள் எல்லோருக்கும் அது காட்டப்படும்' என்றான் கிழவன். குரலில் கேலி கலந்திருந் தது.

'அதுவும் நல்லதுதான்' என்றார்கள். அவர்கள் ஆத் திரம் தணிந்தது. தத்தம் தடியையும் கோடறியையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். இரவு நெடு நேர மாகி விட்டது. கொஞ்சமாவது உடலைக் கிடத்த வேண்டாமா?

'எந்த இடத்தில் பலிக்கு விறகு அடுக்கியிருக்கிறீர் கள்?' என்று கேட்டான் கிழவன்.

'வழக்கம் போல்தான், குழிக்கல்லுக்கிட்டெ' என்றார்கள்.

'போய் வருகிறேன்' என விடை பெற்றுக் கொண்டு இருளில் இருளோடு இருளாகக் கறைந்து போனார்கள்: நிசாசர கணங்கள் மாதிரி.

கிழவன் தணலைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந் திருந்தான். மகன் நினைப்பு வந்தது. அதோடு குடும்ப ஞாபகமும் படர்ந்தது. எத்தனை குழந்தைகள் என்பதை விரல் மடக்கி எண்ண முயன்றான். 'அமாலி......... சின்ன ஸ்டிபன்......மார்ட்டின்......வீரா......சிச்சி அது தப்பு......ஜோப்பாவை கணக்கிலே சேக்கலியே.

ஒருமகன அவன் வயிற்றுக்கு வைரியாக முளைத் தான்......அவனுடைய சதையும் ரத்தமுமே அவனுக்குப் பகை.........

'அவன் இப்போ என்ன செய்கிறானோ' என்று மனசு உலாவியது. அடுத்த பள்ளத் தாக்கை நோக்கிக் கண்கள் சஞ்சரித்தன. 'போய்ப் பார்க்கிறேன்'.

புதிய உணர்ச்சி ஒன்று ஜீவத் துடிப்புடன் அவ னிடை கனிவுடன் ததும்பிப் பாய்ந்தது.

'பையன் செத்தது சரிதான்' என மகனுக்காகப் பரிந்து கொண்டான். 'மூனு குழந்தைகள், கடவுள் கட்டின மண்ணில், தனக்கென்று ஒன்றும் கிடையாது. சுரண்டிப்போட்ட வால்நட் ஓடுகூட அவனுக்கு என்னிட மிருந்து கிடைத்தது கிடையாது. அவன் சொன்னது சரிதான். இந்தச் சாப்பாடு அவனுக்குத்தான் சொந்தம். எனக்குச் சாவுதான் சொந்தம்.'

கையில் கோடறி எடுத்துக்கொண்டு தடமாடித் தட மாடி, மகன் படுத்துறங்கிய அடுத்த பள்ளத்தாக்குக்குச் சென்றான். அவனுடைய நாய்கள் வாலைக் குழைத்துக் கொண்டு ஓடி வந்தன. பிறகு வேகமாக மந்தைக் காவ லுக்கு ஓடிவிட்டன. தூரத்திலே, பள்ளத் தாக்கிலே மங்கலாக மந்தை படுத்துக்கிடந்தது தெரிந்தது. அதை விட்டுப் பிரிவதென்றால் மனதில் உளைச்சல் எடுத்தது. வேறு வழியில்லாதபோது.........

மெதுவாகக் குடிசைக்குள் புகுந்தான். மார்ட்டி னுடைய கட்டிலில் மகன் நீட்டிப் படுத்துக்கிடந்து உறங்கி னன். தூங்கும் தலையை ஒரே வெட்டில் தறித்துச் சாய்த்து விடும்படி தீமையின் தேவன் தூண்டினன்.

'அவனுக்கு மூணு குழந்தைகள்' என்ற நினைப்பு அவனுடைய மனதின் அடிவானத்தில் மின்னியது.

'என்னுடைய பேரன் பேத்திகள்' என்று சொல்லிக் கொண்டான். உள்ளுக்குள் மனம் பூரித்தது, மனம் மனிதத் தன்மை கொண்டு விம்மியது. குனிந்து தூங்கியவன் முகத்தில் உதடுகளைச் சேர்த்தினன்.

'இதையாவது அவர்களுக்குக்கொடு' என்று மெதுவாகச் சொன்ஞன்.

உறங்கியவன் விழிக்கவில்லை. முகத்தில் படர்ந்திருந்த துன்பக்களை போன்ற அசைவுகள் அகன்றன. மூச்சு அமைதி கண்டது.

மனதிலிருந்த சுமை இறங்கியது மாதிரி மார்ட்டின் உடு நிம்மதி கொண்டான். வழி சொல்லிக் கொள்ளுவது போல மற்றும் ஒரு முறை குடிசையில் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டான். பிறகு வெளியே வந்தான். கடைசித் தடவையாக மந்தையைக் கணக்கெடுத்தான். அவன் ஜீவியத்திலேயே முதல் முதலாக அவன் கண்களில் பொட்டு ஜலம் தெறித்தது. ஆனல் வெகு வேகமாகத திரும்பினன். நேரம் இறகு கட்டிப் பறப்பதால் அவன் வேகமாகச் செல்ல வேண்டும். ஏற்கனவே பனியுண்ட நட்சத்திரங்கள் உறங்கி வழிந்தன.

தான் மூட்டிய தணலருகில் வந்தான்: தோல் வாரில் செய்த சாட்டையை இடுப்பில் வரிந்து சுற்றிக் கட்டிக் கொண்டு, வெளிச்சத்திற்காக தணலிலிருந்து ஒரு கொள்ளியை எடுத்துக் கொண்டு, அதை மலைக்கு மேலே உயரப் பிடித்து ஏந்திய வண்ணம் 'இதோ புறப்பட்டாச்சு' என்ருன்.

குழிக்கல்லுக்குப் போகும் வழி மாட்டடித் தடந்தான். நெட்ட நெடுகலாக, செங்குத்தாகச் செல்லும் பாதை அது. எப்படியோ உச்சியை அடைந்தான். உச்சியில் புல் அடர்ந்த மைதான வெளி. சூழவும் அடர்ந்த கானகம். மைதான மத்தியில் ஏதோ இருண்டு அம்பாரமாகக் கிடந்

தது. மேய்ப்பர்கள் அடுக்கி வைத்துள்ள விறகுக் குவியல்தான் அது. மறுநாள் பலியிடுவதற்காக அவர்கள் ஆசையுடன் சேகரித்து வைத்த விறகு. இந்தக் கானகங்களில் அழிந்து மடியாமல் காப்பாற்றப்பட்டு வரும் இந்த மந்திரக் கிரியையில் ஈடு படுகிறவர்கள் இரகசியத்தை வெளி விடவே கூடாது என்று பிரமாணம் செய்து கொடுத்தவர்களே யாகும்.

விறகுக் குவியலைச் சுற்றி சுற்றி வந்து கவனமாகப் பார்த்து விட்டு, 'நல்லாத்தான் செய்திருக்கிறார்கள்' என்று சொல்லிக்கொண்டான் மார்ட்டின் உடூ.

கானகம் உறங்கியது. ஆனால் கீழ்த்திசை வானத்தில் வெள்ளை படர்ந்து உதயத்தின் வரவுக்குக் கட்டியம் கூறியது. பகலுக்காகக் காத்திருக்கக் கூடாது என்று மார்ட்டின் உள்ளூர உணர்ந்தான்.

'பகல் பலத்தை வாங்கி விடுகிறது' என்று நினைத்தான்.

குத்துச் செடிகளினடியில் கிடந்த சருகுகளையும் குச்சிகளையும் வாரிக் கொணர்ந்து சேர்த்து விறகுக்குவியலடியில் போட்டு அதில் நெருப்பு மூட்டினான். புகை, அடுக்கிய விறகிடையில் வெளி வந்தது. அழல் குதித்தெழுந்து அடிக் கட்டையில் பற்றியது.

'அந்த வேலை முடிந்தது' என்று மனத் திருப்தியுடன் சொல்லிக் கொண்டான். எந்த இடத்தில் பற்றி ஏற வழியிருக்கிறது என்று விறகுக் குவியலை ஆராய்ந்து கவனித்தான்.

இரண்டு முறை கால் தவறக் கீழே வழுக்கினான். ஆனால் மூன்றாவது தடவை விறகுக் குவியல் உச்சிக்கு ஏற முடிந்தது.

பல நிமிஷங்கள் அவன் அதன் மீது அசைவற்று நின்றான். செறிந்த தலை மயிரில் பனி முத்துக் கோத்தது. பிறகு குனிந்து தான் கொண்டு வந்திருந்த தோல் வாரி

ஞல், தன் கால்களை இறுகச் சேர்த்து வரிய வரியக்கட்டிக் கொண்டான். நிமிர்ந்தெழும் புகை அவன் உருவத்தை மறைத்தது.

'இந்த லோகத்தை நான் கண்டதெல்லாம் போதும்' என்று கண்களை மூடிக்கொண்டு சொன்னான்.

அவன் தீரன், பிடிவாதம் கொண்டவன்: இருந்தும் தன் சதைக்கு ஏற்படவிருப்பதை நினைக்க மனம் வெருண்டது. சீக்கிரம் காரியம் நடந்துவிட்டால் தேவலை என்று ஆசைப்பட்டான்.

'நெருப்பே நீ சீக்கிரம் உன் வேலையை முடி' என்று கத்தினான்.

ஆனால் நெருப்பு அவனைப் போல அவசரப்படவில்லை. திக்கொழுந்து அடிக்கட்டுகளுக்கு மேல் தாவவில்லை. ஆனால் அதன் வெதுப்பு அவனிடம் ஒரு வித மயக்கத்தை ஏற்படுத்தியது. கடைசி மந்திரத்தை உச்சாரணம் செய்யுங் காலம் வந்து விட்டது என்பதை உணர்ந்தான்.

அதிசயமான, புராதனமான வார்த்தைகளை அவன் வாய் கொட்டிற்று:

'அக்னி பவித்திரமான அக்னி: சகல வஸ்துக்களையும் உண்டு பசி தீரும் அக்னி. எனக்கு முன்னால் போ. எனக்கு வழி காட்டு: வானத்தை நோக்கிக் குரல் கொடு: எட்டாத வானத்தை நோக்கிக்கூப்பிடு:கடவுளைக் கூப்பிடு: கடவுளைக் கூப்பிட்டு அவரது பட்சியை அனுப்பச் சொல்: என்னை அவரிடம் அழைத்துச் செல்ல அவருடைய பட்சியை அனுப்பட்டும்: அதன் சிறகின் அரவணைப்பிலே என்னை அவரிடம் அழைத்துச் செல்லட்டும்.'

விறகின் வெடிப்பும் நெருப்பின் குமுறலும் அவன் குரலை அமுக்கியது. நிமிர்ந்த வாக்கில், இயற்கைக்கு மாறாக நெட்டை நெட்டென்று மண்டிச் சுருளும் புகைகளினூடே அவனுடைய உருவம் தெரிந்தது. தழல் மேலேறி வளர்ந்து அவனை நோக்கி ஊர்ந்து வந்தது, இன்னும் அவை அவனைத் தொடவில்லை. ஆனால் கழுத்

தளவு படர்ந்து மூடியிருந்த அவனுடைய தலை மயிரைக் கருக்கி மேலோங்கிச் சுருள வைத்தது. கண் குழியில் வெள்ளை விழி மட்டும்தான் தெரிந்தது. இவனுடைய கைகள் காற்றில் சிறகடித்தன. அவன் வாய் அகன்று திறந்திருந்தது. வானலோகத்தில் அவனுடைய குரல் எங்கோ ஓலம் கேட்டது. அக்னிச் சர்ப்பங்கள் விறகுக் கட்டுக்களுக்கிடையிலே தாவிப் பாய்ந்தபோது, அவனுடைய வீங்கிய நாக்கு வெடித்து இரத்தத்தைத் தெறித்தது. அவன் பக்கவாட்டாகச் சிதையில் சரிந்தான்.

மந்தை தான் முதலில் நெருப்பைக் கண்டது. அவற்றிடை கல்வரம் கிளம்ப வேலியை உடைத்துக்கொண்டு வெளியேற முயன்றன.

முதல் ஆள் விழித்துக்கொண்டபோது வானமே செங்கோளமாக தழல் விட்டது. அவசர அவசரமாகக் குழலெடுத்தூதினான். "மலையில் நெருப்புப் பத்திக்கிச்சு" என்று கூப்பாடு போட்டான்.

அவன் சொல்லி ஆகவேண்டியதொன்றுமில்லை. அவர்களுடைய கண்களுக்கே தெரிந்தது. கோடறியை எடுத்துக்கொண்டு நெருப்புப் பற்றியுள்ள இடம் நோக்கி ஓடினார்கள்.

அவர்கள் அங்கு வந்தபோது சிதை அக்னி மயமாக இருந்தது. அக்னிக் கொழுந்தின் மத்தியிலே கிழட்டு மார்ட்டின் உடுவின் கரிக்கட்டையான உடலம் கிடந்தது.

"பலி; உலகம் இதற்கு முன்னால் கண்டிராத பலி" என்று சொல்லிக் கொண்டார்கள்.

கருகிப்போன சவத்தை இமை கொட்டாமல் வெகு நேரம் பார்த்து நின்றார்கள். அது சற்றும் உருக்குலையாமல் இருந்தது.

"செத்தும் சாவைக் கேலி செய்து நிற்கிறான் பார் அவன் தான் உண்மையான டால்ட்டாஸ்" என்றார்கள்.

"அவரைப்போல இனிமேல் யார் வரப்போரா?" என்றான் டேவிட் துயரத்தோடு.

புதிய மேய்ப்பனை ஆண்டி உடுதான் கடைசியாக் அங்கு வந்து சேர்ந்தவன். அவன் தூரத்தில் வருவதைக் கண்டதுமே கோடறியை இறுக்கிப் பிடித்துக்கொண்டு தயாரானார்கள்.

'சீக்கிரம் வா, உன்னுடைய ரொட்டி இங்கே சுட்டு வைத்திருக்கிறது வா' என்று உறுமினார்கள்.

பயந்து போய் 'அது என் தப்பல்ல' என்று அலறினான் அவன்.

'அவனையும் தூக்கி நெருப்பில் போட்டு விடுவோம்' என்றான் ஒருவன்.

கும்பல் அவனைப் பயமுறுத்திக் கொண்டு நெருங்கியது. ஆனால் அவன் கலங்கிப் பின்வாங்கவில்லை. நெருப்பிடையில் கருகிக் கிடந்த உடம்பைக் கண்டு வெருண்டு ஸ்தம்பித்து நின்றான்.

'அப்பா' என்று வாய் விட்டு அலறினான்.

குரல் பயங்கரமானது. யாவரும் வெருண்டு விலகினார்கள். நெருப்பினிடையிருந்த உடலம் குரலைச் செவியுற்றது போலச் சிறிது குவிந்து உதடற்ற சிரிப்புச் சிரித்த மாதிரி இருந்தது.

'கிழவன் சாப்பாட்டைப் பறிக்க எப்படி உனக்கு மனம் வந்தது' என்று தாக்க ஆரம்பித்தார்கள் மேய்ப்பர்கள்.

கண்கள் கலங்க அவன் அவர்களை நோக்கினான்.

'என் மூனு குழந்தைகளும் பட்டினி கிடந்து வாடுகின்றன' என்றான்.

'அவர்களுக்காகத்தான் அவர் அதைச் செய்தார்' என்று ஆண்டி நெருப்பைச் சுட்டிக் காட்டினான்.

மேய்ப்பர்கள் பதில் எதுவும் சொல்லவில்லை. ஆட்டிடையன் டேவிட்டுக்குத்தான் வார்த்தை வந்தது.

'ஒருவன் சாப்பிடுவது என்றால் இன்னொருவன் பட்டினி: உயிர் வாழ எல்லா ஜீவன்களும் கொன்று காண்டுதான் இருக்கவேண்டும். அது அப்படித்தான்,

அதற்கென்ன செய்யலாம். வீட்டுக்குத் திரும்புவோம் வாருங்க.'

ஒவ்வொருவராக மேய்ப்பர்கள் பதுங்கினார்கள். மாட்டை ஓட்டிப் போக வேண்டாமா? காலம்பரப் பசியாறத் திக்கிட நேரமாச்சே.

ருஷ்யா

# இந்தப் பல் விவகாரம்

## [மைக்கேல் ஜோஷெங்கோ]

எங்கள் சகா எகோரிச்சுக்குப் பல், தொந்திரவு கொடுத்து வந்தது. என்ன காரணத்தினலோ விழ ஆரம்பித்தது.

காலம் என்ற ஒன்று இருக்கே அதற்கும் இந்த விவ காரத்துக்கும் சம்பந்தமிருக்கலாம். வருஷங்களும் ஓடி-மடிகின்றன. மனுஷ சரீரமும் நைந்துபோக ஆரம்பிக் கிறது. எலும்புகளும் ஒடிய ஆரம்பிக்கின்றன. பல்லுக் கும் அந்தக் கதி தானே!

சுருக்கமாகச் சொல்லப்போனல், ஐவான் எகோரிச் ஸாசகெவ் பற்களை ஒவ்வொன்ருக இழக்க ஆரம்பித்தார். இவர் எங்களோடு வந்து வசிக்க ஆரம்பித்து சுமார் ஒரு வருஷ காலமிருக்கும்.

பேச்சு முற்றியபோது அவருடைய பற்களில் ஒன்று வெளியேறவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பது வாஸ் தவந்தான். ஆனல் மற்றவை யெல்லாம் சுய இஷ்டத் தின்பேரிலேயே வெளியேற ஆரம்பித்தன. அவை 'சம்ப வங்களுக்காக'க் காத்திருக்கவில்லை. அடை சுவைக்கும் போது அவ்வ ஒடிந்து விழுந்தன. சம்பள விகிதம்பற்றி அவர் பேசிக்கொண்டிருந்தபோது சில நொறுங்கின; அல்லது யாருமே இல்லாத சமயத்திலும் அவை வெளி யேறின. மிகவும் ஆச்சரியப்படத்தக்கதுதான். சொற்ப காலத்தில் அவர் ஆறு பற்களை இழந்தார்.

ஆனல் எங்கள் எகோரிச் இதைக் கண்டு கவலை கொள்ளவில்லை. பொக்கை வாய்ப் பயம் அவருக்குக்

கிடையாது. அவர் இன்ஷூர் செய்துகொண்டிருந்தார். அவருக்குத் தேவையான சமயத்தில் வேறு பல் ஒரு ஸெட் வந்து சேரும். அதை நினைக்க நினைக்க அவருக்கு ஆனந்தம் குதி போட்டது.

"பல் விவகாரத்திலே நமக்குக் கஞ்சத்தனமே கிடையாது. யாரும் பல்லைத் தட்டவந்தால் எனக்கு அதை இழக்க எப்போதும் சம்மதந்தான். எந்தப் பயலும் அடிக்க வந்தால் மூக்கிலோ மூஞ்சியிலோ குத்துவிட அனுமதிப்பதில்லை. ஆனால் இந்தப் பல் விவகாரம் வேறே. அதைப்பற்றிக் கவலையே கிடையாது. எங்களைப்போல இன்ஷூர் செய்துகொண்டவர்களுக்கெல்லாம் ஆபத்தே கிடையாது" என்று எகோரிச் தம்முடைய கொள்கையை சாயனம் செய்துகொண்டிருப்பது வழக்கம்.

பல் ஆறு போனதும், மூலாதார ரிப்பேருக்காக ஏற்பாடு பண்ணுவது என்று தீர்மானித்தார். இன்ஷ்யூரன்ஸ் கடுதாசிகளை எடுத்துக்கொண்டு ராஜாங்கப் பல் ஆஸ்பத்திரிக்கு நடையை நீட்டினார்.

பல் ஆஸ்பத்திரியிலே அவரைப் பார்க்கச் சந்தோஷம் என்றார்கள். "ஒரு ஸெட் செய்து கொடுக்கத் தயார்தான். உங்களுக்கு எத்தனை பல் போச்சு. அடாடா...குறைந்த பட்சம் எட்டுப் பல் போனால்தான் செய்து கொடுக்க வேண்டும் என்பது எங்களுக்குச் சட்டம். உமக்கு அதை விட ஜாஸ்தி போயிருந்தால் உம்முடைய அதிர்ஷ்டம். எங்கள் துரதிர்ஷ்டம். எட்டுக்கும் குறைந்திருந்தால் எங்களால் உமக்கு எதுவும் செய்து தருவதற்குச் சாத்தியப்படாது. சில்லறை வேலைகளை வைத்துக்கொண்டு நேரத்தை வீண்படுத்த ஆஸ்பத்திரியால் முடியாது. இன்ஷூரன்ஸ் சம்பந்தமான சட்டம் எல்லாம் அந்தப்படிதான்."

"எனக்கு ஆறு பல் போச்சு" என்றார் எகோரிச்.

"காம்ரேட், என்ன செய்யலாம். ரொம்ப வருத்தமாகத்தான் இருக்கு, நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லையே. எட்டு விழுகிறவரை நீர் காத்திருக்கவேண்டியதுதான்" என்றார்கள்.

எகோரிச்சுக்கு ரொம்பக் கோபம் வந்தது.

"நான் சுத்தியை வைத்துப் பல்லைத் தட்டிக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறீர்களா? உங்கள் அர்த்தந்தான் என்ன?"

"நீர் பல்லைக் கில்லைத் தட்டிக்கொண்டிருக்கவேண்டுவதில்லை. இயற்கையின்போக்கில் நீர் தலையிடலாமா? நீர் காத்திருக்கவேண்டும், அதிர்ஷ்டமிருந்தால் இரண்டு மூன்று தானே விழுந்துவிடக்கூடும்."

ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வீட்டுக்கு வரும்போது எகோரிச் மனம் நிலைகொள்ளவில்லை. இந்தப் பல் விவகாரத்தில் அவ்வளவு நிச்சயமிருந்தது அவருக்கு. ஆனால் இப்பொழுது பார்க்கப்போனால் எல்லாம் ஏகக்குளறுபடியான சிக்கலாகக் கிடக்கிறது.

இந்த அதிர்ஷ்ட குந்தகமான அந்தப் பற்கள் விழும் வரை காத்திருப்பது என்று தீர்மானித்து மனதைச் சாந்தப்படுத்திக்கொண்டார்.

ஒன்று வெகு சீக்கிரத்தில் விழுந்தது. இன்னொரு பல்லுடன் எகோரிச் கொஞ்சகாலம்......தச்சனுடைய அரத்தை வைத்துப பல்லுக்கு மெருகு கொடுக்க முயன்றார். அது ஆட்டம் கொடுத்து ஈறைவிட்டு வெளியே கழன்று விழுந்தது.

எகோரிச் கால்கொண்ட வேகத்தில் ஆஸ்பத்திரிக்கு ஓடினார்.

"இப்பொழுது—சட்டப்படி எட்டுப் பல் விழுந்தாச்சு" என்று அறிவித்தார்.

"ரொம்ப நல்லது. வேலையை இனிமேல் ஆரம்பிப்போம். இந்த எட்டுப் பல்லும் ஒரே இடத்தில் விழுந்திருக்கிறதா எப்படி? எட்டுப் பல்லும் ஒரே வரிசையில் விழுந்திருக்க் வேண்டும் என்பது எங்கள் சட்டம். ஒரே வரிசையில் இல்லாவிட்டால் எங்களால் ஒன்றும் செய்ய இயலாது. இங்கொன்றும் அங்கொன்றுமாக விழுந்திருக்

கும் பற்களைப்பற்றிக் கவனிக்க முடியாது. உமக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறோம். திக்காலுக்கு ஒன்ருக விழுந்திருந்தால் உம்மால் இன்றும் சுவைத்துச் சாப்பிட முடியு''மென்ருர்கள்.

"அவை ஒரே இடத்திலிருந்து விழவில்லை" என்ருர் எகோரிச்.

"அப்படியா? ரொம்ப வருத்தப்படுகிறோம். நாங்கள் எதுவும் செய்வதற்கில்லை."

இதற்கு என்ன பதில் சொல்லுவது என்று எகோரிச்சுக்குப் புரியவில்லை. மீந்து நின்ற பல்லை நெற நெறவென்று கடித்துக்கொண்டு ஆஸ்பத்திரியைவிட்டு வெளியே வந்தார்.

எதிர்பாராதவிதமாய் எப்படி வந்து முடிந்துவிட்டது? இனிமேல் நமக்கென்ன கவலை என்ற நம்பிக்கையில் நிம்மதியாக ஜீவித்து வந்தார். ஆனல் இப்பொழுது நம்பிக்கை யெல்லாம் நாசமாய்ப் போச்சு.

அன்றிலிருந்து எகோரிச் ஜீவியமே மாறியது. இப்பொழுது ரொம்பவும் அமரிக்கையாகக் காலத்தைக் கழிக்கிருர். திரவ பானமாகத்தான் ஆகாரம். தினசரி மூன்று முறை பல் விளக்க ஆரம்பித்துவிட்டார்.

இந்தமாதிரியில் பல் ஆஸ்பத்திரிச் சட்டம் ஒரு நல்ல காரியத்தைச் செய்தது!

[library stamp, illegible]

# புதுமைப்பித்தன் எழுதியவை

**பிரேத மனிதன்** 1—0—0

விஞ்ஞானம் வெகுவாக முன்னேறி வருகிறது. அம் முன்னேற்றத்திலே ஒன்று இறந்தவர்களை உயிர்ப்பிப்பது. அதையும் தாண்டிப் புது மனிதனையே உற்பத்தி செய்ய முயலுகிருன் ஒரு விஞ்ஞானி. முயற்சியில் வெற்றியும் பெறுகிருன். அதன் விளைவு.........? மயிர்க் கூச்செறியும் கற்பனை. மேரி ஷெல்லி எழுதியது. புதுமைப் பித்தனுக்கென்றே உரிய தமிழில் கதை செல்கிறது.

**பளிங்குச் சிலை** 1—0—0

தீவிரமான இலக்கிய முன்னேற்றமடைந்த நாடுகளில் சோவியத் ருஷ்யா மிகக் குறிப்பிட வேண்டிய ஒரு நாடு. அந்நாட்டின் சிறந்த சிறு கதை ஆசிரியர்களிற் சிலருடைய கதைகள் இதில் தமிழாக்கித் தரப்பட்டுள்ளன. சிந்தனைக்கும் கற்பனைக்கும் ஊற்று போன்ற கதைகள்.

STAR PUBLICATIONS
Triplicane :: Madras—5.